
கடலில்
கலந்த
மழைத்துளி
விஜி பிரபு

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| உனைத்தேன் என நான் நினைத்தேன் | 90.00 |
| என் நெஞ்சம் உன் தஞ்சம் | 80.00 |
| ஒரு நாள் ஒரு கனவு | 80.00 |
| பக்கம் வரத் துடித்தேன் | 80.00 |
| சிப்பியில் வந்த முத்து | 90.00 |
| உனக்கெனவே... உலகினிலே... பிறந்தவளே! | 90.00 |

# கடலில் கலந்த மழைத்துளி...

## 1

"ஐயா நாராயணா... நீயே கதியய்யா..."

பெருமாளின் சந்நிதியில் கைகூப்பி நின்றிருந்த பட்டம்மாவின் முன்னால் கற்பூரத்தட்டை நீட்டினார் ஐயர். என்னைச் சரணடைந்தோருக்கு நானே எல்லாமாக இருந்து காப்பாற்றுவேன் என்ற புன்னகையுடன் தன் பாதங்களை நோக்கிக் கைகாட்டிச் சிரித்துக் கொண்டிருந்த பெருமாளை மனம் நிறையத் தரிசித்தவாறே கற்பூர ஆரத்தியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பட்டம்மா.

"என்னங்கம்மா... ஐயாவுக்கு இப்ப உடம்புக்கு பரவாயில்லையா?" கவலை கலந்த ஆதூரத்துடன் கேட்ட ஐயரை நிமிர்ந்து பார்த்தாள் பட்டம்மா.

அவளது முகத்திலும் கண்களிலும் தெரிந்த சோகம் ஐயரின் இதயத்தைப் பிசைந்தது.

ஊருக்கே பெரிய மனிதரான ஏகாம்பரத்தின் மனைவி பட்டம்மா. ஊரின் நல்லது கெட்டது அனைத்திற்கும் முன் நின்று அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஏகாம்பரத்தின் மனமறிந்த குணவதியாக அவரது அனைத்துச் செயல்களுக்கும் முன்னேற்றத்திற்கும் துணையாக தூண்டுகோலாக இருந்தவள் அவள்.

கண்ணூரை சொந்தமாகக் கொண்ட பரம்பரைப் பணக்காரர் ஏகாம்பரம். அவரது மனைவியாக அவர் வீட்டிற்குள் பட்டம்மா காலடி எடுத்து வைத்த நல்ல நேரமோ அல்லது பட்டம்மாவின் புத்திசாலித்தனமான தூண்டுதலினாலோ ஏகாம்பரம் அவரது பரம்பரைப் பணக்கார அந்தஸ்தில் இருந்து விடுபட்டு ஒரு தொழில் அதிபராக முன்னேறத் தொடங்கினார்.

தொழிற்சாலைகளும், தொழில்களும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த காலத்தில் அவர் தொடங்கிய நூற்பாலை பன்மடங்கு வருமானத்துடன் விரிந்து படர்ந்த ஆலையாக விரைவிலேயே முன்னேற்றம் அடைந்துவிட்டதில் ஆச்சரியம் இல்லை.

கட்டுப்பெட்டியாக வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்காமல் பட்டம்மாவும் கணவருடன் இணைந்து தொழிலை ஆர்வத்துடன் கவனித்துக் கொள்ள ஏகாம்



பரம் மேலும் மேலும் செல்வாக்குடன் முன்னேறத் தொடங்கினார்.

ஆஸ்திக்கு ஒரு ஆண் யோகநாதனும் அழகிற்கு ஒரு பெண்ணாக மோகனாவும் பிறந்தவுடன் ஏகாம்பரம் பட்டம்மாவை குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்புடன் வீட்டில் இருக்கச் செய்துவிட்டு தான் மட்டும் தனியாகத் தொழிலைக் கவனித்துக் கொள்ள ஆரம்பித்தார். ஆனால் இரு கை தட்டியபோது வரும் ஓசையை விட ஒரு கை ஓசை தந்துவிடாது என்பதற்கிணங்க கணவன் மனைவி இருவரும் இணைந்திருந்து நடத்தியபோது கண்ட முன்னேற்றம் அவர் மட்டும் தனியாக தொழிலை நடத்தத் தொடங்கியவுடன் தடைபட்டு நின்று விட்டது.

பட்டம்மாவின் துணையால்தான் தன்னுடைய தொழில் பெருகியது என்ற உண்மையை ஒத்துக்கொள்ள மனமில்லாத ஏகாம்பரம் அவரை அடைந்த முன்னேற்றமே போதும் என்ற மனநிலையுடன் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணமற்று இருந்துவிட்டார்.

பரம்பரையாக இருந்த தோட்டமும், வயலும், தோப்பும் அந்த ஊரிலேயே நான்கில் மூன்று பாகமாக நிறைந்திருக்க அதில் இருந்து வந்த வருமானமும், தொழிற்சாலையில் இருந்து வந்த வருமானமுமே அளவிற்கு அதிகமாகவே இருக்க பட்டம்மாவும் கணவரின் மனதறிந்த மனைவியாக அமைதியாக இருந்துவிட்டாள்.

தொழிலில் மட்டுமே தலையிடாமல் ஒதுங்கியிருந்த பட்டம்மா, கண்ணூரிலேயே பரம்பரை வீடு தனியாக

இருக்க, ஊரின் மையத்திலேயே தன்னுடைய [illegible] [illegible] ஒரு பெரிய மாளிகை போன்ற வீட்டினை கணவரைக் கட்டச் செய்து அதிலேயே குடியேறவும் செய்துவிட்டார்.

பரம்பரை வீட்டினை விட்டுப் புது வீட்டிற்கு போவதை ஆரம்பத்தில் மறுத்த ஏகாம்பரத்தின் தந்தையர் அந்த வீடு உருவாகி முடிந்தவுடன் அதன் அழகில் மயங்கி அங்கேயே குடிபுக ஒப்புக் கொண்டார்கள்.

பெரிய அரண்மனை போன்ற கம்பீரத்துடன் [illegible] நிறும் காம்பவுண்டுச் சுவர் கோட்டைச் சுவர் போல உயர்ந்து நிற்க ராஜமாளிகையாகக் கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டு இருக்கும் அவர்களது வீடு. இந்த ஊரிலேயே பெரிய வீடு அவர்களது வீடுதான். [illegible] ஏகாம்பரமும் பட்டம்மாவும் 'பெரிய வீட்டுக்கார ஐயா' 'பெரிய வீட்டுக்கார அம்மா'வாக ஆகிவிட்டனர்.

அவர்களது ஒரே மகன் யோகநாதனை தன் தொழிலுக்கு வாரிசாக உருவாக்கிய ஏகாம்பரம், ஒரே மகளான மோகனாவை கோயம்புத்தூரிலேயே பெரும் பணக்காரரான சுந்தரத்திற்கு திருமணம் செய்து வைத்து, அவளது மனம் கோணாத வகையில் தங்கமும், வைரமாக [illegible] செய்து, கோயம்புத்தூரிலேயே ஒரு வீட்டையும் வாங்கி மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து நல்ல முறையில் அவளையும் வாழ வைத்திருந்தார் ஏகாம்பரம்.

யோகநாதனுக்கு ஒரே மகனாக பிரசன்னா பிறந்திருக்க, மோகனாவோ மஞ்சரியையும், ஆனந்தனை



பெற்றெடுத்து இரண்டு பேரப்பிள்ளைகளை பட்டம்மா தம்பதியினருக்கு கொடுத்திருந்தாள்.

மகனது வாரிசான பிரசன்னா சட்டக் கல்லூரியில் படித்து முதல் மாணவனாக தேர்ச்சியடைந்திருந்தாலும், வக்கீலாக தன் பணியினைத் தொடர விருப்பம் இல்லாமல் குடும்பத் தொழிலை கவனிக்க ஆரம்பித்தாலும், தன் தாத்தா, தந்தையைப் போல அந்த கன்னூரிலேயே [illegible] தங்கிவிட விருப்பம் இல்லாமல் தன் சுய முயற்சியால் அருகில் உள்ள நகரத்தில் பெரிய வணிக வளாகமும், ஹோட்டலும் தொடங்கி அதைத் திறமையுடன் நடத்தியும் காட்டியிருந்தான். கணவருக்கும் மகனுக்கும் இல்லாத தொழில் திறமையுடன் முன்னேறிக் கொண்டிருந்த பேரனின் மேல் தனியான பாசம் கொண்டிருந்தாள் பட்டம்மா. அவனது வார்த்தைதான் அவளுக்கு வேதம். அவனது வாழ்க்கைதான் பட்டம்மாவின் உயிர்வாழும் நோக்கம். பேரனது விருப்பம்தான் அவளது உயிர்மூச்சு.

பாட்டியின் பாசத்திற்குக் குறைவில்லாத பாசம் கொண்ட பேரன் தான் பிரசன்னாவும். சிறுவயதில் இருந்தே பாட்டியார் அரவணைப்பிலேயே வளர்ந்தவனான பிரசன்னாவிற்கு பாட்டி, குரு, தோழி என அனைத்துமே பட்டம்மாதான். அவனை பெற்ற அன்னையான காந்திமதியை விட தன் பாட்டியான பட்டம்மாவின் மீதுதான் பிரசன்னாவிற்கு அன்பு அதிகம்.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காந்திமதி அந்த கன்னூரிலேயே பிறந்து வளர்ந்தவர் என்பதால் [illegible] பரம்பரைப் பெருமையே அவருக்குப்

போதுமானதாக இருந்தது. ஆனால் அவருக்கு மூத்த தலைமுறையான பட்டம்மாளோ தன்னுடைய வாரிசை கண்ணூரிலேயே பின் தங்கி இருப்பதில் விருப்பம் இல்லை. நகரத்திலும் தன் வாரிசு கால் பதித்துத் தொழிலில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் கொண்டவள் பட்டம்மா. அந்த வித்தினை பிரசன்னா வின் உள்ளத்தில் விதைத்து அவனை தன் விருப்பத் தினை நிறைவேற்றும் கடமையுள்ளவனாக வளர்த்து ஆளாக்கியிருந்தாள் பட்டம்மா.

சட்டக் கல்லூரியில் படிப்பை முடித்த பிரசன்னா தொழில் தொடங்கும் ஆசையில் அனைத்து ஏற்பாடு களையும் செய்யத் தொடங்க அவனுக்கு முதல் எதிர்ப்பு அவனது தந்தையான யோகநாதனிடம் இருந்து வந்தது. தங்களது சொத்துக்களை பராமரிக்கவே ஆள் இல்லாமல் இருந்த நிலையில் பிரசன்னா தனியாக தொழில் தொடங்குவதைக் கடுமையாக ஆட்சேபித்தார் அவர். யோகநாதனுக்கு உறுதுணையாக ஏகாம்பரமும் சேர்ந்து கொள்ள எதிர்க்கும் வகை தெரியாமல் திகைத்தான் பிரசன்னா.

"அப்பா யோகநாதா. உன் பரம்பரைத் தொழிலைக் கவனிக்கத்தான் நீயும் உங்கப்பாவும் இருக்கீங்கள்ள? அப்புறம் எதுக்காக என் பேரனோட திறமையையும் அதுக்குள்ளயே முடக்கப் பார்க்கறீங்க? அவனை அவன் போக்கில விட்டுவிடற வழியை பாருங்க. இந்த வயசில சம்பாதிக்காமல் அவன் எந்த வயசில் சம்பாதிக்கிறது. அவங்கவங்க சோலியைப் பார்த்தால் போதும். என்



பேரன் அவன் விருப்பப்படி என்ன செய்யணுமோ அதை செய்யட்டும்..." திட்டவட்டமாக அறிவித்துவிட்டாள் பட்டம்மா.

அன்னையை எதிர்க்கும் துணிவில்லாமல் யோக நாதன் தந்தையைப் பார்க்க, பட்டம்மாவின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தார் ஏகாம்பரம்.

"அதுக்கில்லை பட்டு... நம்ம சொத்தே பார்க்க நாதி யில்லாம கிடக்கிறப்ப... புதுத் தொழில் எதுக்குன்னு தான்..."

"எனக்கு நல்லா வாயில வந்திரும். காடு கரையைப் பார்த்துக்கிட்டு அவன் இந்த ஊரிலேயே இருந்தால் பிள்ளையின் எதிர்காலம் என்னவாகும்? இப்ப அவன் என்ன இந்த ஊரை விட்டே போறேன்னா சொல்றான்? இந்தா இருக்கிற டவுனில் ஒரு கடை ஆரம்பிக்கிறேன்னு சொல்றான். காலையில போயிட்டு சாயந்திரம் வந்திரப் போறான். இத்தனை வருசமும் என் பேரன்தான் ஏரெடுத்து உழுது விவசாயம் பார்த்தானா? இப்ப மட்டும் நாதியில்லாமல் போக? இத்தனை வருசமும் எப்படி நடந்திச்சோ அதுபோலவே இனிமேலும் நடக்கும். அவனைத் தடுக்காம அவன் போக்கில் விடுங்க. நீங் களும் உங்க பிள்ளையும் ஒரு பைசாக்கூட பிரசன்னா வுக்குக் கொடுக்க வேண்டியது இல்லை. என் பேரன் எப்படி முன்னேறி வரணும்னு எனக்குத் தெரியும்..." கண வரின் வாயை அடைத்த பட்டம்மா. தங்கள் அறைக்குச் சென்று தனது அத்தனை நகைகளையும் கொண்டு வந்து பிரசன்னாவின் கைகளில் வைத்தாள்.

''இதெல்லாம் எனக்குச் சீதனமா எங்க அம்மாவும் எனக்கு உரிமையா என் மாமியாரும் கொடுத்த நகைகள் பிரசன்னா. இதை விப்பியோ இல்லை அடமானம் வெப்பியோ அது உன் இஷ்டம். நீ என்ன வேணுனாலும் செய்துக்க. இத்தோட மதிப்பு கோடிகளில் வரும். நீ யாரிடமும் முதலீட்டுக்காக கைகட்டி நிக்க வேண்டாம். நான் இருக்கையில் நீ ஏன் தயங்கணும் ராசா? போ போய் ஆகவேண்டிய வேலைகளைப் பாரு...'' பிரசன்னாவின் விழிகளில் கண்ணீர் திரையிட அவன் நன்றியுடன் பாட்டியைப் பார்த்தான்.

''பட்டு... இதெல்லாம்...''

''எல்லாம் எனக்குத் தெரியுங்க. இதெல்லாம் விலை மதிப்பில்லாத நகைகள்தான். ஆனால் என் பேரனோட ஆசை அதைவிட விலைமதிப்பில்லாதது. அதுவும் இல்லாம இந்த நகைகளில் ஒரு குந்துமணிகூட நீங்க வாங்கித் தந்ததை நான் என் பேரனிடம் கொடுக்கலை. அதெல்லாம் பத்திரமா என்கிட்டவே இருக்கு. எந்த காரணம் கொண்டும் அதை இழக்க நான் விரும்பமாட்டேன்'' மனைவியின் கண்களிலும் முகத்திலும் அந்த முதிர்ந்த வயதிலும் தெரிந்த அன்பினையும் காதலையும் கண்ட ஏகாம்பரம் அதற்குமேல் பிரசன்னாவிடம் மறுப்பாக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பாட்டியின் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு வியாபாரத்தைத் தொடங்கிய பிரசன்னாவும் பட்டம்மாவின் நம்பிக்கையை பொய்யாக்கவில்லை. அவனது வியாபாரம் மேலும் மேலும் விருத்தியாகியதேயொழிய நஷ்டம் ஏற்படவில்லை.





# 2

கோவிலில் இருந்து கனத்த இதயத்தோடு வீடு திரும்பிய பட்டம்மாள் காதுகளில் ஒலித்த பலமான சிரிப்பொலியை கேட்ட பட்டம்மாளின் புருவங்கள் சுளித்தது. அவளது சுளிப்பிற்கு காரணம் சிரிப்பொலியல்ல. சிரித்தவளின் குணம்தான் என்பதனை அவளது இதயம் அறியும்.

வீட்டிற்குள் நுழைந்த பட்டம்மாளைப் பார்த்த சஞ்சனாவின் சிரிப்பு அவளது உதட்டிலேயே உறைந்துவிட அவள் ஒருவித குரோதத்தோடு பட்டம்மாளைப் பார்த்தாள்.

''வீட்டுப் பொண்ணுகளோட சிரிப்பு ரோட்டுக்குக் கேட்டால் அந்த வீடு உருப்புட்டாப் போலத்தான். சிரிச்சவங்களைவிட அப்படி சிரிக்கிறாப்போல வளர்த்தவங்களைத்தான் குத்தம் சொல்லணும்...'' அர்ச்சனைத் தட்டினை மருமகளிடம் நீட்டிய பட்டம்மாவின் பார்வை மருமகள் வைசாலியின் முகத்தைத் துளைத்தது.

மாமியாரின் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாத வைசாலியின் பார்வை சங்கடத்துடன் தழைந்தது.

''வாங்கத்தை. கோவிலுக்குப் போயிருந்தீங்களா? நல்லது... நல்லது...'' அசட்டுச் சிரிப்புடன் கேட்ட கணபதியை வெட்டும் பார்வை பார்த்தாள் பட்டம்மா.

"இந்த வீட்டில் எப்பவுமே நல்லதுதான் நடக்கும் கணபதி. வெட்டியாக அரட்டை அடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற குடும்பம் இல்லை இது."

"அதுக்கென்னங்கத்தை. இதை நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா. நம்ம குடும்பத்துப் பழக்க வழக்கம்தான் எனக்கு நல்லாத் தெரியுமே..." விட்டுக் கொடுக்காமல் பதிலளித்த கணபதியை முறைத்துவிட்டு பட்டம்மாள் அகல கணபதி அறியாமல் தலையில் அடித்துக் கொண்டு மாமியாரைப் பின் தொடர்ந்தாள் வைசாலி.

கணபதி வைசாலியின் உடன் பிறந்த அண்ணன். சஞ்சனா அவரது மூத்த மகள். வைசாலியின் குணத்தையும் அழகையும் கண்டு ஆசைகொண்ட பட்டம்மாள் அவளது குடும்ப அந்தஸ்தினை கணக்கில் வைத்துக் கொள்ளாமல் அவளைத் தன் மகன் யோகநாதனுக்கு மணம் முடித்து வைத்திருந்தாள்.

பரம்பரைப் பணக்கார வீட்டில் தங்கை வைசாலி வாழப்போவது தங்கள் குடும்பத்தின் எதிர்காலத்திற்கு உதவியாக இருக்கும் என்ற பேராசையோடும் பெரும் மகிழ்ச்சியோடும் அந்தத் திருமணத்திற்கு கணபதியும் மனம் உவந்து சம்மதம் தெரிவித்திருந்தார்.

ஒரே ஊரில் இருக்கும் சாக்கில் காலை விடிந்தவுடன் தங்கையைப் பார்க்க வந்துவிடும் கணபதி மாலை மயங்கும் வரையில் தங்கையின் கணவரின் நிழலாக இருந்து அவர் சொல்லும் வேலைகளை முடித்துக் கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் ஏகாம்பரத்தின் மைத்துனர் என்ற உரிமையோடு கணபதி தன்னுடைய செல்வ நிலையையும் உயர்த்திக் கொண்டார்.



மகனது மைத்துனரின் நிலை உயர்வதைப் பெருமையாக நினைத்த ஏகாம்பரத்தின் பெருந்தன்மையால் கணபதியின் செல்வநிலை அவரே எதிர்பாரா அளவில் உயர்ந்திருந்தது. அதே ஊரில் பெரிய வீடும், தோட்டமும், தோப்புக்களும் கணபதியின் குள்ளநரித்தனத்தால் அவருக்கு உரிமையாகி இருக்க, அது போதாதவராக கணபதியின் பார்வை ஏகாம்பரத்தின் மொத்த சொத்துக்களின் மீதும் பதிந்திருந்தது. ஏகாம்பரத்தின் அனைத்து சொத்துக்களுக்கும் ஒரே வாரிசான பிரசன்னாவின் மீது கணபதியின் கண் பார்வை பதிந்திருந்தது.

அவரது ஆசைக்கு உறுதுணையாக இம்முறை அவர் தனது இளைய மகளான சஞ்சனாவைக் களம் இறக்கியிருந்தார். மூத்த மகளான சாதனா கணபதியின் மனைவி பூஞ்சோலையின் எளிமையான குடும்பப் பாங்கான குணத்துடன் வளர்ந்திருக்க அவளை நம்புவதில் பிரயோசனம் இல்லை என்ற முடிவுடன் கணபதி இளைய மகளான சஞ்சனாவைக் களம் இறக்கி இருந்தார். கணபதி கோடு போட்டுக் கொடுத்த பாதையில் ரோடே போட்டு விடும் கில்லாடியான சஞ்சனா தந்தை காட்டிய வழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

பிரசன்னாவின் வணிக வளாகம் இருக்கும் ஏரியாவிலேயே சஞ்சனாவின் கல்லூரியும் அமைந்திருந்தது அவர்கள் இருவருக்கும் மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது. காலையில் கல்லூரி செல்வதையும் மாலையில் கல்லூரி முடிந்ததும் நேராக ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்கே வந்து பிரசன்னாவுடன் இணைந்தே வீடு திரும்புவதையும் தன் வழக்கமாக வைத்துக் கொண்டாள் சஞ்சனா. ஆரம்பத்தில் இதனை மனதிற்குள்

எதிர்த்த பிரசன்னாவிற்கு நாளடைவில் அந்த வழக்கமே விருப்பமான ஒன்றாக மாறி விட்டது.

மாமா மகள் என்ற உரிமையுடன் சஞ்சனா சற்று நெருக்கமாகப் பழகுவதும், அவளுடன் இணைந்திருப்பதும் பிரசன்னாவின் இளமைக்கு விருந்தாக அமைய அவனும் சஞ்சனா விரித்த வலையில் வெகு விரைவிலேயே விழுந்து விட்டான். அதுவரையில் இவை அனைத்தையும் கண்டுகொள்ளாமல் இருந்த பட்டம்மாள் பேரனின் நடவடிக்கைகளில் தெரிந்த மாற்றத்தை உணர்ந்து அவனைக் கண்டிக்க எண்ணும் பொழுதிலோ நிலைமை அவளது கைமீறிப் போய்விட்டது.

பட்டம்மாள் விரும்பியோ விரும்பாமலோ சஞ்சனா அந்த வீட்டின் மருமகளைப் போன்ற உரிமையுடன் உலாவர ஆரம்பித்தாள். அண்ணன் மகளின் செயல்பாடுகளில் சிறிதும் விருப்பம் இல்லாத வைசாலியோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்க ஆரம்பித்தாள்.

'என்ன வைசாலி இதெல்லாம்? இந்தப் பொண்ணு எதுக்காக காலங்கார்த்தால இங்க வந்து உட்கார்ந்திருக்கு? ஒரு வயசுப் பொண்ணா லட்சணமா வீட்டில் அடங்கி இருக்க வேண்டாமா? உங்கண்ணனுக்கு இது தெரியாட்டியும் நீயாவது எடுத்துச் சொல்ல வேண்டாமா?'' அடுக்கடுக்கான கேள்விக் கணைகளுக்கு பதில் சொல்லும் வகை அறியாமல் திகைத்து நின்றாள் வைசாலி.

''நானும் எவ்வளவோ சொல்லித்தான் பார்க்கறேன் அத்தை. ஆனா இதெல்லாம் சஞ்சனா காதில் ஏறவே மாட்டேங்குது...''

''முதலில் உங்கண்ணன் காதில் ஏறினாத்தானே அவ மக காதில் ஏறும்? இப்பவே இந்தக்குட்டி இந்த ஆட்டம் போடுதே. இதெல்லாம் வந்துச்சுன்னா என்ன ஆகும்னு தெரியுமா...?''



''அத்தை!?''

''அவ இந்த வீட்டுக்குள்ள மருமகளா வந்துட்டான்னா நீயும் நானும் காசி ராமேஸ்வரம்னு எங்கயாவது போக வேண்டியதுதான் வைசாலி. உங்கண்ணன் மக குணம் எப்படின்னு உனக்கும் தெரியும்தானே?''

''தெரியும் அத்தை... ஆனா...''

''தெரிஞ்சுமா நீ இத்தனை தூரம் ஆடவிட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க? பட்டம்மாளின் மருமகளுக்கு யாரை... எங்க வைக்கணும்னு தெரிய வேண்டாமா? தங்க ஊசிங்கிறதுக்காக கண்ணில் குத்திக்க முடியுமா?''

''என்னைத் தப்பா நினைக்காதீங்கத்தை. நானும் முயற்சி பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன். ஆனா இவ ஆட்டத்தை பிரசன்னாவே அனுமதிக்கும்போது நான் சொல்வதை இவ எங்க மதிக்கப் போறாத்தை?'' ஆதங்கத்துடன் கேட்ட மருமகளை உற்றுப் பார்த்தாள் பட்டம்மாள்.

''நான் சொல்வதன் அர்த்தம் இப்ப உனக்குப் புரியுதா? ஒரு வீட்டிற்கு மருமகளா வரப்போற பொண்ணு முதல்ல அந்த வீட்டுப் பெரியவங்க மனம் கோணாமல் நடந்துக்கணும். அப்புறம்தான் புருசனோட அன்பு எல்லாம்... இங்க உன் மருமக வர்ற வழியே சரியில்லையே? முதல்ல ஆம்பளையக் கைக்குள்ள போட்டுக்கிட்டு அப்புறமா வீட்டுக்குள்ள நுழையுற பழக்கம் யார்

வீட்டுப் பழக்கம்னு தெரியுதா? குடும்பப் பொண்ணு செய்யுற காரியமா து?"

"அத்தை..." கண்கலங்க மாமியாரின் கையைப் பற்றிக் கெஞ்சுதலாக அவளைப் பார்த்தாள் வைசாலி.

தன் பிறந்த வீட்டின் பெருமையை மாமியார் பேச விட்டாலும் இப்படியொரு இழிசொல்லை அவ வாயால் கூறக் கேட்கும் தைரியம் இல்லாமல் தலை குனிந்தாள் வைசாலி.

"வைசாலி... நான் உங்க வீட்டைப் பத்திப் தப்பா பேசணும்கிறதுக்காக இப்படியெல்லாம் பேசலைம்ம உங்கண்ணன் புத்தி இப்படி சாக்கடையாப் போச்சேன் வருத்தத்தில் தான் பேசினேன். நீ தப்பாக நினைக்காதே சேற்றில்தான் செந்தாமரை மலரும். உங்கண்ணன் சேறாக இருந்தாலும் நீ செந்தாமரைதான் என்பது எனக்குத் தெரியும்..."

"இது போதும் அத்தை. என்னை நீங்க புரிஞ்சு கிட்டதே எனக்குப் போதும்..." கண்களைத் துடைத்து கொண்ட வைசாலியை அன்புடன் பார்த்தாள் பட்டம் மாள்.

"உன்னைப்போல இன்னொரு மருமகள் இந்த வீட்டுக்கு வரணும்னுதான் நான் தவமிருக்கேன் வைசாலி. எனக்கு என் மனம் கோணா மருமகளா நீ இருப்பதைப் போல உனக்கும் உன் மனம் கோணாம நடந்துக்கிற மருமகள் வந்து வாய்க்கணும் வைசாலி.." கூறிக் கொண்டே சென்ற மாமியாரின் முதுகை பார்த்துப் பெருமூச்சு விட்டாள் வைசாலி.



# 3

வீட்டின் சூழ்நிலையை உணராத அரைமயக்க நிலையில் கட்டிலில் படுத்திருந்தார் ஏகாம்பரம். ஒரு சிங்கத்தின் வீரத்தோடும் அழகோடும் அந்த வீட்டிற்குள் பவனி வந்துகொண்டு இருந்த கணவரின் தோற்றம் ஒரு நிமிடம் பட்டம்மாளின் கண்களில் வந்து செல்ல அவள் வேதனையோடு கணவரின் அருகில் அமர்ந்து தன் கையில் இருந்த பெருமாளின் குங்குமத்தை ஏகாம்பரத்தின் நெற்றியில் பூசிவிட்டாள்.

மனைவியின் ஸ்பரிசத்தை உணர்ந்த ஏகாம்பரம் ஒரு சிறிய புன்னகை உதட்டில் தோன்ற கண்களைத் திறந்து அவளை பார்த்தார். கண்களில் கண்ணீர் திரையிட கவலையுடன் தன்னை பார்த்துக் கொண்டிருந்த பட்டம்மாளின் முகத்தைப் பார்த்தவரின் புன்னகை மேலும் விரிந்தது.

"பட்டு... கோவிலுக்குப் போயிட்டு வந்தியா?" அன்புடன் கேட்ட கணவருக்கு தலையசைத்துப் பதில் கூறிய பட்டம்மா கண்ணீரை மறைக்கத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"கோவிலுக்குப் போனதால காபிகூட குடிச்சிருக்க மாட்ட போ... போய் காபி குடிச்சுட்டு வா.." தன் குணம்

அறிந்து ஏகாம்பரம் கூறியதைக் கேட்டவுடன் பட்டம்மாளின் தைரியம் அனைத்தும் பறந்து விட்டது. அவள் வெடித்து வந்த விம்மலைத் தன் சேலை முந்தானையால் வாய்மூடி அடக்கிக் கொண்டு ஏகாம்பரத்தைப் பார்த்தாள்.

''சீச்சீ... இவ்வளவு பயந்தாங்கொள்ளியா நீ? இப்ப எனக்கு என்ன ஆச்சு? வயசானால் உடம்புக்கு ஏதாவது முடியாமல் போறது சகஜம்தான பட்டு. இதுக்குப் போய் இவ்வளவு கவலைப்படறே? கண்ணைத் துடைச்சுக்கிட்டுப் போய் சூடாக் காபி தரச்சொல்லிக் குடிச்சுட்டு வா. போ...'' கூறிய கணவரின் மார்பில் கை வைத்து தலையசைத்து மறுத்தார் பட்டம்மா.

''எனக்கு இப்ப எதுவும் வேண்டாங்க. எதையும் சாப்பிடும் மனநிலையில் நான் இல்லை...'' பட்டம்மாள் கூறிக் கொண்டிருக்கையிலேயே பலத்த சிரிப்பொலியும் பேச்சுக் குரலும் அவளது வார்த்தைகளின் சத்தத்தையும் மீறி ஓங்கி ஒலித்தது.

அதைக்கேட்ட ஏகாம்பரத்தின் புருவங்களும் யோசனையுடன் சுருங்கியது. அவர் பார்வை கேள்வியாக மனைவியின் முகத்தில் படிந்தது.

''கணபதியோட மகள் சஞ்சனா வந்திருக்கா. அவகூட பிரசன்னா பேசிக்கிட்டு இருக்கான்...'' மனைவியின் குரலில் தெரிந்த அளவில்லாத சோகத்தைத் தாங்க முடியாதவராக ஒரு நிமிடம் கண்களை மூடிக் கொண்டார் ஏகாம்பரம்.

''கொஞ்ச நாளாவே எனக்கு மனசே சரியில்லைங்க. என்னமோ எல்லாமே தவறாக நடப்பதைப்போலவே



இருக்கு'' பட்டம்மாளின் பேச்சைக் கேட்ட ஏகாம்பரம் கண்களை மெதுவாக திறந்து அவள் முகத்தைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

''நான் இருக்கேன் பட்டு, உன்னை நிர்கதியா விட்டுட்டு நான் அத்தனை சீக்கிரத்தில் போயிட மாட்டேன். நீ தைரியமா இரு...'' பட்டம்மாளின் கை மேல் தன் கைவைத்து உறுதியாகக் கூறினார் ஏகாம்பரம்.

''அய்யா... ராசா... எஞ்சாமி. நான் உங்களைக் கட்டிக்க எத்தனை ஜென்மமாய் தவமிருந்தேனோ தெரியலையே? அந்த ஆண்டவன் உங்க ஆயுளை கெட்டியாக்கினால் அதுவே எனக்குப் போதும் ராசா. எனக்கு வேற எந்தக் கவலையும் இல்லை...'' கதறிய பட்டம்மாள் கணவரின் மார்பில் தலைசாய்த்துக் கொள்ள தன் மெல்லிய கரங்களால் அவள் தலையைத் தடவிக் கொடுத்தார் ஏகாம்பரம். அவரது கண்களிலும் முகத்திலும் அந்த அரை மயக்க நிலையிலும் தீவிரமான சிந்தனை குடிகொண்டது.

சில நிமிடங்கள் கணவரின் மார்பில் தலைசாய்த்த உணர்வே ஆயிரம் யானைகளின் பலத்தைக் கொடுத்ததைப் போன்ற தைரியத்துடன் தலை நிமிர்ந்தாள் பட்டம்மா. அவளது முகத்தில் தெரிந்த தெளிவினைக் கண்டு நிம்மதியுடன் புன்னகைத்தார் ஏகாம்பரம்.

''இப்பத்தான் என் பட்டம்மாளைப் பார்ப்பது போல இருக்கு. இந்தத் தைரியம்தான் உனக்கு அழகு பட்டம்மா. எந்தச் சூழ்நிலையிலும் அதை மட்டும் கைவிட்டு விடாதே...'' கணவரின் பேச்சை புன்சிரிப்புடன் ஆமோதித்தாள் பட்டம்மா.

"ஏதாவது சாப்பிடறீங்களா? கொண்டு வரட்டுமா?" மெல்லிய குரலில் கணவரிடம் கேட்ட பட்டம்மாவின் கரிசனம் ஏகாம்பரத்தின் நெஞ்சைத் தொட்டது.

"கொண்டு வா பட்டு. நான் எதையாவது சாப்பிட்டால்தான நீ சாப்பிடுவே... காலையிலே இருந்து வெறும் வயித்தோட இருக்கியே? போய் சீக்கிரமாக ரெண்டு பேருக்கும் சேர்த்தே எதையாச்சும் சாப்பிடக் கொண்டு வா" மெல்லக் கதவைத் திறந்து அறையை விட்டு வெளியே வந்த பட்டம்மாவின் கண்களில் ஹாலில் இருந்த சோபாவில் பிரசன்னாவின் அருகில்... அருகில்... என்பதைவிட... ஏறக்குறைய மடியில்... அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சஞ்சனாதான் முதலில் தென்பட்டாள்.

கண்ணூரை குக்கிராமம் என்றும் சொல்ல முடியாது. அதேவேளையில் நாகரீகமான டவுன் என்ற வகையிலும் சேர்த்துக் கொள்ள முடியாது. கிராமமும் அல்லாமல் நகரமும் அல்லாத இரண்டுக்கும் நடுநிலையான ஊரில் பிறந்த சஞ்சனா மும்பை, டெல்லி, சென்னை போன்ற பெருநகரத்தில் பிறந்த நவநாகரீகத் தோற்றத்தோடு பரம்பரை செல்வ செழிப்புடன் வளர்ந்தவளைப் போன்ற கர்வத்தோடும் பிரசன்னாவை ஒருவித அலட்சியத்துடன் பார்த்து உதடு சுழித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் வேண்டுமென்றே குனிந்து சிரித்தபொழுது தெரிந்த கழுத்து வளைவின் நெளிவு சுளிவுகளைக் கிறக்கத்தோடு பார்த்தவனாக சஞ்சனாவின் பேச்சிற்குச் சிரித்துக் கொண்டிருந்தான் பிரசன்னா.

பிரசன்னா பார்த்து ரசிப்பதற்காகவே சஞ்சனாவின் சுடிதாரின் முன்புறக் கழுத்து வளைவு அவ்வளவு



இறக்கமாகத் தைக்கப்பட்டதோ என்ற சந்தேகம் கூடத் தோன்றியது பட்டம்மாவிற்கு. அவள் தன் மனதில் தோன்றிய எரிச்சலை மறைக்காமல் தன் முகத்தில் காட்டியவளாக இருவரையும் கடந்து கிச்சனுக்குள் செல்ல, சஞ்சனாவின் அருகில் நெருக்கமாக அமர்ந்திருந்த பிரசன்னா அவசரமாக அவளிடம் இருந்து விலகி அமர்ந்தான்.

பிரசன்னாவின் விலகலை உணர்ந்த சஞ்சனாவின் பார்வை எரிச்சலோடு பட்டம்மாளைப் பின்தொடர்ந்தது. அவள் எத்தனையோ முயற்சிகள் செய்தும், நெருக்கம் காட்டியும் பிரசன்னாவிடம் பட்டம்மாளின் மேலிருந்த பயத்தையும், மரியாதையையும் மட்டும் அவளால் மாற்றவே முடியவில்லை. இந்தப் பயமே தன்னுடைய எதிர்காலத் திட்டங்களுக்குப் பெரிய முட்டுக்கட்டையாக மாறும் என்பதை சஞ்சனா நன்றாகவே உணர்ந்திருந்தாள்.

சமையல் அறை வரை நேராக நடந்து சென்ற பட்டம்மாள் ஒரு நொடி நின்று பிரசன்னாவைத் திரும்பிப் பார்த்து விட்டு பின் வேகமாக சமையல் அறைக்குள் சென்று விட்டாள்.

பாட்டியின் விழிகளில் தெரிந்த குற்றச்சாட்டினை நொடியில் உணர்ந்து கொண்ட பிரசன்னா குற்ற உணர்வுடன் எழுந்து பட்டம்மாளைத் தொடர்ந்து தானும் கிச்சனுக்குள் நுழைந்தான். அவன் வருவான் என்பதை எதிர்பார்த்தவள் போல பட்டம்மா நிமிர்ந்து பிரசன்னாவின் முகத்தைப் பார்த்தாள்.

"பாட்டி... தாத்தா எழுந்திரிச்சுட்டாங்களா? இப்போ எப்படி இருக்காங்க?" கேட்ட பேரனைத் தீர்க்கமாக பார்த்தாள் பட்டம்மா.

"உன் தாத்தா ஒண்ணும் பாரினில் இல்லப்பா பிரசன்னா. இதோ இருக்கிற அடுத்த ரூமில்தான் இருக்கிறார். இத்தனை அக்கறை இருக்கிறவன் நீயே போய் நேரில் போய்ப் பார்த்திருக்கலாமே? விடிஞ்சு ரொம்ப நேரம் ஆகிருச்சுப்பா..." பட்டம்மாவின் குரலில் தெரிந்த குத்தல் பிரசன்னாவிற்குப் புரிந்தது.

"இல்ல பாட்டி. நான் தாத்தாவைப் பார்க்கத்தான் கீழே இறங்கி வந்தேன். அதுக்குள்ள சஞ்சனா வந்துட்டாள். அப்படியே அவகூடப் பேசிக்கிட்டு இருந்ததில் நேரம் போயிருச்சு. சாரி பாட்டி..." தயக்கத்துடன் கூறினான் பிரசன்னா.

"ஆமாமாம். அந்தப் பொண்ணு உன்னோட தாத்தாவைவிட ரொம்ப முக்கியமானவள் ஆச்சே. அதனால் நீ அவளிடம் கண்டிப்பாய் பேசித்தான் ஆகணும். போகுது விடு பிரசன்னா. தாத்தாவை எப்ப வேணும்னாலும் பார்த்துக்கலாம். அதனால நீ முதல்ல அந்த சாஞ்சனாகிட்ட போய் உட்கார்ந்து இந்த வீடே அதிர மாதிரி சிரிக்கவை. அப்பத்தான் உங்க தாத்தாவோட இந்த வயசான இதயம் இன்னும் நல்லா வேகமா துடிக்கும். போய்யா... போ..." வாசலை நோக்கி கை நீட்டிய பாட்டியாரைப் பார்த்துத் தோன்றிய சிரிப்பை உதட்டிற்குள்ளேயே மறைத்துக் கொண்ட வைசாலி ஓரக் கண்ணால் பிரசன்னாவின் முகத்தைப் பார்வையிட்டாள்.



அவனோ பட்டம்மா சஞ்சனாவை 'சாஞ்சனா' ஆக்கிய பிரமிப்பில் இருந்து மீளாதவனாக பட்டம்மாளைப் பார்த்துக் கொண்டே சிலையாக நின்றிருந்தான்.

# 4

"மாமா, நீங்க இங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?" செல்லமாகச் சிணுங்கியவாறே வந்த சஞ்சனாவைப் பார்த்த பிரசன்னாவின் இதயம் அவனையறியாமலேயே வேகமாக துடிக்கத் தொடங்கியது.

அவன் எதையும் பேசும் சக்தியை இழந்தவனாக சஞ்சனாவையும் பட்டம்மாளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான்.

சஞ்சனா கூறியதைக் கேட்ட பட்டம்மா நிமிர்ந்து பார்த்த விதத்திலேயே ஏதோ பூகம்பம் வரும் அறிகுறி தெரிந்துவிட பிரசன்னா சஞ்சனாவிடம் அமைதியாக இருக்கும்படி கண்களால் ஜாடை செய்தான்.

பிரசன்னாவின் கண்ஜாடையை சஞ்சனா பார்ப்பதற்கு பதிலாக பட்டம்மாளே பார்த்துவிட அவனது இதயம் இன்னும் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

"வந்து... நான்... சஞ்சனா... நீ..." பிரசன்னாவின் வாய் தந்தியடிக்க அவனைத் தன் பார்வையால் அடக்கினாள் பட்டம்மா.

''நீ ஏன்ப்பா இப்படி குளிர்காய்ச்சல் வந்தவன் போல வார்த்தையைத் தந்தியடிக்கிற!''

''அதானே... நான் என்ன கேட்டேன். நீங்க என்ன பதில் சொல்றீங்க மாமா...?'' செல்லமாகக் கொஞ்சிக் கொண்டே பிரசன்னாவின் அருகில் சென்றவளை கைப்பற்றி நிப்பாட்டினாள் பட்டம்மா.

''இந்தாம்மா... பொண்ணு... சாஞ்சனா. உனக்கு பொம்பளைங்க பக்கத்துல நிக்கவே பிடிக்காதா... ஐயய்ய...'' முகம் சுளித்தவளை சிலிர்த்துக் கொண்டு பார்த்தாள் சஞ்சனா.

''என் பேர் சஞ்சனா. உங்களுக்குக் கூப்புடத் தெரியா விட்டால் கூப்பிடாதீங்க.''

''அதென்ன... னாவோ. நான் கூட நீ என்பேரன் மேல எப்பப் பார்த்தாலும் சாய்ஞ்சுக்கிட்டே இருக்கிறதால சாஞ்சனான்னு நினைச்சிட்டேன்...''

''என் மாமா மேலே சாய்வதில் எனக்கு சந்தோசம் அதனால அவர்மேல சாயறேன்...'' கொஞ்சமும் கூச்சமில்லாமல் கூறிய சஞ்சனாவைக் கால் முதல் தலைவரை அருவறுப்புடன் பார்வையை ஓட்டினாள் பட்டம்மா.

''ஐயய்ய. உங்கப்பன் உன்னை வளர்த்திருக்கிற லட்சணம் இதுதானா? அடுத்தவீட்டு ஆம்பளைமேல சாய்வதை இப்படிப் பெருமையா வேற சொல்லிக்கிறியாக்கும்! வெட்கக் கேடுதான் போ!''

''அதெப்படி தன் மாமா அடுத்த வீட்டு ஆம்பளை யாவார். அவர் என்னோட...'' மேற்கொண்டு சஞ்சனா



விடம் பேச முடியாமல் சீற்றத்துடன் தடுத்து நிறுத்தினாள் பட்டம்மா.

''இந்தா பாரு... உன் பேச்சையும் உளறலையும் இத்தோட நிறுத்திக்க. என் பேரன் அடுத்தவன் இல்லாமல் அப்புறம் உனக்கு புரு... என்னைத் தேவையில்லாமல் பேச வைத்து வேண்டாம்... சொல்லிட்டேன். இனிமேல் இப்படி விடிஞ்சும் விடியாததுக்கு முன்னால வந்து நடுவீட்டில் உட்கார்ந்துகிட்டு பேய் மாதிரி சிரிக்கிறது, என் பேரன் மேல விழுந்து பிராண்டுறது, அப்புறம் விவஸ்தை இல்லாமல் இப்படி பேசிக்கிட்டு இருக்கிறது... இது அத்தனையையும் இத்தோட நிறுத்திக்க. அப்படியும் நீ திருந்தலைன்னா... என்னைப் பத்தி உனக்குத் தெரியாது. உங்கப்பன் கிட்டப் போய்க் கேளு. அவன் சொல்வான் நான் யாருன்றதை. நான் காடு காக்க ஆரம்பிச்சேன் உன் பரம்பரையே நாறிப்போகும்... தெரிஞ்சுக்க. இப்ப இந்த இடத்தை காலிபண்ணிட்டு ஒழுங்கு மரியாதையா உன் வீட்டைப் பார்க்க போய்ச் சேரு. இல்லேன்னா நான் பத்ரகாளியா மாறிடுவேன். போ முதல்ல இங்கிருந்து...'' கண்கள் சிவக்க பல்லிடுக்கில் சீறிய பட்டம்மாளின் கோபத்தைக் கண்ட வேலையாட்கள் அனைவரும் பயத்துடன் ஒதுங்கி நிற்க, மாமியாரின் கோபத்திற்கு அஞ்சியவளாக வைசாலி அமைதியாகிவிட பிரசன்னா சஞ்சனாவின் கையைப் பிடித்து ஏறக்குறைய இழுத்துக் கொண்டு சமையல் அறையை விட்டு வெளியே வந்தான்.

பட்டம்மாளை இதற்கு முன்னால் இவ்வளவு கோபத்துடன் கண்டிராத சஞ்சனா திகைப்புடன் திரும்பி தன் வீட்டிற்கு ஓடிவிட்டாள்.

[illegible]

"அந்தை... இதில் என் தப்பு எதுவும் இல்லைன்னு உங்களுக்கே தெரியுமே..."



"தப்புன்றது நாம செய்யறது மட்டும் இல்லை வைசாலி. தப்பு நடக்கிறதை தடுக்காமல் இருப்பதும், தடுக்க முடியாமல் இருப்பதும் என்னைப் பொறுத்த வரைக்கும் தப்புதான். நான் இனி போகதாதன்கிட்டே பேசிக்கிறேன்...!" உணவு அடங்கிய பாத்திரங்களை வேலைக்காரி செண்பகம் சுமந்து வர அவளுக்கு முன்பாக கோபம் தணியாதவளாக சென்று கொண்டிருந்த மாமியாரை பார்த்துடன் பார்த்தாள் வைசாலி.

பட்டம்மாள் எவ்வளவு அன்பான மாமியாரோ அவ்வளவுக்கவ்வளவு கோபம் வந்தால் எரிமலையாக மாறிவிடுவாள் என்பதை வைசாலி நன்கு அறிவாள்.

நடந்த அனைத்திற்கும் காரணமான பிரசன்னாவோ குமுறும் எரிமலையை உள்ளடக்கிய மனநிலையோடு அமர்ந்திருந்தான். தன்மீது அன்பு கொண்ட தன் பாட்டி சகுந்தலாவை அழவைக்கிறதை அவனால் சற்றும் தாங்க முடியவில்லை. தன் பெரிய கண்கள் கண்ணீரால் நிறைய பிரசன்னாவைப் பார்த்தும் கொண்டே ஓடிய சகுந்தலாவை எண்ணி உள்ளம் துடிக்க அப்படியே அமர்ந்திருந்தான் பிரசன்னா.



# 5

திண்ணனூரிலேயே முக்கால் பாக வயல்களும் தோட்டமும் அவர்களின் சொத்திற்கு உரிமையானது. பரம்பரையாக

வந்த வயல்களும் தோட்டங்களும் இருக்க யோகநாத தன்னுடைய காலத்தில் வாங்கிய மாமரமும், தென்ன மரங்களும் நிறைந்த தோப்புக்களும் அவர்களுக் உரிமையானதாக மாறியிருந்தது.

யோகநாதன் திறமையான தொழில் அதிபராக இல் விட்டாலும் ஒரு திறமையான விவசாயி. உழைக்க தயங்காத மனிதர். சுட்டுப் போட்டாலும் அதிகாலை நாலு மணிக்கு மேல் அவரது கண்களில் தூக்கத்தை காண முடியாது. பகல் எல்லாம் வேலை செய்த களை பில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் மனைவியை எழுப்பி தொந்தரவு செய்யாமல் மெதுவாக அறையி இருந்து வெளியேறி பால் மாடுகள் நிறைந்திருக்கு தங்களது பழைய வீட்டின் தொழுவத்திற்கு வந்துவி வார்.

எஜமானரின் குணம் அறிந்து அவருக்கு முன்பா எழுந்து தயாராக இருக்கும் வேலையாட்கள் அவ வந்தவுடனே அவரது கண்முன்னாடியே பால் கறக்கு வேலையை ஆரம்பித்து விடுவார்கள். ஏறக்குறை ஐம்பது பால் மாடுகளும், பத்து காளைமாடுகளு நிறைந்த அந்தத் தொழுவத்தை ஒரு பால் பண்ணை என்று சொன்னாலும் மிகையானது.

அவரது மாடுகளில் இருந்து கறக்கும் பாலிற்கு அந்த ஊரில் மட்டும் அல்லாது கன்னனூரைச் சுற்றியுள்ள ஊர்களிலும் மதிப்பு அதிகம். பாலில் ஒரு சொட்டுக் கூட தண்ணீர் கலக்காமல் வியாபார தர்மத்துடன் யோக



கொண்டு இருந்தார்கள். பால் கறந்து கொண்டிருக்கையிலேயே முதலில் கறக்கும் பாலில் ஐந்து லிட்டர் வீட்டிற்கு கொண்டு செல்லப் பட்டுவிடும். சமையல்காரி செண்பகம் அவர்கள் பால் கறந்து முடிக்கும் முன்பாகவே காபி கலந்து அவர்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து விடுவாள். முதலாளி, வேலைக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவரும் ஒரே விதமான தரமான காபியாக இருப்பதால் முதலாளி வீட்டுக் காபிக்காக அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு தான் இருப்பார்கள்.

செண்பகம் அனைவருக்கும் காபியை கொடுத்து விட்டுச் சென்ற பிறகு வேலை மிகவும் சுறுசுறுப்புடன் தொடங்க ஆரம்பிக்கும். எந்த ஊருக்கு எத்தனை லிட்டர் பால் என்பதனை அளந்து கொடுத்துவிட்டு, அதனை கணக்கில் எழுதி வைத்துவிட்டு யோகநாதன் வயலுக்குப் போய்விடுவார். வயலையும் தோட்டத்தையும் சுற்றி வருவதற்குள் மணி பத்திற்கும் மேல் ஆகிவிடும். அதன்பிறகு வேகமாக குளித்து முடித்து காலை உணவை முடித்துக் கொண்டு தொழிற்சாலைக்கு சென்றுவிட்டு இரவுதான் வீடு திரும்புவார் யோகநாதன். மதிய உணவு கூட தொழிற்சாலைக்கே வந்துவிட வேண்டும் அவருக்கு.

யோகநாதனின் அயராத உழைப்பின் மேல் ஒருவித பெருமைகூட கொம்பரத்திற்கு உண்டு. அதனாலேயே அவர் மகளை எதிர்த்தோ கண்டித்தோ ஒரு வார்த்தை

வேதவாக்கு. அது போலவே தாயின் வார்த்தைகளை மதிப்பவர் யோகநாதன்.

அனைவரிடமும் கறாராக கண்டிப்புடன் பே... பட்டம்மாள் கூட யோகநாதனிடம் அளந்துதான் பே... வாள். தன் ஒரே மகன் அவரது வாழ்க்கையை அ... விருப்பப்படியே வாழவேண்டும் என்ற எண்ணத்து... அவரது முடிவுகளுக்கு என்றும் அவள் தடையாக இரு... மாட்டாள். யோகநாதன் செய்யும் அனைத்துச் செய... களையும் லாபமோ, நஷ்டமோ அதை அப்படியே மனமுவந்து ஏற்றுக் கொள்வாள் பட்டம்மா.

தாய் தந்தை இருவரின் அன்பினையும் மன... உணர்ந்து கொண்டிருந்த யோகநாதனும் அவர்களது விருப்பத்தை அவர்கள் கேட்காமலேயே நிறைவேற்றி விடுவார். பட்டம்மாள் விரும்பிய ஒரே காரணத்திற்காகவே வைசாலியை மனைவியாக ஏற்றுக் கொண்ட யோகநாதன் அதற்காக தன் தாயை மனதிற்குள் ஒவ்வொரு நாளும் நன்றியுடன் எண்ணிக் கொள்வார்.

வைசாலியின் பிறந்தவீடு எப்படி இருந்தாலும், புகு வீட்டில் அனைவரையும் அரவணைத்துச் செல்வதிலும் கணவரின் மனதறிந்து நடந்து கொள்வதிலும் வைசா... எந்தக் குறையும் வைத்துக் கொண்டதில்லை. யோகநாதன் வீட்டிற்குள் இருக்கும் ஒவ்வொரு நிமிடத்தினையும், நொடியையும், அவரது மனம் நிறைய இருக்கும்படி பார்த்துக் கொள்வாள் வைசாலி. அ... போல அந்த வீட்டில் மாமியார் மாமனாரை தன்னை பெற்றவர்களாக எண்ணி அன்பு செலுத்திக் கொண்டிருக்கும் மனைவியை தனக்காக தேர்ந்தெடுத்...



அன்னைக்கு அவர் மனமார நன்றி கூறியதில் வியப்பில்லை.

என்றும் உள்ள வழக்கமாக காலை உணவை முடித்துக் கொள்வதற்காக வேகமாக வந்து டைனிங் டேபிளில் அமர்ந்த யோகநாதனின் முன்னால் தட்டினை வைத்து விட்டு உணவை மெதுவாக எடுத்து வைத்துக் கொண்டிருந்த வைசாலியை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தார் யோகநாதன். அவரது அவசரம் புரிந்து நடந்து கொள்ளும் வைசாலியின் மந்தநிலை அவருக்கு வியப்பாக இருந்தது.

"வைசா... உடம்புக்கு எதுவும் முடியலியா? ஏன் டல்லா இருக்க?" கவலையுடன் கேட்டுக்கொண்டே மனைவியின் கையைத் தொட்டுப் பார்த்தார் யோகநாதன்.

கணவனது கவலையை எண்ணிப் பெருமை கொண்ட வைசாலி அவரது முகத்தை அன்புடன் பார்த்துப் புன்னகைத்தாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க. நான் நல்லாத்தான் இருக்கேன். நீங்க சாப்பிடுங்க. இட்லி சுடு ஆறிப் போகும்..." மனைவியை யோசனையாகப் பார்த்தாலும் அவளது வார்த்தைகளைத் தட்டாமல் உணவை வேகமாக முடித்துக் கொண்டு கைகழுவிய யோகநாதனிடம் அவரது கையைத் துடைத்துக் கொள்ள துண்டினை நீட்டிய வைசாலியை கேள்வியாகப் பார்த்தார் அவர்.

"என்ன? இப்பவாவது என்ன விசயம்னு சொல்லு?" கணவரின் கேள்வியில் உடல் குலுங்க அவரை நிமிர்ந்து பார்த்தாள் வைசாலி.

''உனக்கு என்கிட்டே எதையோ சொல்லணும். அ...
நான் சாப்பிடுவதற்கு முன்னால சொன்னா நான் சரிய...
சாப்பிட மாட்டேன்னு சொல்லமாட்ட. அதனால...
சாப்பிட்டு முடிச்சுட்டு கேட்குறேன். இப்பவா...
என்னன்னு சொல்லு.'' தன்னை நன்றாகப் புரிந்...
வைத்திருக்கும் கணவனை அமைதியுடன் ஏறிட்ட...
வைசாலி.

''அத்தை உங்களைப் பார்க்கணும்னு சொன்னாங்க''
மெல்லிய குரலில் கூறிய மனைவியை ஆச்சரியமா...
நோக்கினார் யோகநாதன்.

''என்னையா... நான் காலையில் அப்பாவை...
அம்மாவையும் பார்த்துவிட்டுத்தானே வெளி...
போனேன். அதுக்குள்ள... ஒருவேளை அப்பா உடம்பு...
ஏதாவது...'' மனைவியிடம் துண்டினை வேகமா...
எறிந்துவிட்டு பெற்றவர்களின் அறைக்குள் விரைந்...
யோகநாதன்.

பொதுவாக காலை வேளைகளில் யோகநாதன்...
வேலைகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பது...
மகனிடம் பேசும் வழக்கத்தை ஏகாம்பரம் தம்பதி...
வைத்துக் கொள்ள மாட்டார்கள். ஏதாவது பெ...
முக்கியமான தேவையாக இருந்தால் மட்டுமே அவ...
தன் அறைக்கு வரவழைத்து பேசும் பெற்றவர்களி...
வழக்கத்தைப் புரிந்து கொண்டவர் என்பதால் யோ...
நாதனின் கவலை அதிகமானது. அவர் வேகமாக அறை...
குள் வந்து நின்றபோது மாத்திரை மயக்கத்தில் இரு...
தாலும் அவரைப் பார்த்து சோர்வுடன் புன்னகை...
ஏகாம்பரத்தின் முகத்தைப் பார்த்த பிறகுதான் யோ...
நாதனுக்கு நிம்மதியான மூச்சு வந்தது.



''அப்பா...'' அன்புடன் கேட்டுக்கொண்டே தந்தையின் அருகில் அமர்ந்து அவர் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டார் யோகநாதன்.

''சாப்பிட்டுவிட்டியா யோகா?'' மகனது முதுகை பிரியத்துடன் தடவிய அன்னையைப் பார்த்துத் தலையாட்டினார் யோகநாதன்.

''சாப்பிட்டுவிட்டேன்மா. பேக்டரிக்கு போக ரெடியாகிட்டு இருந்தேன். வைசாலி நீங்க என்னைப் பார்க்கணும்னு சொன்னதாக சொன்னா. அதான் வந்தேன்...''

''வேற முக்கியமான வேலை இருந்தால் நீ கிளம்பு யோகா. நாம நைட்டுக்கூட பேசிக்கலாம்...'' கூறிய அன்னையை அவசரமாக இடைமறித்தார் யோகநாதன்.

''உங்களை விட முக்கியமான எதுவும் இல்லைம்மா. எனக்கு நீங்கதான் எப்பவும் முக்கியம். ஏதாவது அவசரமான தேவை இல்லாம என்னைக் கூப்பிட்டிருக்க மாட்டீங்கன்றது எனக்குத் தெரியும்மா.''

மகனது முகத்தைக் கூர்ந்து பார்த்த பட்டம்மாள் ஒரு சிறிய பெருமூச்சுடன் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

''அவசரம்னு எதுவும் இல்லை யோகா. ஆனால் ரொம்ப அவசியம்னு நினைச்சேன். அதான் உன்னை வரச்சொல்லி சொன்னேன்'' கூறிய பட்டம்மாளின் வார்த்தைகளைக் கேட்ட யோகநாதனின் விழிகளில் சிந்தனை தோன்றியது.

''நீங்க அவசியம்னு நினைக்கிற எதுவுமே எனக்குக் கட்டளை மாதிரிம்மா. என்ன விஷயம்னு சொல்லுங்

கம்மா..." மகனது முகத்தை தீர்மானத்துடன் ஏறி
பட்டம்மாளின் முகத்தில் தீவிரம் தெரிந்தது. அதை
புன்னகையுடன் பார்த்த ஏகாம்பரத்தின் பார்வை அவ
வார்த்தைகளை ஆதரித்தது.



# 6

காலில் மாட்டியிருந்த செருப்புகளை திசைக்கொ
றாக சென்று விழும்படியாகக் காலை கோபத்துட
உதறிக்கொண்டு வீட்டிற்குள் புயல்போல் நுழை
மகளை வியப்புடன் பார்த்தார் கணபதி. அவர் அருகி
அமர்ந்திருந்த சாதனாவோ சிறிதும் வியப்பு ஏதுமி
அன்னை பூஞ்சோலையின் முகத்தைத் திருப்
பார்த்தாள். பூஞ்சோலையோ நடப்பதற்கும் தனக்கு
சம்பந்தம் எதுவும் இல்லாதது போன்ற தோற்றத்துட
அமைதியுடன் கிச்சனுக்குள் சென்று விட்டாள்.

"இங்க ஒருத்தி படாத அவமானமெல்லாம் பட்
வந்திருக்கேன் அதை என்னன்னு கேட்கக்கூட இ
வீட்டில ஒரு நாதியும் இல்லை" கோபத்துடனு
ஆத்திரத்துடனும் வெடித்த மகளின் அருகில் வந்தமர்
அவளது தலையை தடவிக் கொடுத்தார் கணபதி.

"இப்ப எதுக்காக நீ இவ்வளவு கோபமா இருக்
அதைச் சொல்லுடா முதலில்..."



"அப்பாவுக்கு பதில் சொல்வதற்கு முன்னால நான் சொல்வதையும் கொஞ்சம் கேள் சஞ்சனா. போகக் கூடாத இடத்துக்குப் போனால் படக்கூடாத அவமானமெல்லாம் பட்டுத்தான் ஆகணும்டி. உன்னை யாரு விடிஞ்சும் விடியாததுமாய் அந்த வீட்டுக்குப் போகச் சொன்னது... அப்புறம் இப்படி அவமானப்பட்டு வரச் சொன்னது?" கேட்ட சாதனாவை ஆத்திரத்துடன் முறைத்தாள் சஞ்சனா.

"இப்ப நான் உன்கிட்ட ஏதாவது சொன்னேனா? நான் அப்பாகிட்டதானே பேசிக்கிட்டு இருக்கேன்? நீ உன் வேலை என்னவோ அதை மட்டும் பாரு..." சிறிய மகளது உதாசீனப் பேச்சுகளை ஒரு பொருட்டாக எண்ணாமல் அவளைப் பார்த்துப் பேச வாய் திறந்த பெரிய மகளை சமையல் அறையில் இருந்து வந்த பூஞ்சோலையின் குரல் தடுத்து நிறுத்தியது.

"இவளையெல்லாம் சொல்லித் திருத்த முடியாது சாதனா. அதது பட்டுத் தெரிஞ்சுக்கிட்டால்தான் உண்டு. நீ உன் நேரத்தை வீணடிக்காமல் வேலைக்குக் கிளம்பும் வழியைப் பாரு" சாதனா தங்கையின் முகத்தை ஒரு நொடி அமைதியாக பார்த்துவிட்டு உடனடியாக எழுந்து தன் அறைக்குள் சென்றுவிட்டாள்.

பார்த்தீங்களாப்பா... இந்த அம்மாவுக்கு எப்போதுமே அவதான் உசத்தி. நான் என்ன செய்தாலும் அதில் ஏதாவது குற்றம் கண்டுபிடிச்சுக்கிட்டே இருக்காங்க..."

"சரி விடு சஞ்சனா. அவ குணம் தான் உனக்குத் தெரியுமே. நீதி... நேர்மை... நியாயம்னு... ஒத்தப் பைசாவுக்குப் பிரயோசனம் இல்லாததை எல்லாம்

கட்டிக்கிட்டு அழுவா. நாம அவ பேச்சை
பெரிசா எடுத்துக்கிட்டோம்னா அப்புறம்
அவளை மாதிரி மூலையில உட்கார வேண்டி
நீ என்ன நடந்ததுன்றதை சொல்லு முதலில்..."
கண்டிக்காமல் அவளுக்கு மேலும் தூபம்
கணவனை எண்ணி மனதிற்குள் பல்லைக்
பூஞ்சோலை.

"இந்த மனுசன் தானும் கெட்டுப் பிள்ளை
வாழ்க்கையையும் கெடுக்கப் போறார். ஏதோ
கடவுள் புண்ணியத்தில நாங்க எதிர்பார்க்காத
நிலைக்கு வந்திருக்கோம். இது போதும்னு
பட்டுக்காம இப்பவும் பேராசை பிடிச்ச
யுறதும் இல்லாம... பெத்த பொண்ணையும்
கெடுத்துக்கிட்டு இருக்காரு..." கணவருக்கு
விழவேண்டும் என்றே சற்று உரத்த குரலில்
கொண்டே கையில் இருந்த பாத்திரத்தை
கீழே வைத்தாள் அவள்.

"என்னடி... சத்தமெல்லாம் பெருசா இருக்கு
அப்புறம் பேசிக்கிறேன் இரு. சஞ்சனா... நீ
லுடா..." தன்னிடம் கேட்ட கணபதியை
மாறாத ஆத்திரத்துடன் ஏறிட்டாள் சஞ்சனா.

"அந்தக் கிழவி இல்லப்பா... அதான் அந்த
கிழவி... அது இன்னிக்கு என்கிட்ட நேருக்கு
சத்தம்போட்டு அவமானப் படுத்திருச்சப்பா"
கூறிய மொழிகளைக் கேட்ட கணபதியின்
சிந்தனை தோன்றியது.



ஏனெனில் பட்டம்மாள் அதுவரை கணபதியையோ சஞ்சனாவையோ நேருக்கு நேராக அவமானப் படுத்தியது இல்லை. அன்று காலையில் பட்டம்மாள் தன்னிடமும் சரியான முறையில் பேசவில்லை என்பது அப்பொழுது தான் கணபதியின் உள்ளத்தில் உறைத்தது.

"ஏன்டா சஞ்சனா... நீ ஏதாவது அவங்ககிட்ட தப்பா பேசினியா..."

"அட நீங்க வேறப்பா. நான் அந்தக் கிழவிகிட்ட பேச்சு வெச்சுக்க மாட்டேன்னு உங்களுக்குத் தெரியாதா? நான் மாமா கிட்டத்தான் பேசிக்கிட்டு இருந்தேன்."

"வெரிகுட்... வெரிகுட். அப்படித்தான் இருக்கணும். ஆனா அப்புறம் எதுக்கு அந்தம்மா உன்கிட்ட அப்படிப் பேசுச்சு?"

"அதான் தெரியலப்பா. நான் மாமாகிட்ட பேசிக்கிட்டு இருந்தேன். அவரும் என்கிட்ட ஆசையாத்தான் பேசிக்கிட்டு இருந்தார். அப்பத்தான் இந்தக் கிழவி ரூமுக்குள்ள இருந்து வெளியே வந்து எங்களைப் பார்த்து முறைச்சுச்சு. நான் அதைக் கண்டுக்கலப்பா. ஆனா மாமா அந்தக் கிழவிகிட்ட கொஞ்சம் பயப்படறாப்பா. அதனாலதான் நான் அந்தக் கிழவி மாமாவை திட்டறதுபோல இருக்கவும் குறுக்க புகுந்து பேசிட்டேன்."

"நீ செஞ்சது ஒரு வகையில் கரெக்டுதான்னாலும் நாம இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கணும் கண்ணு. உன்கிட்டதான் நான் ஆயிரம் தடவை சொல்லியிருக்கேன்ல? நாம நினைச்சதுப்படி காரியம்

நடக்கிறவரைக்கும் யாரிடமும் எந்தவிதமான பி
சினையையும் வெச்சுக்கக்கூடாதுன்னு? அப்ப
யிருந்தும் நீ ஏன் அந்தம்மாகிட்டப் போய் பேசுன..."

"என்னப்பா நீங்க? அதுக்காக அந்தக் கிழ
மாமாவைத் திட்டும்.. அதைப் பார்த்துக்கிட்டு நா
அமைதியா இருக்கணுமா? எனக்கு வந்த ஆத்திரத்து
அந்தக் கிழவியோட முடியை பிடிச்சு ஆட்டணும்போ
வெறி வந்துச்சுப்பா. ஆனா உங்களுக்காகத்தா
பொறுமையா வந்துட்டேன்."

"நல்ல வேளைடா செல்லம். இப்படியே இன்னு
கொஞ்ச நாள் பொறுமையா இருடா சஞ்சனா. நா
நினைச்சிருக்கிற மாதிரி எல்லாம் நடக்கட்டும்... அப்புற
பாரு உங்கப்பன் யாருன்றதை. அந்தக் கிழவியை மட்டு
இல்லை என் கூடப் பிறந்தவளையும் சேர்த்து எ
வெக்கணுமோ அங்க வெக்கிறேன் பாரு. அப்புறம் அ
வீட்டுல எல்லாம் நம்ம ராஜ்ஜியம்தான். உன் இஷ்டப்ப
நீ இருக்கலாம்..."

கண்களில் கனவுகள் மிதக்கக் கூறிக்கொண்டு இரு
கணபதியின் வார்த்தைகள் அனைத்தும் சஞ்சனாவி
இதயத்திற்குள் அஸ்திரங்களாகப் பாய்ந்து அங்கே
நிலைத்து நின்றது.

தந்தையின் கனவுகள் அனைத்தும் சஞ்சனாவி
கண்களிலும் தோன்ற தன் எதிர்கால வாழ்வினை ந
கண் முன் காண்பவளைப் போன்ற மகிழ்வுடன் இ
கில்லாமல் வெறித்த பார்வையுடன் அமர்ந்துவிட்டா
அவள். சஞ்சனாவின் மனதில் அவள் நடந்து கொ

35



வேண்டிய முறை பற்றிய திட்டம் தோன்றத் தொடங்கியது.

# 7

ஹாலில் இருந்த டிவியில் புதுப்பாடல் ஒலித்துக் கொண்டிருக்க கையில் டிவி ரிமோட்டுடன் அமர்ந்திருந்த பிரசன்னாவின் பார்வையோ டிவியைப் பார்க்காமல் அதன் பின்னால் இருந்த சுவற்றை வெறித்துக் கொண்டிருந்தது.

பட்டம்மாளின் கோபத்திற்கான காரணம் புரிந்தும் புரியாமலுமாக இருவகையில் அவனது சிந்தனையை சிதறடித்துக் கொண்டிருந்தது. எது எப்படியிருந்தாலும் தன்னுடைய கோபத்தை பட்டம்மாள் சஞ்சனாவிடம் காட்டியதை மட்டும் பிரசன்னாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பிரசன்னாவைப் பொறுத்தவரையில் சஞ்சனா ஒரு குழந்தையைப்போன்ற குணமுடையவள். அவளுக்கு கள்ளம் கபடம் தெரியாது. சந்தோஷத்தையும் துக்கத்தையும் அடக்கிக் கொள்ளும் மனப்பான்மை இல்லாமல் அந்தந்த உணர்வுகளை உடனுக்குடன் வெளிப்படுத்தி விடும் குணமுள்ளவள். சஞ்சனா பிரசன்னாவிடம் தன்னைப் பற்றி உருவாக்கியிருந்த தோற்றம் இதுதான்.

ஆனால் அந்தத் தோற்றம் உண்மையானதா இல்ல
போலியானதா என்ற ஆராய்ச்சியே அதுவரை பிரசன்ன
விடம் தோன்றியது இல்லை. அவனைப் பொறுத்
வரையில் அவன் சஞ்சனாவின் மீது ஒரு வித ஈர்ப்புட
இருப்பதையே அவனது உண்மையான அன்பாக அவ
எண்ணிக் கொண்டிருந்தான்.

அன்னை தந்தையருடன் பேசிவிட்டு அவர்க
அறையில் இருந்து வெளிவந்த யோகநாதனி
முகத்தில் குழப்பம் தோன்றியிருந்தது. அவரது கண்க
இலக்கற்று வெறித்துக் கொண்டிருந்த பிரசன்னாவி
மீது சிந்தனையுடன் பாய்ந்தது. தந்தையின் கண்க
தன்மீது படிந்து ஆராய்ந்து கொண்டிருப்பதைக்கூ
அறியாதவனாக புருவங்கள் அங்கே மனதில் இருந்
கோபத்தை மறைக்காமல் முகத்தில் காட்டியபடி அம
திருந்தான் பிரசன்னா.

கணவனது கண்களையும் குழப்பமான முகத்தினை
யுமே கேள்வியுடன் பார்த்துக்கொண்டே அவர் அருகி
வந்த வைசாலி கணவனின் பார்வை பிரசன்னாவை
ஆராய்ந்து கொண்டிருப்பதை பார்த்து அவரது குழப்ப
தனக்குள் தோன்றிவிட மெதுவாக யோகநாதனின் அ
கில் வந்தாள். தன் அருகில் வந்து தன் முகம் நோக்கி
மனைவிக்கு பார்வையையே பதிலாகக் கொடுத்
யோகநாதன் பிரசன்னாவின் அருகில் அமர்ந்து அவ
தோளில் கை வைத்தார்.

யோகநாதனின் தொடுகையில் தன் உணர்வுக்
வந்த பிரசன்னா திடுக்கிட்டவனாக தந்தையின் முக
தைப் பார்த்தான்.



"அப்பா!?" திடுக்கிட்ட குரலில் கேட்ட பிரசன்னா வின் கையில் இருந்த ரிமோட்டை வாங்கி டிவியை அணைத்துவிட்டு பிரசன்னாவைப் பார்த்து அமைதி யுடன் புன்னகைத்தார் யோகநாதன்.

"மணி பதினொன்றாகப் போகுது பிரசன்னா. நீ இன்னும் கடைக்குக் கிளம்பலையா?" பிரசன்னாவின் ஷாப்பிங் மாலை கடை என்றுதான் கூறுவார் யோக நாதன். அவரது வார்த்தைகளைக் கேட்ட பிரசன்னாவின் பார்வை அவசரமாக சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தின் மீது படிந்து மீண்டது.

"சாரிப்பா... நான்... எனக்கு டைம் போனதே தெரியவில்லைப்பா. அதுவந்து... டிவி பார்த்துவிட்டு இருந்தேனா... அதான்" குற்ற உணர்வுடன் தந்தையின் பார்வையைத் தவிர்த்தான் பிரசன்னா.

"அதனால் என்னப்பா? போகட்டும் விடு. ஆனால் நீ டிவியைக் கூட அத்தனை இன்ட்ரஸ்ட்டாய் பார்த்தது போல தெரியலியே? ஏதாவது பிரச்சினையா பிர சன்னா? எதுவாக இருந்தாலும் நீ என்னிடம் தாராளமாய் சொல்லலாம் பிரசன்னா. அது எதுவாக இருந்தாலும்.." குரலில் அழுத்தத்துடன் கேட்டார் யோகநாதன்.

"அதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்லப்பா. நான் கொஞ்சம் மூடு அவுட்டா ஃபீல் பண்ணினேன்ப்பா. வேற ஒண்ணும் இல்லை..."

"கோடிக்கணக்கில் காசைப்போட்டு பிஸினெஸ் ஆரம்பிச்சு அதனையும் சக்சஸா நடத்திக்கிட்டு இருக்கிற புத்திசாலி நீ. வளர்ந்துக்கிட்டு இருக்கிற பிஸினெஸ்

மேன். உன் சின்னச் சின்ன மூடு அவுட்டெல்
உன்னோட தொழிலைப் பாதிக்கிற அளவுக்கு நீ
துக்கக்கூடாது பிரசன்னா. அதுக்காக உன்
உணர்ச்சிகள் இல்லாத மிஷினாக வேலை பார்
சொல்லவில்லை. ஆனால் அந்த உணர்வுகள் உ
னையே முழுங்கிவிடக் கூடாதுன்னுதான் சொல்றேன்

"சரிங்கப்பா..." தந்தையிடம் கூறிக்கொண்டிரு
பிரசன்னா பார்வை வாசலைப் பார்த்து மீண்ட
மனதில் குறித்துக் கொண்டார் யோகநாதன்.

"பெரியவங்க சொல்வது செய்வது எல்லாம் உ
நன்மைக்காக மட்டும் தான் என்பதை நினைவி
வைத்துக்கொள் பிரசன்னா. அதிலும் நம் வீட்டி
உனக்கு நான் எதையும் எடுத்துச் சொல்ல வேண்
தேவை இல்லப்பா. ஏன்னா நானே உன்மேல நம்பிக்
இல்லாமல் பேசினபோது கூட உன் பாட்டி எ
அத்தனை பேரையும் எதிர்த்து நின்னு உன்னை ஜெயி
வெச்சவங்க. அவங்க என்னிக்கும் உனக்கு கெடு
பண்ண நினைக்க மாட்டாங்கப்பா..."

"பாட்டி ஏதாவது சொன்னாங்களாப்பா?" கோ
குரலில் கேட்ட மகனது முதுகைச் சுற்றிக் கைகொடுத்
தன் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டார் யோ
நாதன்.

"உன் பாட்டி உன்னைப் பற்றி என்னிக்கும் கு
சொல்ல மாட்டாங்க பிரசன்னா. அவங்களைப் பத்
இப்படி ஒரு கேள்வி கேட்டேன்னு தெரிஞ்சா
துடிச்சுப் போயிடுவாங்க..." யோகநாதனின் குரல்



தெரிந்த குற்றச்சாட்டு பிரசன்னாவின் இதயத்தை சுட்டது.

"சாரிப்பா... நான் ஏதோ ஒரு டென்சனில் இப்படி கேட்டுட்டேன்ப்பா. இதை பாட்டிகிட்ட சொல்லிடா தீங்கப்பா..." கெஞ்சும் குரலில் கூறிய மகனை கண்ணோடு கண்ணாக அழுத்தமாகப் பார்த்தார் யோகநாதன்.

"மறுபடியும் தப்புப் பண்ற பிரசன்னா. நான் உன் அப்பா மட்டும் இல்லை. என் அம்மாவுக்கு மகனும் கூட. அவங்க மனசு நோகற வார்த்தைகளை அவங்ககிட்ட நான் சொல்லவும் மாட்டேன், மத்தவங்க அப்படிப் பேசறதை நான் அனுமதிக்கவும் மாட்டேன்..." யோகநாதனின் வார்த்தைகள் மறைமுகமாகத் தன்னையும் எச்சரிப்பதைப் புரிந்து கொண்டான் பிரசன்னா. அவன் எதையும் மறுக்கும் எண்ணமில்லாதவனாக தலையைக் குனிந்து கொண்டான்.

"மற்ற வீடுகளில் எப்படியோ... அது எனக்குத் தெரியாது பிரசன்னா. ஆனால் நம் வீட்டில் உன் தாத்தா, பாட்டிதான் எல்லாமே. இந்த வீட்டின் நல்லது கெட்டது எல்லாவற்றையும் தீர்மானிக்கும் உரிமை அவங்களுக்கு மட்டும்தான் இங்க இருக்கு. அவங்க கோபமா பேசினாலோ... இல்லை... யாரையாவது கண்டிச்சாலோ... அதுக்கு நிச்சயம் ஒரு காரணம் இருக்கும். ஏன்னா எங்கம்மா அத்தனை பேரையும் அரவணைச்சுப் போறதில் தெய்வத்துக்கு ஒப்பானவங்க. அவங்களுக்கு கோபம் வருவதைப்போல யார் நடந்துக்கிட்டாலும் அதை என்னால பொறுத்துக்க முடியாது. அது நீயாக

இருந்தாலும்...” யோகநாதன் மெல்லிய குரலில் தாழ்ந்து கூறிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாகத்தான் உச்சரித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவர் பேச்சில் தெரிந்த எச்சரிக்கை ஒவ்வொன்றும் அங்கிருந்த அனைவரின் மனதிலும் ஆணி அடித்தது போல ஆழமாக இறங்கியது. வைசாலி கணவனின் கோபத்தைத் தணிக்கும் வகையில் அவர் அருகில் அமர்ந்து அவர் கைமீது தன் கைவைத்து அழுத்தினாள். மனைவியின் குறிப்பு அறிந்த யோகநாதன் அமைதியுடன் பிரசன்னாவின் கைகளில் தட்டிக் கொடுக்க பிரசன்னாவின் கண்களில் லேசான கலக்கம் தோன்றியது.

## 8

அந்தப் பெரிய மாளிகையின் ஹாலில் சுற்றிய பேனின் சத்தமே அனைவரின் காதுகளிலும் பெரும் ஓசையுடன் ஒலிப்பது போன்று இருந்தது. அங்கிருந்த அனைவரும் தத்தமது சிந்தனைகளில் ஆழ்ந்துவிட்டவர்களாக அமர்ந்திருக்க அவர்களை சுற்றிருந்த வேலையாட்களோ அவர்களது சிந்தனையைக் கலைக்கும் தைரியம் இல்லாதவர்களாக ஓசையின்றி அவர்களது வேலைகளை செய்து கொண்டிருந்தார்கள்.



அந்தப் பெரும் அமைதியைக் குலைப்பது போன்ற சிரிப்பொலியைக் கேட்ட யோகநாதனின் புருவங்கள் முடிச்சிட்டது. அவர் அமைதியாகத் திரும்பி தன் அருகில் அமர்ந்து இருந்த வைசாலியைப் பார்த்தார். கணவனின் பார்வையைப் புரிந்து கொண்ட வைசாலியோ செய்வதறியாமல் திகைப்புடன் வாசலைப் பார்த்தாள்.

எப்பொழுதும் போன்ற அட்டகாசமான சிரிப்புடன் மகளுடன் சத்தமாகப் பேசிக்கொண்டே வந்த கணபதி ஒரு வித ஆணவமான நிமிர்வுடன் காலில் இருந்த செருப்புக்களைக் கழற்றி விட்டு ஹாலுக்குள் நுழைந்தார்.

அவருடன் வந்த சஞ்சனாவும் தந்தையின் பலத்த குரலுக்குக் குறையாத ஓசையுடன் வேண்டுமென்றே சிரிப்பவளைப் போன்று சிரிப்புடன் வந்து கொண்டிருந்தாள்.

ஹாலுக்குள் நுழைந்த கணபதி சுவாதீனமாகப் பார்வையைச் சுழற்றியவர் ஹாலில் இருந்த சோபாவில் மகனுடன் அமர்ந்திருந்த யோகநாதனைக் கண்டவுடன் திகைப்புடன் நின்று விட்டார். அந்த நேரத்தில் அங்கு யோகநாதனை அவர் எதிர்பார்க்கவில்லை என்பது கணபதியின் திகைப்பிலேயே நன்றாக தெரிந்தது.

தந்தையைத் தொடர்ந்து தன் பார்வையை ஓடவிட்ட சஞ்சனாவும் தன் சிரிப்பு உதட்டிலேயே உறைய திகைப்புடன் கணபதியைப் பார்த்தாள். மகளது பார்வையை உணர்ந்து ஒரு நொடியிலேயே தன் இயல்பான நிலைக்குத் திரும்பிவிட்ட கணபதி பணிவான புன்

வளைகளை உதட்டில் வரவழைத்துக் கொண்டு யோ[illegible]
நாதனின் எதிரில் சென்று நின்றார்.

"என்ன மாப்பிள்ளை அதிசயமா இருக்கு! இன்னி[illegible]
மழை கொட்டப்போகுது பாருங்க! இந்த நேரத்தில் நீ[illegible]
வீட்டில் இருக்கீங்களே!"

"என் வீட்டில் நான் இருக்கிறதுக்கு நேர கால[illegible]
பார்க்கவேண்டிய அவசியமெல்லாம் இல்லை கணபதி[illegible]
ஆனால் நீ எங்க இந்த நேரத்துக்கு இங்க வந்திருக்[illegible]
உன் மகள் இன்னிக்கு காலேஜ் போகலியா?" யோ[illegible]
நாதனின் முகத்தில் தெரிந்த மாற்றத்தை கணப[illegible]
மனதிற்குள் குறித்துக் கொண்டார்.

தன் மனதில் தோன்றிய எச்சரிக்கை உணர்[illegible]
தன்னுடைய அசட்டுச் சிரிப்பால் மறைத்துக் கொண்[illegible]
யோகநாதனைப் பார்த்தார் அவர்.

"நானும் நம்ம வீட்டுக்கு எப்ப வேணும்னாலு[illegible]
வரலாம்தானே மாப்பிள்ளை? அத்தோட சஞ்சனாவுக்[illegible]
காலையில் இருந்தே கொஞ்சம் உடம்புக்கு முடியல[illegible]
அதான் லேட்டா காலேஜுக்கு போகுது..."

"உடம்புக்கு முடியலைன்னா லீவு போட வே[illegible]
டியது தான கணபதி? உன் பொண்ணுக்கு படிப்பு மே[illegible]
இவ்வளவு அக்கறையா... முடியாத அன்னிக்கு க[illegible]
காலேஜுக்கு லீவு போட மாட்டாளா?"

"இல்லை அங்கிள். இன்னிக்கு எனக்கு ஒரு மு[illegible]
கியமான டெஸ்ட் இருக்குது. அதனால நான் காலே[illegible]
போயே ஆகணும்" தந்தையை முந்திக்கொண்[illegible]



யோகநாதனின் கேள்விக்கு கொஞ்சலாக பதிலளித்தாள்
சஞ்சனா.

அவளது கொஞ்சலான பேச்சில் கவரப்பட்டவனாக
நிமிர்ந்து அவளைப் பார்த்த பிரசன்னாவின் கண்களில்
கிறக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

முகத்தில் வெற்றிக் குறியுடன் சஞ்சனா திரும்பிக்
கணபதியைப் பார்க்க அவளது பார்வையைக் கண்ட
யோகநாதனின் முகம் கறுத்தது. அவர் மெதுவாக தன்
தொண்டையை செறுமிக் கொண்டு தன்நிலைக்கு
வந்தார்.

"அத்தனை முக்கியமான டெஸ்டுக்குப் படிக்காமல்
காலங்கார்த்தால உனக்கு இங்க வந்து என்னம்மா பேச்சு
வேண்டிக் கிடக்கு? டெஸ்டைவிட உனக்கு வெட்டி
அரட்டை முக்கியமாப் போச்சா?" குத்தலாகக் கேட்டார்
அவர்.

"அது என்ன அங்கிள் அப்படிக் கேட்கிறீங்க?
எனக்கு பொழுது விடிஞ்சா மாமா முகத்தைப் பார்த்
தால்தான் வேலையே ஓடும். எனக்கு விவரம் தெரிஞ்
சதில் இருந்து நான் இப்படித்தான மாமா இருக்கேன்?
மாமாவைப் பார்க்காமல் நான் என்னிக்கு இருந்திருக்
கேன்... என்னால் அது மட்டும் முடியாது அங்கிள்..."
யோகநாதனுக்கு பதில் அளித்தாலும் சஞ்சனாவின்
விழிகள் பிரசன்னாவை விழுங்கிக் கொண்டிருந்தது.

சஞ்சனா கூறிய பதிலில் ஒன்றும் தெரியாத அப்
பாவித்தனம் இருந்தது. ஆனால் அவள் பார்வை அவளது
அப்பாவித்தனம் போலியானது என்பதை யோகநாத
னுக்கு தெள்ளத் தெளிவாகவே புரிய வைத்தது.

நாகரீகமாக வெட்டி விடப்பட்ட கூந்தலை வி... விட்டு தோள் வழியாக முன்புறமாகப் படர விட்... இருந்த சஞ்சனாவின் சுடிதாரின் முன்புறம் அ... காமான வளைவுகள் தெளிவாக தெரியும்படியா கவ... புடன் காட்சியளிக்க அதனை மறைக்க முடியாம... ஸ்டைலாக சுடிதாரின் துப்பட்டாவை கவனம... கழுத்தைச் சுற்றி அணிந்து கொண்டிருந்த சஞ்சனாவை... கண்களில் அருவெறுப்புடன் பார்த்தார் யோகநாத... ஆனால் அவரது பார்வைக்கெல்லாம் அசராத சஞ்சன... மெதுவாகச் சென்று பிரசன்னாவின் எதிரில் இருந்... சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அனைவரின் எதிரில் தன்முன் வந்து உரிமையுட... அமர்ந்த சஞ்சனாவின் செயல் பிரசன்னாவின் மனை... வெகுவாகக் கவர்ந்தது. அவன் குனிந்து பிரசன்ன... விடம் எதையோ கூற அவளது கவர்ச்சியான தோ... ற்றத்தை விட்டுக் கண்களை அகற்ற முடியாத சங்கட... துடன் யோகநாதனைப் பார்த்துவிட்டு வேகமா... எழுந்த பிரசன்னா தன் அறைக்குள் சென்று மறைந்... விட்டான்.

தான் இருக்கையிலே தன் கண் முன்னால் நடந்... அத்தனை நாடகங்களையும் மனம் வலிக்கப் பார்த்து... கொண்டே ஒரு பார்வையாளராக தான் இருக்க வேண்... டிய சூழ்நிலையை எண்ணி மனதிற்குள் குமைந்... கொள்வதைத் தவிர யோகநாதனால் வேறு எதுவ... செய்ய முடியாமல் போனது.

சஞ்சனாவையும் கணபதியையும் தன் வீட்டிற்கு... நுழைய முடியாத வகையில் செய்துவிட யோகநா...



னுக்கு ஒரு நொடி போதும். ஆனால் அவரது நடவடிக்கையினால் பிரசன்னாவின் எதிர்ப்புக்கு தான் ஆளாக நேரிட்டு விடுமோ என்ற பயம் யோகநாதனை எந்த முடிவையும் எடுக்க முடியாதபடி கட்டிப் போட்டது.

அதுவரையில் இலைமறை காய்மறையாக அரங்கேறிக் கொண்டிருக்கும் நாடகம், யோகநாதனின் எதிர்ப்பால் உறுதியான உறவாக மாறிவிடக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக அஞ்சினார் யோகநாதன்.

பிரசன்னா வாய் திறந்து சஞ்சனாவை அவன் விரும்புவதாகத் தெரிவித்துவிட்டால் அதன் பிறகு கணபதியின் ஆட்டம் அளவில்லாமல் போய்விடும் என்பதை அறிந்துகொண்ட யோகநாதன் வேறு வழியின்றி அமைதியைக் கடைப்பிடித்தவராக கணபதியை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தார்.

ஐந்தே நிமிடங்களில் அறையில் இருந்து வெளிப்பட்ட பிரசன்னா அலுவலகம் செல்லத் தயார் நிலையில் இருந்தான். கையில் கார் சாவியுடன் சஞ்சனாவை மயக்கத்துடன் பார்த்துக் கொண்டே வந்தவன் அவள் அருகில் வந்து தலையசைத்தான். அவனது அழைப்பிற்காகவே காத்திருந்த சஞ்சனா ஒருவித உற்சாகத்துடன் குதித்துக் கொண்டு எழுந்து பிரசன்னாவின் அருகில் சென்று நெருங்கி நின்றாள்.

"அப்பா நான் கிளம்பட்டுமா? எனக்கும் கடைக்கு லேட்டாகிருச்சே?" அனுமதிக்காக காத்திருக்கும் தொனியில் கேட்ட மகனை வேதனையுடன் ஏறிட்டார் யோகநாதன்.

"சரிப்பா... நானும் பேக்டரிக்குப் போகணும். கிளம்பு..." மகனிடம் கூறிவிட்டு அங்கு ஒரு நொடியு நிற்கப் பிடிக்காதவராக வேதனையுடன் வெளியே கணவனைப் பார்த்த வைசாலியின் இதயம் துடித்தது.

"அண்ணா... நீ செய்யும் எதுவுமே எனக்குப் பிடி கலை... இதெல்லாம் என்ன நாடகம்..." தாழ்ந்த குரலி கணபதியிடம் சீறினாள் வைசாலி.

"உன் வேலை என்னவோ அதைப்பாரு வைசாலி தேவையில்லாமல் என்னிடம் சீறுகிற வேலையெ லாம் வேண்டாம். நீ மட்டும் கோடீஸ்வரனைக் க யாணம் பண்ணிக்கிட்டு சொகுசாக வாழலாம். அதே வாழ்க்கையை என் மக வாழக்கூடாதா? நியாயம பார்த்தா இதையெல்லாம் நீதான் முன்னாடி நின்னு செஞ்சிருக்கணும். நீ மட்டும் என் மகளுக்கு சப்போர் டாக இருந்திருந்தால் நான் எதுக்காக இத்தனை நாடக நடத்தணும்? ஏதோ என் மக கொஞ்சம் சாமர்த்தி சாலியாக இருப்பதால் அவ வாழ்க்கை நன்றாக இருக்க போகுது... அதையும் கெடுத்துவிட்டேனா நான் மனுச இருக்க மாட்டேன். தெரிஞ்சுக்க" அடிக்குரலில் த கையைப் போன்றே அவளிடம் சீறிய கணபதியி முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் அஞ்சியவளாக சமைய அறைக்குள் சென்றுவிட்டாள் வைசாலி. பிரசன்னாவுட இணைந்து சென்ற சஞ்சனா அலட்சியமாகத் திரும்பி சிரிக்க அவளுக்கு உற்சாகமாக கையாட்டி விடைகொடு தார் கணபதி.



# 9

பச்சைப் பட்டாக சாலையின் இருபுறங்களிலும் வயல் வரப்புகள் பசுமையாக விரிந்திருந்தது. வயல் வெளிகளின் பசுமை கலந்த சில்லென்ற காற்று முகத்தில் அறைந்து கூந்தலைக் கலைக்க அதனை ஆழமாக மூச்சிழுத்து உள்ளே நிரப்பிக் கொண்டான் பிரசன்னா. எப்பொழுதுமே பசுமையுடன் கலந்த இயற்கைக் காற்று அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

ஒரு மணி நேரமாக கண்ணாடியின் முன் நின்று அழகாகத் தோளில் படியும்படியாக கஷ்டப்பட்டுச் சீவி செட் பண்ணி வைத்திருந்த கூந்தலைக் கலைத்த காற்றுக்கு முகம் சுளித்து காரின் கண்ணாடிகளை ஏற்றிவிட்டு காரின் ஏஸியை ஆன் பண்ணினாள் சஞ்சனா.

அவளது இந்தச் செயலுக்குப் பழகியிருந்த பிரசன்னா திரும்பி சஞ்சனாவைப் பார்த்து புன்னகைத்தான்.

"ம்ம்ம்... இந்த ஏஸியின் குளிர்ச்சியை விட்டு விட்டு ஏன் தான் கார் கண்ணாடியை இறக்கியே வெச்சிருக்கீங்களோ தெரியலை மாமா. பட் ஐ லவ் திஸ் சில்னெஸ்... ம்ம்ம்..." கண்மூடிக் குளிர்ச்சியை அனுபவிக்கும் குழந்தையின்

பாவனையுடன் பிரசன்னாவின் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள் சஞ்சனா.

சஞ்சனாவின் நெருக்கம் ஒரு பக்கம் மனதை கிற கடிக்க, அவள் அப்படிச் சாய்ந்து அமர்ந்திருந்த தோரணை யில் அவளது முன்புறக் கழுத்து வளைவுகள் எடுப்பு கண்களில் அறைந்து பிரசன்னாவின் ஆண்மையை தூண்டியது. அவன் தாங்க முடியாத தவிப்புடன் சஞ் னாவின் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண் டான். பிரசன்னாவின் அணைப்பில் கிளர்ச்சியு சஞ்சனா மேலும் நெருங்கி அமர பிரசன்னாவி உடலில் வெப்பத்தீ படரத் தொடங்கியது. அவன் தவி புடன் அவள் தலையோடு தன் தலையை சாய்த்து கொண்டான்.

''மாமா...'' கொஞ்சலான கிறங்கடிக்கும் குரலி அழைத்தாள் சஞ்சனா.

''ம்ம்...?'' கிறக்கத்துடன் கேட்டான் பிரசன்னா.

''எனக்கு உங்க மேல கோபம் மாமா. உங்க கிட் பேசவே கூடாதுன்னு நினைச்சேன். ஆனா... இப்படி சிணுங்கிக் கொண்டே நிமிர்ந்தவளை சிரிப்பு பார்த்தான் பிரசன்னா.

''ஏய்... இப்ப என்மேல என்ன கோபம் உனக்கு? நா என்ன செஞ்சேன்?''

''நீங்க ஒண்ணும் செய்யலைதான். ஆனா உங் பாட்டி என்னைத் திட்டறபோது சும்மா நின்னு வேடிக்கை



''பாட்டியோட குணம்தான் உனக்குத் தெரியும்தான சஞ்சனா? அதனாலதான் நான் எழுந்து கிச்சனுக்குப் போனேன். நீ எதுக்காக அங்க வந்த? உன்னை யார் வரச்சொன்னது?''

''அது என் வீடு மாமா. நான் எங்க வேணும்னாலும் வருவேன். அதை யாரு கேட்குறது? ஆனா உங்க பாட்டி மட்டும் என்னை இன்னும் அந்த வீட்டுப் பொண்ணா ஏத்துக்கவே இல்லையே மாமா. அதுதான் எனக்கும் கஷ்டமா இருக்கு...'' அழுகைக் குரலில் கூறிவிட்டு வராத கண்ணீரை நாசூக்காக கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள் சஞ்சனா.

அத்தனை நேரம் சஞ்சனா காட்டிய நெருக்கத்தில் கிறங்கிப் போயிருந்த பிரசன்னா அவளது அழுகையைக் கண்டு துடித்துப் போனான்.

''சஞ்சு... என்னடா இது? பாட்டி பேசறதையெல்லாம் நீ இப்படி தப்பாக நினைக்கலாமா. அவங்க பெரியவங் கடா. ஏதாவது கோபத்தில் பேசினாலும் நாம பொறுத்துப் போகணும் சஞ்சனா.''

அதுக்காக வீட்டில அத்தனை வேலைக்காரங்க முன்னாடியும் என்னை இன்சல்ட் பண்ணலாமா மாமா? எனக்கு எவ்வளவு அவமானமா இருந்துச்சு தெரியுமா? எங்க வீட்டில் அப்பா அம்மா ரெண்டுபேரும் என்னைத் தாங்குவாங்க... தெரியும் தான மாமா. அப்படி இருக் கிறப்ப இவங்க இவ்வளவு பேசியும் நான் ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேசாமல் இருந்தது உங்க ஒருத்தருக்

கூறியதைக் கேட்ட பிரசன்னா உண்மையிலே
உருகித்தான் போய் விட்டான்.

''எனக்குத் தெரியும் சஞ்சு. உனக்கு என்மே
எவ்வளவு அன்பு இருக்குன்றது எனக்குத் தெரியு
என்ன? நீ மட்டும் கொஞ்சம் பொறுமையாக இ
சஞ்சனா...''

''இன்னும் எத்தனை நாள்தான் நான் இப்படி
பொறுமையா இருக்கிறது மாமா? அவங்களைப் பே
விட்டுட்டு நீங்களும் இன்னும் எத்தனை நாளு
வேடிக்கை பார்ப்பீங்க மாமா? அதையும் சொ
விடுங்க...''

''பாட்டியை நான் எதிர்த்துப் பேச மாட்டேன்
உனக்குத் தெரியுமே சஞ்சனா? அதை மட்டும் நா
என்னிக்கும் செய்ய மாட்டேன்.''

''அப்புறம் என்னை என்னதான்...''

''கொஞ்சம் பொறு சஞ்சனா. தாத்தாவின் உடம்பு
கொஞ்சமாவது சரியாகட்டும். அதன் பின்னால்தா
நம்மளைப் பத்தி நான் வீட்டுல பேசமுடியும். அது
முன்னால எதையும் பேச என் மனசும் ஒத்துக்காது
அதனால நீ கண்டிப்பா வெய்ட் பண்ணித்தான் ஆகணு
சஞ்சு...'' குழந்தைக்கு எடுத்துக் கூறும் பொறுமையுட
கூறிக்கொண்டிருந்தவனைப் பார்த்து மனதிற்கு
பல்லைக் கடித்தாள் சஞ்சனா.

'போடா இவனே... ஒரு கிழவியை எதுத்துப் பே
தைரியம் இல்லாத உன்னைக் கட்டிக்கிட்டு நா



மட்டும் என் கழுத்துல மூணு முடிச்சைப் போடு...
அதுக்குப் பிறகு நான் அந்தக் கிழவியை மட்டும்
இல்ல... உன்னையும் என்ன ஆட்டு ஆட்டி வைக்கப்
போறேன்னு பாரு...' மனதிற்குள் கறுவிக்கொண்டே
சாலையை வெறித்தபடி அமர்ந்திருந்த சஞ்சனாவின்
அமைதி பிரசன்னாவின் மனதைப் பாதித்தது.

அவன் சஞ்சனா தன் மேல் இருக்கும் வருத்தத்தால்
அமைதியுடன் இருப்பதாக எண்ணிக் கொண்டு காரை
சாலை ஓரமாக நிறுத்திவிட்டு வேகமாக திரும்பி
சஞ்சனாவைப் பார்த்தான்.

''என்ன சஞ்சு... நான் இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் நீ புரிஞ்சுக்கலைன்னா எப்படிடா? எனக்குக்
கொஞ்சம் டைம் கொடு சஞ்சனா. நான் எல்லாத்தையும்
சரி பண்றேன்டா என் மேல உனக்கு நம்பிக்கை
இல்லையா...?'' பிரசன்னாவின் கெஞ்சலை மனதிற்குள்
ரசித்தபடியே போனால் போகிறதென்று பிரசன்னாவைப்
பார்த்து லேசாக சிரித்து வைத்தாள் சஞ்சனா.

''அப்பாடி! என் சஞ்சுக்குட்டி சிரிச்சால்தான் எனக்கு
நிம்மதியா இருக்கு. நீ இப்படியே சிரிச்சுக்கிட்டே இரு
சஞ்சு. உன் மாமா நான் இருக்கேன்டா. உனக்காக நான்
என்ன வேணும்னாலும் செய்வேன்டா. நீ கவலைப்
படாதே...''

சஞ்சனாவின் முகத்தில் தெரிந்த சிரிப்பைப் பார்த்த
நிம்மதியுடன் காரைக் கிளப்பிய பிரசன்னாவைப் பார்த்த
சஞ்சனாவிற்கு மனதிற்குள் சிரிப்பு வந்தது. இவன் இப்படி
இருக்கும் வரை தன் எதிர்காலத் திட்டத்

திற்கு ஆபத்தில்லை என்று மனதிற்குள் உறுதியுடன் எண்ணிக் கொண்டு இறுமாப்புடன் காரில் சீட்டில் சாய்ந்து அமர்ந்தாள். சஞ்சனாவின் கண்கள் ஒரு வித மமதையுடன் அந்த வெளிநாட்டுக் காரை அலட்சியத்துடன் சுற்றி வந்தது. இனி இவை எல்லாவற்றிற்கும் தான்தான் உரிமைக்காரி என்ற கர்வம் அவள் இதயத்தில் சிம்மாசனம் இட்டு அமர்ந்தது.



# 10

நகரின் மையப்பகுதியில் இருந்த அந்தப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸிற்குள் காரைச் செலுத்தி உரிமையாளரின் கார் நிற்கும் இடத்தில் தன் காரை விட்டு இறங்கிய பிரசன்னாவுடன் ஒரு வித திமிரான நிமிர்வுடன் இறங்கினாள் சஞ்சனா.

அவளது பார்வை அங்கிருந்த பணியாளர்கள் அனைவரின் மீதும் அதிகாரத்துடன் பாய்ந்தது. அவளது பார்வையைக் கண்ட பணியாளர்கள் அனைவருமே சஞ்சனாவின் பார்வையைத் தவிர்க்கும் பொருட்டு தலை குனிந்து கொள்ள அதையே பெரும் மரியாதையாக எண்ணிய சஞ்சனாவின் இதழ்கள் ஏளனமாக வளைந்தது.

எப்பொழுதும் போல பிரசன்னா காரை விட்டு இறங்கிய உடனேயே தன்னுடன் வந்த சஞ்சனாவின்

53



நினைவு கூட இல்லாதவனாக விரைந்து காம்ப்ளக்சின் உள்ளே செல்ல அவனது வேக நடைக்கு இணையாக நடக்க முடியாமல் ஏறக்குறைய அவனைத் தொடர்ந்து ஓடிய சஞ்சனாவைப் பார்த்த பணியாட்கள் அனைவரின் முகத்திலும் ஒரு சந்தோஷப் புன்முறுவல் தோன்றியது. அவர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டபடியே தத்தமது வேலைகளைத் தொடர்ந்தார்கள்.

வேகமாக நடந்த சென்ற பிரசன்னா தன் அறைக்குள் நுழைவதற்காக கதவைத் திறந்தான். கதவைத் திறந்தவனின் முகத்தில் தெரிந்த புன்சிரிப்பு மறைந்து அவனது புருவங்கள் முடிச்சிட அறைக்குள் நுழையத் தயங்கியவனாக நின்ற பிரசன்னா அவனைத் தொடர்ந்து மூச்சிரைக்க ஓடிவந்த சஞ்சனா கேள்வியாகப் பார்த்தாள். ஏற்கனவே தன்னுடன் இணைந்து நடந்து வராமல் வேகமாக வந்துவிட்டவன் அறைக்குள் நுழைந்து அமரவும் விடாமல் வழியை மறைத்துக் கொண்டு நின்றிருந்தது அவளுக்குள் எரிச்சலை உண்டு பண்ணியது. ஆனால் அவள் தன் எரிச்சலைக் காட்டும் சமயம் அதுவல்ல என்பதனால் அதை மறைத்து ஒயிலாக அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

''என்னாச்சு மாமா... நம்ம ரூமுக்குள் போக நீங்க ஏன் இவ்வளவு தயங்குறீங்க?'' கேட்டவளை யோசனையுடன் மேலும் கீழுமாக பார்த்தான் பிரசன்னா.

''மாமா...?'' சஞ்சனாவின் கொஞ்சலை அந்த நேரத்தில் பிரசன்னா ரசிக்கவில்லை என்பதை அவனது முகம் காட்டியது.

''ம்ப்ச்... நான் தயங்கி நின்றால் ஏதாவது கார இருக்கும் என்பது கூட உனக்குப் புரியாதா?'' எரி ஓடன் கேட்டான் பிரசன்னா.

''அதைத்தான் நான் கேட்கிறேன் மாமா...'' அழு மாக வந்தது சஞ்சனாவின் குரல்.

''உள்ளே தினேசும் என்னோட பிரண்ட்சும் வந் உட்கார்ந்திருக்காங்க... நீ முதலில் காலேஜ் கிளம்பு அவனது பேச்சைக் கேட்டவளின் முகத்தில் தோன்றி பிரகாசம் பிரசன்னாவின் உள்ளத்தில் கோபத்தீ மூட்டியது.

''யாரு!! தினேசா!! உள்ளேயா உட்கார்ந்தி கார்! அதுக்கு ஏன் மாமா...'' ஆவலுடன் அறைக்கு செல்ல முயன்ற சஞ்சனாவின் கைப்பற்றி நிறுத்தின பிரசன்னா.

''நான் சொன்னது உன் காதில் விழவில்லை சஞ்சனா? உன்னை முதலில் காலேஜுக்குக் கிளம்ப சொன்னேன்...'' கீழ் உதட்டை பற்களால் கோபத்துட கடித்துக் கொண்ட பிரசன்னாவை ஒன்றும் புரியா அப்பாவிபோல தலை சாய்த்துப் பார்த்தாள் சஞ்சனா.

''காலேஜுக்கா... அங்க போய் என்ன பண்றது? இன்னிக்கு எனக்கு காலேஜ் லீவு மாமா...''

''என்னது!?'' அதிர்ச்சியுடன் கேட்ட பிரசன்னாவை பார்த்து வாய்பொத்தி கேலியுடன் சிரித்தாள் சஞ்சனா.

''ஆமாம் மாமா... இன்னிக்கு எனக்கு லீவு. நான்தா இன்னிக்கு ஒருநாள் உங்ககூட இருக்கலாம்னு கிளம்பி



வந்தேன். மாமாகிட்ட உண்மையை சொல்ல முடியுமா? அதனாலதான் டெஸ்ட்டுன்ற பொய் சொன்னேன்...'' பொய் சொன்னதை ஒரு திறமையாக பெருமையுடன் சொன்ன சஞ்சனாவைப் பார்த்து பல்லைக் கடித்தான் பிரசன்னா.

தினேஷ், பிரசன்னாவின் உயிர்த்தோழன். பிரசன்னாவைப் போல் இருமடங்கு செல்வந்தனான அவன் பிரசன்னாவுடன் நட்பு வைத்திருப்பதையே அவன் பெரும் அதிர்ஷ்டமாக எண்ணி வந்தான். ஏனெனில் பிரசன்னாவின் தொழில் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை பெரிய வளர்ச்சி கண்டதற்கு தினேஷின் உதவியும் முக்கியக் காரணம். நகரின் பெரும் பணக்கார வீட்டு மனிதர்கள் அனைவருக்கும் பிரசன்னாவின் ஷாப்பிங் காம்ப்ளக்சை அறிமுகப்படுத்தியதோடு மட்டும் அல்லாமல் அந்நகரின் மிகப் பெரிய ஹோட்டல்கள் அனைத்திற்குமான காண்ட்ராக்ட்கள் அனைத்தையுமே பிரசன்னாவிற்கே கிடைக்கும்படியாகவும் செய்திருந்தான் அவன்.

பிரசன்னாவின் வருமானத்தின் பெரும்பகுதி தினேசின் சிபாரிசால் வந்ததாக இருக்க பிரசன்னாவிற்கு தினேசின் மேல் நட்பையும் கடந்த ஒரு மரியாதை இருந்தது. ஆனால் அவன் தற்போது பயந்தது வேறு ஒரு காரணத்திற்காக...

பெரும்பாலும் சஞ்சனாவை தினேஷ் மரியாதையாக பார்ப்பது கிடையாது. அவன் பெண்களை மதிப்பவனாகவே இருந்தாலும் ஏனோ சஞ்சனாவை பார்க்கும்

பார்வை மட்டும் மரியாதையற்ற ஒருவித தேட...
பார்வையாக இருப்பதை பிரசன்னா சமீப காலமாக...
உணர்ந்திருந்தான். முதன் முறையாக பிரச...
தினேசின் பார்வை சஞ்சனாவைத் தழுவிக் கொ...
டிருப்பதைக் கண்டபோது அவனுக்குள் கோ...
எரிமலையாய் வெடித்தது. அவன் ஆத்திரத்து...
தினேசைப் பார்த்தபடி சென்றவன் எதேச்சை...
திரும்பி தன் அருகில் நின்றிருந்த சஞ்சனா...
பார்த்தான்.

தினேசின் தேடலுக்கு சளைக்காத பார்வை...
கொடுத்தபடி வெகு ஒயிலாக தன் வடிவம் தெரி...
படியாகத் திரும்பி நின்று அவனுக்கு எட்டாத மே...
அடுக்கில் இருந்த ஏதோ ஒரு பொருளை எடுக்க முய...
பண்ணிக் கொண்டிருந்தாள் சஞ்சனா. கை வைக்...
ஸ்லீவ்லெஸ் சுடிதாரை அணிந்து கொண்டு அதி...
தன் கை உயர்த்திய கோலத்துடன் நின்று கொண்டு ஒ...
பெண் தன்னைப் பார்த்தால் தானாக இருந்தாலு...
அவளை அப்படித்தான் பார்ப்போம் என்ற எண்ண...
பிரசன்னாவின் உள்ளத்தில் தோன்ற அவன் சோர்வுட...
அப்படியே நின்று விட்டான்.

தினேசின் பார்வை தவறென்றால் அவனை அப்படி...
பார்க்கத் தூண்டிய சஞ்சனாவும் தவறுதானே என்ப...
அவனது உள்ளம் பிரசன்னாவை இடித்துரைத்தது. அவ...
இருதலைக்கொள்ளி எறும்பாக துடித்துக் கொண்டிரு...
பதை அறியாமல் மிகவும் ஒயிலாக நடந்து வந்து பிரசன்...
னாவின் அருகில் நின்ற சஞ்சனாவை அந்த நிலை...
யிலும் பிரசன்னாவால் வெறுக்க முடியவில்லை.



ஏனென்றால் ஒன்றும் அறியாத குழந்தையைப் போன்ற கண்களுடன் சஞ்சனா அவனைப் பார்க்கும் பார்வையில் குறையொன்றும் இருப்பதாக பிரசன்னாவிற்கும் தோன்ற வில்லை.

சஞ்சனாவின் மீது வைத்த கண்ணை எடுக்காமல் தினேஷ் அவர்கள் அருகில் வர பிரசன்னாவிடம் இருந்து விலகி நின்றாள் சஞ்சனா.

"ஹாய் தினேஷ்... வா... இப்பத்தான் வர்றியா...?" தடுமாற்றத்துடன் கேட்ட பிரசன்னாவைப் பார்த்த தினேசின் முகத்தில் என்றுமே தெரியும் நட்பின் நெருக்கம் அன்றும் குறைவில்லாமல் தெரிய நெஞ்சம் நெகிழ்ந்தான் பிரசன்னா. தினேசின் பார்வைக்குக் காரணம் சஞ்சனா தன்னுடைய மாமா மகள் என்பது தெரியததுதான் என்று உள்ளூர எண்ணிக் கொண்ட பிரசன்னா தன்னை விட்டு விலகி நின்றிருந்த சஞ்ச னாவின் கைப்பற்றி அருகில் அழைத்து நிறுத்தினான்.

"தினேஷ்... இது சஞ்சனா. என் மாமா மகள்..." தன் கையை பிடித்திருந்த பிரசன்னாவின் கையை நாசூக்காக விலக்கி விட்டு தினேசை நோக்கிக் கைநீட்டினாள் சஞ்சனா.

அவளது செயலை சிறு ஆர்வம் கலந்த ஏளனத்துடன் பார்த்து ஒரு உதட்டு சுழிப்புடன் அவள் கையை அழுத்தமாகப் பற்றிக் குலுக்கினான் தினேஷ். இருவரின் கையும் இணைந்திருக்க இருவரின் பார்வைகளும் கூட ஒன்றுடன் ஒன்று ஆர்வத்துடன் கலப்பதை குமுறும் எரிமலையாகப் பார்த்த பிரசன்னாவை அதே நட்பு

மாறாமல் பார்த்துப் புன்னகைத்த தினேஷைப் புரி
பார்த்தான் பிரசன்னா.

''எனிவே... மிஸ்.சஞ்சனா... நாங்க பிஸி
விசயமா கொஞ்சம் பேசணும்... ஸோ...'' சஞ்சனா
கண்களின் ஓரமாக பார்த்துக் கொண்டே சிலையாக
நிருந்த பிரசன்னாவின் கைப்பற்றி அழைத்துக் கொ
அங்கிருந்து நகன்றுவிட்ட தினேஷ் அங்கிரு
சிறிதுதூரம் தள்ளிச் சென்றவுடன் தன் தலை
குலுக்கிப் பெருமூச்சு விட்டான்.

''உப்ப்... வாட் எ கைண்ட் ஆப் கேர்ள் ஷி இ
னோ பிரசன்னா நீ என்னைத் தவறாக நினை
வேண்டாம். நான் கூட அவள் ரொம்ப அழகு
ஆனால் பிரசன்னா... உங்க வீட்டில் மாமா பெ
ணைத்தான் மேரேஜ் பண்ணிக்கணும் என்கிற கட்
ஒண்ணும் இல்லையே?''

''ஏன் கேட்கிற தினேஷ்?'' அவனது கேள்வி
அர்த்தம் புரியாமல் பார்த்தான் பிரசன்னா.

''சும்மாதான் கேட்டேன். உன் மனசுக்கு எது சரி
படுதோ அதை மட்டும் செய் பிரசன்னா. தட்ஸ் ஆ
திரும்பி சஞ்சனாவை அலட்சியமாகப் பார்த்துவிட்
போய்விட்டான் தினேஷ். அன்றில் இருந்து இன்று
தினேசின் வார்த்தைகள் பிரசன்னாவின் மனதின் ஓர
முள்ளாகத் தைத்துக் கொண்டே இருப்பதால் அ
சஞ்சனாவை தினேசின் முன்நிலையில் நிறுத்து
கூடிய வரையில் தவிர்த்தே வந்தான்.

59





# 11

திக்பிரமை பிடித்தவனைப் போல அசைவற்று நின்றிருந்த பிரசன்னாவைப் புரியாமல் பார்த்தாள் சஞ்சனா. ரூமின் உள்ளே தினேஷ் அமர்ந்திருக்கிறான் என்ற சிந்தனையே சஞ்சனாவிடம் உடம்பில் ஒருவித புதுப் பரபரப்பை உண்டாக்கியிருந்தது. தினேஷ் ஆணழகன் என்பது மட்டும் அல்லாமல் அவன் பிரசன்னாவைப்போல் இருமடங்கு பணபலம் மிக்கவன் என்பதுவும் அந்தப் பரபரப்புக்கு ஒரு காரணம். தினேசின் பார்வை பிரசன்னா இருப்பதையும் பொருட்படுத்தாமல் தன்மீது படிந்ததை சிலிர்ப்புடன் எண்ணிக் கொண்டாள் அவள்.

''மாமா... இப்ப நீங்க உள்ள போகப்போறீங்களா இல்லை நான் போகட்டுமா? இன்னும் எவ்வளவு நேரம் தான் இப்படி வெளியிலேயே நிக்கிறது?'' சிணுங்கும் குரலில் கேட்ட சஞ்சனாவின் கொஞ்சல் மொழி பிரசன்னாவின் இதயத்தை அசைத்தது.

''நீ கொஞ்சநேரம் கடையைச் சுத்திப் பார்த்துக்கிட்டு இரு சஞ்சு. நான் போய் அவனுங்க கிட்டப் பேசி அனுப்பிட்டு வந்துடறேன். அப்புறமா நாம ரெண்டு பேரும் லஞ்ச்சுக்கு எங்காவது வெளியில போய்

சாப்பிடலாம்... ஓகேவா?'' கெஞ்சும் குரலில் கூறிய பிரசன்னாவைப் பார்த்து முறைத்தாள் சஞ்சனா.

''ஆமா... நான் இந்தக் கடையை சுத்திப்பார்த்ததே இல்லை பாருங்க... வழியை விடுங்க மாமா... எனக்குக் கால் வலிக்குது...'' பிடிவாதமாக பிரசன்னாவை நகர்த்திவிட்டு அறைக்குள் நுழைந்தாள் சஞ்சனா. அவளது இந்தச் செயலை எதிர்பாராத திகைப்புடன் சஞ்சனாவைத் தொடர்ந்தான் பிரசன்னா.

அறைக்குள் நுழைந்த சஞ்சனாவை முதலில் ஏறிட்டுப் பார்த்தவன் தினேஷ்தான். அவன் ஆற அமர பார்வையிட்டு முடிக்கும் வரை அவன் முன்னால் ஒயிலாக மெதுவாக நடந்து சென்ற சஞ்சனா அவனுக்கு அருகில் இருந்த சேரில் அமர்ந்து வேண்டும் என்றே குனிந்து தன் காலில் அணிந்திருந்த கொலுசின் திருகாணியை மெதுவாக சரி செய்துவிட்டு நிமிர்ந்தாள்.

ஏற்கனவே தன்னுடைய அனைத்து அழகும் வெளிப்படையாக தெரியும்படியாக அணிந்திருந்த சுடிதாரின் முன்புறம் அவள் குனிந்து நிமிர்கையில் மேலும் கீழிறங்கி நிற்க தினேஷ் தன் பார்வையை மேலும் அழுத்தமாக சஞ்சனாவின் மீது படரவிட்டான். அவனது பார்வையைத் தொடர்ந்த மற்ற நண்பர்களும் வாயடைத்து தங்களுக்குள் கண்களால் சங்கேத பாஷையில் பேசிக்கொள்ள அவர்களின் அத்தனை வார்த்தைகளும் ஒன்று கூட விடுபடாமல் பிரசன்னாவின் காதில் ஓங்கி ஒலிப்பதைப் போல் உணர்ந்தான் பிரசன்னா. அவனது அத்தனை அங்கங்களும் அவமானத்தால் குறுக நண்பர்



களின் முகத்தைப் பார்க்கும் தைரியம் இல்லாதவனாக தலைகுனிந்து நின்றுவிட்டான் அவன்.

ஒரு சில நிமிடங்களில் பிரசன்னாவின் நிலைமையைப் புரிந்து கொண்டவனாக தினேஷ் திடுக்கிட்டு எழுந்துவிட அவனைத் தொடர்ந்து மற்ற நண்பர்களும் கிளம்பிவிட்டார்கள். அறையில் இருந்து வெளியேறும் முன்பாக பிரசன்னாவின் தோளில் மெலிதாக தட்டிய தினேஷ் தணிந்த குரலில் அவனிடம் மன்னிப்பை வேண்டிவிட்டு வெளியேறினான்.

தினேசும் மற்றவர்களும் சென்றுவிட்ட அறையை ஏக்கத்துடன் சுற்றிப்பார்த்த சஞ்சனாவின் முகத்தை வேதனையுடன் பார்த்தான் பிரசன்னா. சஞ்சனா செய்வது அனைத்தும் தவறென்பதை உணர்ந்து செய்கிறாளா இல்லையா என்பதை பிரசன்னாவினால் இனம் கண்டறிய முடியவில்லை.

அவன் கோபத்துடன் கண்மூடி தன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்துவிட அவனது கோபத்தை அறியாதவளாக தன் கையில் இருந்த செல்போனை ஆராயத் தொடங்கினாள் சஞ்சனா. சிறிது நேரத்தில் கண்திறந்து பார்த்த பிரசன்னாவின் எதிரில் செல்போனில் மெசேஜைத் தட்டிக் கொண்டு சிரித்தபடியாக அமர்ந்திருந்தாள் சஞ்சனா.

பிரசன்னா எதையும் பேசும் மனநிலையை இழந்தவனாக தன் முன் இருந்த கார்ச் சாவியை கையில் எடுத்துக் கொண்டு எழ அவனை திகைப்புடன் பார்த்தாள் சஞ்சனா.

''என்ன மாமா... இப்பத்தான் வந்தோம் அதுக்குள்ள லஞ்சுக்குக் கிளம்பிட்டீங்களா? எனக்கு இன்னும் பசிக்கவே இல்லை மாமா...'' உதடுகளை செயற்கையாக சுழித்துக் கொண்டே கூறியவளை வெறுப்புடன் உற்றுப் பார்த்தான் பிரசன்னா.

''நான் சாப்பிட வீட்டுக்குப் போகப் போகிறேன் சஞ்சனா. நீ எப்படி... என்னோட இப்படியே வீட்டுக்கு வர்றியா இல்லை உனக்கு வேற ஏதாவது வேலை இருக்குதா...? கேட்டவனின் குரலில் தெரிந்த ஒட்டாத தன்மை சஞ்சனாவைப் பாதித்தது.

''மாமா... நான்தான் இன்னிக்கு முக்கியமான டெஸ்ட் இருக்குன்னு பெரிய மாமாகிட்டே சொல்லியிருக்கேனா? இப்பப் போய் வீட்டுக்குப் போனால் நான் சொன்னது பொய்யுன்றது மாமாவுக்குத் தெரிஞ்சிடாதா? ப்ளீஸ் மாமா... இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சுப் போகலாமே?''

இவளால் கெஞ்சுவதைக்கூட இயற்கையாக உண்மையாக செய்ய முடியாதா என்ற ஆதங்கம் தோன்றியது பிரசன்னாவிற்கு. நண்பர்களின் முன்னிலையில் அடைந்த அவமானத்தை பிரசன்னாவால் தாங்கிக் கொள்ள முடியாததுபோல் தோன்றியது அவனுக்கு.

''அது உன் பொறுப்பு சஞ்சனா. நானா உன்னைப் பொய் சொல்லச் சொன்னேன்? நீ இப்ப என்கூட வருகிறாயா இல்லை அப்புறமா வந்து கொள்கிறாயா? அதை மட்டும் சொல்லு'' பிரசன்னாவின் பிடிவாதம்



''என்ன மாமா இது? நான்... நீன்னு பிரிச்செல்லாம் பேசறீங்க? சரி... வாங்க நாம வீட்டுக்கே போகலாம். டெஸ்ட் கேன்சலாகிடுச்சுன்னு மாமாகிட்ட சொல்லிக்கிறேன்..'' இலகுவான குரலில் கூறிக்கொண்டே எழுந்தவளைப் பார்த்துத் திகைத்தான் பிரசன்னா.

இவளுக்குத்தான் பொய் சொல்வதும் அதனையே மாற்றி சொல்வதும் எவ்வளவு ஈஸியாக இருக்கிறது என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் பிரசன்னா. அவனது சிறு வயதில் இருந்தே பொய் சொல்வது பெரிய குற்றம் என்று சொல்லி வளர்த்த பட்டம்மாளின் உருவம் ஒரு நொடி அவனது மனதில் வந்து போனது.

வீட்டிற்கு திரும்பி வரும் வரையிலும் பிரசன்னா தன்னைத் திரும்பிக்கூட பார்க்காமல் இருந்ததையும், ஒரு வார்த்தை கூட பேசாமல் இருந்ததையும் கண்டு மனதிற்குள் திகைத்தாலும் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் முகத்தை சாதாரணமாக வைத்துக் கொண்டாள் சஞ்சனா. பிரசன்னாவிற்குத் தன் மீதுள்ள கோபத்தின் காரணத்தை சஞ்சனா நன்றாகவே உண திருந்ததால் அதனைப் பெரிதாக்கும் எண்ணம் இ லாமல் தானும் முடிந்தவரை அமைதியுடன் அ திருந்தாள் சஞ்சனா.

வீட்டின் காம்பவுண்டிற்குள் காரைத் திருப்பியவு வீட்டு வாசலில் நின்றிருந்த கப்பலைப் போன்ற வெளிநாட்டுக் கார் அவர்களின் கண்களில் ப அந்தக் காரைக் கண்டு சஞ்சனாவின் புருவங்கள்

ஆனந்தத்தால் மலர்ந்தது. அவன் வேகமாக தன்னுடைய காரைக் கொண்டு சென்று அந்தக் காரின் அருகில் நிறுத்திவிட்டு காரில் இருந்து இறங்கினான்.



# 12

''அத்தை'' ஆர்வத்துடன் அழைத்த பிரசன்னாவின் குரல் கேட்டு ஹாலில் அமர்ந்திருந்த மோகனா ஆவலுடன் எழுந்து நின்றாள்.

சந்தன நிற முகத்தில் வட்டமான சிவப்புநிற சின்ன ஸ்டிக்கர் பொட்டுடன், சுருள் சுருளாக இடைவரை நீண்டு இருந்த கூந்தலை தளர்வாக பின்னல் இட்டு, கழுத்தில் தடிமனான தாலிக்கொடியும், கைகளில் கைக்கு ஒன்றாக தடிமனான வைர வளையல்களும், காதில் மின்னிய சின்ன வைரக் கம்மலுமாக அளவான அலங்காரத்துடன் ஒரு மகாராணியின் கம்பீரத்துடன் எழுந்து நின்ற அத்தை மோகனாவை பாசத்துடன் அணைத்துக் கொண்டான் பிரசன்னா.

பிரசன்னாவின் பாசத்திற்கும் குறையாத அன்புடன் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட மோகனா அவனைத் தன் அருகில் இருந்த கணவரிடம் பெருமையுடன் கண்களால் சுட்டிக் காட்டினாள்.



''பார்த்தீங்களா... எங்க பிரசன்னா எவ்வளவு அழகா வளர்ந்திருக்கான்னு! என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கே!'' மனைவியின் வார்த்தையைக் கேட்டு சிரித்தபடியே எழுந்த பிரசன்னாவை தானும் அணைத்துக் கொண்டார் மோகனாவின் கணவர் சுந்தரம்.

''அதென்ன மோகனா பிரிச்சுப் பேசுற? நம்ம பிரசன்னான்னு சொல்லு. இப்ப பிஸினெஸ்மேன் பிரசன்னாவாக வேற ஆகிட்டார்...'' கூறிய சுந்தரத்தின் பாதங்களை குனிந்து வணங்கி எழுந்தான் பிரசன்னா.

''அதெல்லாம் இல்லை மாமா. நான் என்னிக்கும் வெறும் பிரசன்னா மட்டும்தான். அதுவும் என் அத்தையின் செல்லப் பிரசன்னா ..'' மோகனாவின் கைப்பற்றிக் கூறி பிரசன்னாவின் பின்னால் மெல்லிய சிரிப்பொலி கேட்க கண்கள் மலரத் திரும்பினான் பிரசன்னா.

''நல்லா திருத்தமா சொல்லுங்க மாமா. எனக்கு என்னமோ அத்தையின் செல்லப் பிராணின்னு காதில் விழுகுது...'' தன் வரிசைப் பற்கள் பளிச்சிட குறும்புப் புன்னகையுடன் நின்றிருந்த அத்தை மகள் மஞ்சரியை வியப்புடன் பார்த்தான் பிரசன்னா.

அளவான உடல்வாகுடன், கொடிபோன்ற இடை தாண்டி நீண்ட பின்னலை முன்புறமாகப் போட்டுக் கொண்டு, சந்தனச் சிலையாக நின்றிருந்த மஞ்சரியின் தோற்றம் பிரசன்னா எதிர்பார்க்காததாக இருந்தது. பிரசன்னா அறிந்த மஞ்சரி இரட்டைச் சடையை முன்னால் போட்டுக் கொண்டு குழந்தைத் தனமும், குறும்புமாக பிரசன்னாவை வம்பிழுத்துக் கொண்டிருக்கும் மஞ்சரி.

கொய்யாப் பழத்தைக் கடித்துத் தின்பதற்குக் கூட சோம்பேறித்தனம் பட்டவளாக பிரசன்னாவை அதனை வெட்டித் தரச் சொல்லி நச்சரிக்கும் மஞ்சரி.

பட்டுப்பாவாடை குடையாக விரிந்திருக்க அதனைத் தன் கைகளால் தூக்கிப் பிடித்துக் கொண்டே பட்டாம் பூச்சியை துரத்திக் கொண்டு ஓடும் பட்டு மஞ்சரி.

பட்டம்மாளின் கன்னத்தோடு கன்னம் வைத்து அவள் பின்னால் இருந்து கட்டிக் கொண்டு பிரசன்னாவைப் பார்த்து பழிப்புக் காட்டும் மஞ்சரி.

வைசாலி வைத்துக் கொடுக்கும் பாயாசத்தை ஆசையுடன் குடிக்கும்போதே அதனை சட்டையின் முன்புறமாக வழிய விட்டுவிட்டு அதனைத் துடைக்கச் சொல்லி பிரசன்னாவிடம் கண்களால் கொஞ்சும் மஞ்சரி.

பிரசன்னாவைப் பொறுத்த வரையில் மஞ்சரி என்றவுடன் அவனது நினைவிற்கு வரும் தோற்றம் ஒரு குழந்தையின் முகத்துடன் தூய்மையான அன்பு கண்களில் நிறைந்திருக்க குண்டுக் கன்னங்கள் குழிவிழச் சிரிக்கும் மஞ்சரியின் தோற்றம்தான்.

அதே மஞ்சரி இன்று ஒரு தேவதையின் அழகோடும் ஒரு இளவரசியின் எழிலோடும், மிடுக்கோடும், அழகின் மொத்த உருவமாக தன் கண்முன் நிற்பதனை நம்ப முடியாதவனாக திகைப்புடன் பார்த்தான் பிரசன்னா.

''கண்ணு... என்னய்யா அப்படிப் பார்க்கிற? நம்ம மஞ்சரிதான் ராசா...'' பேத்தியைப் பெருமையுடன் பார்த்துக்கொண்டே கூறினாள் பட்டம்மாள்.



''ஏன் பாட்டி... நீங்க இன்ட்ரடியூஸ் பண்ணலின்னா மாமாவுக்கு என்னைத் தெரியாதா என்ன...'' தலை சாய்த்து மென்மையான மெல்லிய குரலில் மஞ்சரி கேட்ட விதம் பிரசன்னாவிற்கு ஏனோ மிகவும் பிடித்திருந்தது.

''மறக்குற முகமா இது பாட்டி? எத்தனை சேட்டைகளைப் பண்ணி என்னைப் பாடாய்ப் படுத்தின முகம் இது? இதைப்போய் இன்ட்ரடியூஸ் பண்ணணுமா என்ன?'' மஞ்சரியைப் போன்றே குரலை இழுத்துக் கேட்ட பேரனை முறைத்தாள் பட்டம்மாள்.

''இந்தா இருக்கிற கோயம்புத்தூரில் இருக்கிற அத்தை மகனை அடையாளம் தெரியாமல் நின்னுக்கிட்டு உனக்கும் கேலி வேறயா? அடி வாங்கப் போற படவா...'' ஒரு விரல் காட்டி எச்சரித்த பட்டம்மாளின் முகத்தைப் பாவமாகப் பார்த்தான் பிரசன்னா.

''நான் என்ன இவளைத் தெரியாமலா திகைச்சுப் போய் நின்னேன் பாட்டி? இந்த மகாராணி வந்துட்டாளே இனிமேல் இந்த வீட்டில நமக்கு எங்க மரியாதை கிடைக்கப் போகுதுன்னுதான் அப்படியே ஷாக்காகி நின்னுட்டேன் பார்த்தீங்களா... இப்ப நீங்களே அடிப்பேன்னு சொல்லிட்டீங்க...'' சோகத்துடன் தலையில் கை வைத்தபடி அமர்ந்தவனின் கையை வேகமாக அவன் அருகில் வந்து தட்டிவிட்டாள் மஞ்சரி.

''எத்தனை வருசம் கழிச்சு என்னைப் பார்க்கறீங்க மாமா. கொஞ்சமாச்சும் பாசமாகப் பேசுறீங்களா... எப்படி இருந்த மாமா... இப்படி ஆகிட்டீங்களே...'' பிரசன்

ளைவைப் போல சோகத்துடன் மஞ்சரி கேட்ட விதத்தில் அங்கிருந்த அனைவரும் பலமாக சிரித்துவிட்டார்கள். அவர்களுடன் இணைந்து தானும் சிரித்த பட்டம்மாளின் கண்களில் கண்ணீர் பெருகியது.

“எத்தனை நாளாச்சு... இந்த வீட்டில இப்படி சந்தோசமா எல்லாரும் பேசிச் சிரிச்சு? எந்தக் கொள்ளி கண்ணு பட்டதோ தெரியலியே” கூறிக் கொண்டே திரும்பிய பட்டம்மாளின் கண்களில் வாசற்படியிலேயே நின்றபடி வீட்டிற்குள் இருந்த அனைவரையும் முகம் சுளிக்கப் பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனா பட்டுவிட்டாள்.

“என்னம்மா சஞ்சனா... ஏன் அங்கியே நின்னுக்கிட்டு முறைச்சுக்கிட்டு இருக்கிறவ? வீட்டுக்குள்ளாரதான் வாறது. ஏய் செவப்பாயி... போய் முச்சந்தி மண்ணை கொஞ்சம் எடுத்துக்கிட்டு வாடி. இன்னிக்குச் சுத்திப் போடணும் எல்லாருக்கும். கண்ட நாய் நரி கண்ணெல்லாம் வீட்டாளுக மேல படுறது நல்லதுக்கு இல்ல...” வேலைக்காரியிடம் கூறிய பட்டம்மாளின் பார்வை அவள் சொன்ன நாய், நரி எல்லாம் யார் என்பதை சஞ்சனாவுக்குப் புரிய வைக்க அவளது முகம் கறுத்தது.

அப்பொழுதுதான் சஞ்சனாவின் நினைவு வந்தவளாக திரும்பிப் பார்த்துச் சிரித்தாள் பிரசன்னா. அவளது சிரிப்புக்குப் பதில் சிரிப்பைக் கொடுத்தவாறே உள்ளே வந்த சஞ்சனாவை அன்புடன் கை நீட்டி அழைத்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டாள் மோகனா.



“வாம்மா சஞ்சனா. நல்லா இருக்கியா? அம்மா, அப்பா எல்லாம் நல்லா இருக்காங்களா? வீட்டில எல்லாரும் நல்லா இருக்காங்களா?” மோகனாவின் கேள்விகளுக்கு பதில் அளித்துக் கொண்டிருந்த சஞ்சனாவின் கண்கள் மஞ்சரியை அளவெடுத்தது. மஞ்சரியின் அழகு சஞ்சனாவின் கண்களில் இருந்த கனவினை அசைத்துப் பார்ப்பதாக இருந்தது.

## 13

சிறுவயதில் இருந்தே அஞ்சனாவிற்கு மஞ்சரியின் அழகின் மீது அளவில்லாத பொறாமை உண்டு. சஞ்சனாவும் நல்ல சிவந்த நிறம் கொண்ட அழகிதான் என்றாலும் கள்ளிச் செடியின் பூவைப் போன்ற கவர்ச்சியான அழகு சஞ்சனாவின் அழகு.

செந்தாமரையின் கம்பீரமான கண்ணுக்கும் கருத்திற்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் தெய்வீகமான அழகு மஞ்சரியினுடையது. என்னதான் முயற்சி செய்தாலும் அஞ்சனாவினால் மஞ்சரியின் அழகிற்கு இணையாக வரமுடியாது என்பதே சஞ்சனாவின் பொறாமைக்கு முக்கியம் காரணமே.

“ஹாய் சஞ்சனா... பார்த்து ரொம்ப நாளாச்சல்ல அழகா வளர்ந்துட்டியே...!” கண்களில் எவ்வித பொறாமையும் இல்லாமல் இயல்பாகக் கேட்டாள் மஞ்சரி.

"நல்லாயிருக்கேன" ஒற்றை வார்த்தையில் பதிலை முடித்துக் கொண்ட சஞ்சனா திரும்பிப் பிரசன்னாவைப் பார்த்தாள்.

மோகனாவின் கணவருடன் தீவிரமாகப் பேசிக் கொண்டு இருந்த பிரசன்னா சஞ்சனாவைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை. மோகனாவின் அருகில் வந்தமர்ந்த வைசாலி எதையோ கேட்க அவளுக்கு பதில் சொல்லிக் கொண்டே அங்கிருந்து இருவரும் எழுந்து சென்றுவிட தனித்து விடப்பட்ட சஞ்சனா வேறுவழி இல்லாதவளாக மஞ்சரியை ஏறிட்டுப் பார்த்தாள்.

பட்டம்மாளின் அருகில் அமர்ந்து அவள் மீது ஆசையுடன் சாய்ந்து அமர்ந்திருந்த மஞ்சரி கையில் இருந்த வார இதழைப் புரட்டிக் கொண்டிருக்க தன் மடிமீது தவழ்ந்த பேத்தியின் நீண்ட கூந்தலைக்கூட அன்புடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் பட்டம்மாள். வார இதழில் இருந்த ஒரு ஜோக்கை மஞ்சரி படித்துக் காட்ட வாய்விட்டுச் சிரித்த பட்டம்மாளின் கன்னத்தில் ஆசையுடன் முத்தமிட்டாள் மஞ்சரி.

'இந்தக் கிழவிக் குரங்குக்கு என்னைப் பார்த்தால் மட்டும் உடம்பெல்லாம் எரியும். அதோட பேத்திக் குரங்கை எப்படிக் கொஞ்சுது பார்' மனதிற்குள் குமைந்தபடியே சஞ்சனா மறுபடியும் பிரசன்னாவைப் பார்க்க அவள் இருக்கும் திசைக்கே திரும்பும் எண்ண மற்றவனாக அமர்ந்திருந்தான் பிரசன்னா. செய்வது அறியாதவளாக அமர்ந்திருந்த சஞ்சனாவிற்கு அந்த வீடு சுடும் நெருப்பாக மாறிவிட்டதைப் போல இருந்தது.



அவள் மெதுவாக அங்கிருந்து எழ அதுவரையில் கடைக்கண்ணால் சஞ்சனாவை நோட்டமிட்டபடியே அமர்ந்து பேத்தியைக் கொஞ்சிக் கொண்டிருந்த பட்டம்மாளின் இதழ்களில் வெற்றிப் புன்னகை தோன்றியது.

"என்னம்மா சாஞ்சனா... இதுக்குள்ள வீட்டுக்கு கிளம்பிட்டே..." குத்தலாக வெளிவந்தது பட்டம்மாளின் குரல்.

"பாட்டி... ஏன் அழகான பேரை இப்படிக் கெடுக்காதீங்க. அவ பேரு சஞ்சனா."

"அது என்ன... னாவோ? எனக்கு இப்படித்தான் கூப்பிட வருதுடா. நீ ஏன் இதுக்கெல்லாம் அலட்டிக்கிற?" பேத்தியை அடக்கிவிட்டு அலட்சியமாக தன்னைப் பார்த்த பட்டம்மாளின் பார்வைக்குப் பதில் பார்வையை சளைக்காமல் கொடுத்துக் கொண்டே அங்கிருந்து சென்று விட்டாள் சஞ்சனா.

"ஏன் பாட்டி அவளை இப்படி வம்புக்கு இழுக்கறீங்க? பாவம் அவ. எவ்வளவு இன்சல்ட்டா பீல் பண்ணியிருப்பா."

"யாரு... அவளா பாவம்? மஞ்சரிக் கண்ணு. நான் சொல்றதை பச்சை மரத்தில அடிச்ச ஆணியாட்டம் என்னிக்கும் மனசுக்குள்ள நிலை நிறுத்திக்க. இந்த சஞ்சனா லேசுப்பட்டவ இல்லடா. இவளுக்கு பாவம் பார்க்குறது பாம்புக்கு பால் ஊத்தி வளர்க்கிறதுக்கு சமம். என்னிக்கும் இவளை மட்டும் நீ நம்பவே கூடாதுடா கண்ணு..."

''ஐயோ பாட்டி!! இவளுக்கும் எனக்கும் என்ன
இருக்கு? என்னிக்காவது ஒருநாள் பார்த்துக்கப்
போறோம். அதுக்கு இவ்வளவு பில்டப்பா? உங்களுக்கே
ஓவராத் தெரியலியா இது?'' அலுப்புடன் கூறினாள்
மஞ்சரி.

மஞ்சரியைப் பொறுத்தவரையில் அவள் முன்னால்
யாரும் அவமானப்படுவதை அவளால் ஏற்றுக் கொள்ள
முடியாது அனைவரிடமும் முடிந்த அளவிற்கு அன்பு
காட்டவும் அப்படி முடியாவிட்டால் விலகிப் போய்
விடவும் வேண்டும் என்பது அவளது அசைக்க முடியாத
எண்ணம். இந்த ஒரு குணத்திற்காகவே அவளையறிந்த
அனைவருமே அவளைக் கொண்டாடி நட்புக் கொள்
வார்கள்.

''அண்ணா... சாப்பாடு ரெடியாகிடுச்சு. நீங்களும்
அண்ணியும் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் ரெஸ்ட்
எடுத்துக்கங்க. பிரசன்னாவிடம் அப்புறமாப் பேசிக்க
லாம்'' உரிமையுடன் அழைத்த வைசாலியின்
அழைப்பைக் கேட்டு சிரிப்புடன் எழுந்தார் சுந்தரம்.

''எனக்கும் நல்ல பசிதாம்மா. வா வா... உன் கைச்
சமையல் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு? சீக்கிரமா
சாப்பாட்டை எடுத்து வைம்மா. இதோ வந்து விட்
டேன்...'' மனைவியை பார்வையால் அழைத்த சுந்தரத்
தின் தேவையறிந்து அவரை மாடியறைக்கு அழைத்துச்
சென்றாள் மோகனா.

அதற்குள்ளாக அவர்களது பெட்டி அந்த அறைக்குக்
கொண்டு வரப்பட்டிருக்க கணவருக்கு தேவையான



கைலி மற்றும் துண்டினை எடுத்து கட்டிலில் வைத்து
விட்டு பாத்ருமில் நுழைந்து பக்கெட்டில் நீரைத் திறந்து
விட்டபடி வெளிவந்தாள் மோகனா.

சுந்தரம் சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டி
விட்டு திரும்புவதற்குள் அவருக்குத் தேவையான
அனைத்தையும் செய்து முடித்து விட்ட மனைவியை
அன்புடன் பார்த்தார் சுந்தரம். என்றும் போல
மோகனாவின் அன்பு சுந்தரத்தின் மனதினை நெகிழச்
செய்தது.

உடைமாற்றி வந்த கணவருடன் இணைந்து பேசி
சிரித்தபடி வந்த மகளைப் பார்த்த பட்டம்மாளின் மனம்
நிறைவடைந்தது. எத்தனை வயதானாலும் தன் மகளின்
வாழ்வு மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் இருக்க
வேண்டும் என்று விரும்புவது தாய்மையின் இயல்பு
தானே. அதற்கு பட்டம்மாள் மட்டும் விதிவிலக்கா
என்ன?

கணவரும் மகளும் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து
விட பிரசன்னாவைக் காணாமல் வைசாலியைப் பார்த்
தாள் மோகனா. மோகனாவின் பார்வையை புரிந்து
கொண்ட வைசாலி பிரசன்னாவின் அறைக்கு விரைந்து
சென்றவள அவன் போனும் கையுமாக அமர்ந்திருப்
பதைக் கண்டு திகைத்தாள்.

''பிரசன்னா... மாமா சாப்பிட வந்துவிட்டு உனக்காக
காத்திருக்காங்கப்பா. இப்படி அவங்களைக் காக்க
வைக்கிறது நல்லாவா இருக்கு? இப்படி மரியாதை
யில்லாம நடந்துக்கறதை யார்கிட்டக் கத்துக்கிட்ட

பிரசன்னா?'' கண்டிப்பும் கோபமுமாக கேட்ட தாயைப் பார்த்து பதறி எழுந்தான் பிரசன்னா.

''இல்லம்மா... சஞ்சனா போன் பண்ணியிருந்தா... அவகிட்டப் பேசிக்கிட்டு...''

''போனை என்கிட்டக் கொடு...'' கை நீட்டிய தாயை தயக்கத்துடன் ஏறிட்டான் பிரசன்னா.

''அம்மா... நான்...''

''போனைக் கொடுன்னு சொன்னேன்...''

''இந்தாங்க...'' பிரசன்னா நீட்டிய போனை அவன் கையில் இருந்து பிடுங்குவதைப் போல் வாங்கித் தன் காதில் வைத்தாள் வைசாலி.

''யார் மாமா நந்தியாட்டம் குறுக்கால...''

''உன் அத்தைதான்ம்மா சஞ்சனா. இப்பத்தான வீட்டுக்கு வந்துட்டுப் போன. அதுக்குள்ளே போனில் பேச வேண்டிய அவசியமான விசயம் என்னம்மா சஞ்சனா?'' இடைமறித்துக் கோபத்துடன் கேட்ட வைசாலிக்குப் பதில் சொல்லும் வகையறியாமல் திகைத்தாள் சஞ்சனா.

''எங்க குடும்பத்தில் யாருக்கும் இல்லாத குணம் உனக்கு மட்டும் எங்கிருந்து வந்தது சஞ்சனா? வயசுப் பையன்கிட்ட அது அத்தை மகனாகவே இருந்தாலும் அளவில்லாமல் பேசுகிற குணம் எனக்கு எப்படி வந்தது? ஏன் அஞ்சனா இப்படி இருக்க?'' கோபத்துடன் தொடங்கி வேதனையுடன் முடித்தாள் வைசாலி.



அவளது கோபமோ வேதனையோ மறுமுனையில் இருந்த சஞ்சனாவைப் பாதிக்கவில்லை என்பதை அவள் உடனடியாக போனைக் கட் பண்ணிய விதத்தில் தெரிந்தது. சோர்வுடன் தன் காதில் இருந்த போனை எடுத்து வெறித்துவிட்டு பிரசன்னாவை பார்த்தாள் வைசாலி.

அன்னைக்குப் பதில் அளிக்கும் வகை தெரியாதவனாகத் திரும்பி சாப்பாட்டு அறைக்கு விரைந்து வந்தான் பிரசன்னா.



# 14

சாப்பாட்டு அறையில் டைனிங் டேபிளில் ஒருபுறம் மோகனாவும் சுந்தரமும் அமர்ந்திருக்க மறுபக்கம் மஞ்சரி அமர்ந்திருந்தாள். டைனிங் டேபிளின் மேல் வைத்திருந்த அப்பளங்களில் ஒன்றை எடுத்துக் கொறித்துக் கொண்டிருந்த மஞ்சரி எதையோ சொல்லிக் கொண்டிருக்க அவளைச் சுற்றியிருந்த வேலையாட்கள் உட்பட அத்தனைபேரின் முகத்திலும் சிரிப்பு தோன்றியிருந்தது.

இவள் இருக்கும் இடம் மட்டும் எப்படி இத்தனை சந்தோசமாகவும் இனிமையாகவும் இருக்க முடிகிறது என்ற வியப்புடன் வந்த பிரசன்னா மஞ்சரியின் அருகில் இருந்த சேரில் அமர்ந்து சுந்தரத்தை தயக்கத்துடன் பார்த்தான்.

"ஸாரி மாமா. ஒரு பிஸினெஸ் கால் வந்துடுச்சு அதான் லேட்... ஐம் வெரி ஸாரி மாமா..."

"விடுங்க மாப்பிள்ளை... இதுக்கெல்லாம் ஸா கேட்டா நாம லைப் டைம் முழுவதும் ஸாரி சொ திலேயே போய்விடும். நம்ம பொழப்பே பிஸினெ தான் இருக்கு. அதுக்கு முக்கியத்துவம் கொடு கலைன்னா எப்படி? நீங்க செய்தது சரிதான் வைசாலி... என்னம்மா இன்னும் இப்படியே பார்த் கிட்டு இருந்தா எப்படி? சாப்பாட்டைப் போடும்மா மகன் எத்தனை சுலபமாக பொய்யுரைக்கிறான் என்பதை கண்டு மலைத்துப்போய் நின்றிருந்த வைசாலி தன்னுணர்வுக்கு வந்தவளாக புன்சிரிப்புடன் ஹா பாக்ஸில் இருந்த சாப்பாட்டு வகைகளைப் பரிமாற தொடங்கினாள்.

"நாங்க வருவோம்னு உங்களுக்கு ஏற்கனவே தெரி மாத்தை? இத்தனை வெரைட்டி பண்ணியிருக்கீங்க?" சுவாதீனமாகக் கேட்டுக்கொண்டே சாப்பிடத் தொடங் கிய மஞ்சரியை வியப்புடன் நோக்கிவிட்டு தாயின் முகம் பார்த்தான் பிரசன்னா.

"தெரியும்டா. உங்க பெரிய மாமா காலையிலேயே நீங்க வர்றதாகச் சொன்னார். அதனாலதான் உனக்கு பிடிச்ச ஐட்டம் அத்தனையையும் செய்யச் சொல்லி விட்டேன்..." சிரிப்புடன் பதிலளித்தாள் வைசாலி.

"எம்மா... காலையில் என்கிட்ட நீங்க எதையுமே சொல்லலியேம்மா? அத்தை வருவதாகத் தெரியாம லேயே நான் லஞ்ச்சுக்கு வந்துவிட்டேன். அப்படி நான்



வரலேன்னா நைட்டுதானே வந்திருப்பேன்? எம்மா சொல்லலை?" கேட்ட மகனை உற்றுப் பார்த்த வைசாலியின் முகத்தில் வேதனை படர்ந்தது.

"நீதான் எதையும் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் இல்லையே பிரசன்னா..." வைசாலி அமைதி யாகக் கூறினாலும் அவள் கூறிய வார்த்தைகளில் இருந்த குத்தலைப் புரிந்து கொண்டு தலைகுனிந்தான் பிரசன்னா.

"ஏன் பிரசன்னா? அவ்வளவு வேகமாகவா வெளியே கிளம்புவது? அப்படி என்ன அவசரம்?" புரியாமல் கேட்ட சுந்தரத்திற்கு பதில் கூற முடியாமல் திகைத்தான் பிரசன்னா.

எத்தனை தொழில்கள் இருந்தாலும் குடும்பத்திற்கும் நேரம் ஒதுக்கி மாமனார் வீட்டிற்கு வந்து ஆற அமர அமர்ந்து விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் மிகப் பெரிய தொழில் அதிபரிடம் தன் அன்னையின் பேச்சைக் கூட கேட்க நேரமில்லை என்று சொல்ல முடியாமல் தவித்தான் பிரசன்னா.

"அது வேற ஒண்ணும் இல்லீங்கய்யா. நம்ம தோட்டத்துக் கணக்கு வழக்குகளை காலையில் வீட்டில் வெச்சுப் பார்த்துக்கிட்டு இருந்தாங்க பிரசன்னாவும், யோகநாதனும். அதில் கொஞ்சம் லேட்டாகிடுச்சு. புள்ள பாவம் அவசர அவசரமாகக் கிளம்பிப் போக வேண் டியதாப் போச்சு..." பட்டம்மாள் தான் ஒரு புத்திசாலி என்பதை அந்த நேரத்திலும் நிரூபித்தாள்.

பாட்டியை நன்றியுடன் மனதிற்குள் பாராட்டிக் கொண்டான் பிரசன்னா.

"வெறும் வெஜிடேரியன் மட்டும்தான்னு நினைச்சு ஏமாந்துடாத மஞ்சரி. உனக்குப் பிடிச்ச அயிரை மீன் குழம்பும் இருக்கு. நல்லாச் சாப்பிடு..." அன்புடன் கூறிக் கொண்டே பரிமாறிய வைசாலியின் மனம் அருகருகே அமர்ந்திருந்த மஞ்சரி மற்றும் பிரசன்னாவின் கோலத்தில் ஏனோ இனம் புரியாமல் நிறைவு கண்டது.

அவள் மனம் பனிக்க நிமிர்ந்து பட்டம்மாளைப் பார்த்தாள். மருமகளின் மனம் உணர்ந்த பட்டம்மாளும் தன் ஆறுதலை புன்னகையால் அவளுக்கு உணர்த்தினாள்.

"இந்த சீசனில் அயிரை மீன் எங்கிருந்தும்மா கிடைச்சது? குழம்பு ரொம்ப நல்லா இருக்கு இல்ல மோகனா?" தன் அருகில் அமர்ந்திருந்த மோகனாவிடம் உணவை உண்டுகொண்டே கேட்டார் சுந்தரம்.

"எங்க அண்ணன் நாம வர்றது தெரிஞ்சால் போதும் எந்த சீசனா இருந்தாலும் நமக்குப் பிடிச்சதை வரவழைச்சுடுவாரே" பெருமையுடன் கணவரிடம் கூறினாள் வைசாலி.

"அம்மா... உங்க பாசமலர்க் கதையை அப்புறமா பேசுங்கம்மா. இப்போதைக்கு எங்களை நிம்மதியாச் சாப்பிட விடுங்க. இல்லியாப்பா...?" விளையாட்டாகக் கூறிய மஞ்சரியை கண்டிப்புடன் பார்த்தார் சுந்தரம்.

"மஞ்சரி.." ஒற்றை வார்த்தைதான். ஆனால் அதில் இருக்கும் ஓராயிரம் வார்த்தைகளை ஒரு நொடியில் புரிந்து கொண்டு தந்தையின் வார்த்தைக்குப் பணிந்தாள் மஞ்சரி.

"…ாரிப்பா. நான்... அம்மா... ஸாரி..."

"…தை உன் அம்மாவிடம் கேள் மஞ்சரி... நீ பேசியது …வின் பாசத்தைப் பற்றி..."



"அம்மா... ஸாரிம்மா..."

"விடு செல்லம்... நீ பேசாமல் எங்களை யார் கேலி பேசுவது... எங்க... இதெல்லாம் ஒரு பெரிய குத்தம்னு எடுத்துக்கிட்டு பிள்ளையைக் கண்டிக்கறீங்களே?" மனத்தாங்கலுடன் கூறினாள் மோகனா.

அந்தக் குடும்பத்தையும் அவர்களின் கட்டுப்பாட்டையும் அன்பினையும் காணக் காண வியப்பாகவும் ஆசையாகவும் இருந்தது பிரசன்னாவிற்கு. கோபக்காராக இருந்தாலும் மனைவிக்கு சுந்தரம் கொடுக்கும் மரியாதையும், மகளது வார்த்தைகளில் கூட ஒழுக்கத்தை போதிக்கும் அவரது குணமும் பிரசன்னாவிற்கு சுந்தரத்தின் மேல் இருந்த அன்பினை மரியாதையாக மாற்றியது.

"நான் அப்பவே கேட்கணும்னு நினைச்சேன் மாமா. நம்ம சிவா வரலியா?"

சிவா மோகனாவின் செல்லப் புத்திரன். மஞ்சரிக்கு அடுத்தபடியாக பிறந்த செல்ல மகனுக்கு தன் தந்தையின் பெயரில் பாதியை இணைத்து சிதம்பரம் என்று பெயரிட்டிருந்தாள் மோகனா. ஆனால் அதன் காரணமாகவே அவனை முழுப்பெயர் சொல்லி வெறும் அழைக்க முன்வராத காரணத்தால் சிவா என்ற செல்லப் பெயரே அவனுக்கு நிலைத்துவிட்டது.

"எல்லாரும் இங்க வந்துட்டா பிஸினெஸ்ஸை யாருப்பா பார்த்துக்கிறது? அதனாலதான் அவனை கோயம்புத்தூரில் விட்டுவிட்டு நாங்க மட்டும் வந்தோம்" சாதாரணமாக கூறிய சுந்தரத்தின் பதில் பிரசன்னாவிற்குள் ஆச்சரியத்தை உண்டாக்கியது.

சிவா கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டு இருக்கும் மாணவன். அவன் சுந்தரத்தின் அவ்வளவு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை கவனித்துக் கொள்கிறான் என்பதை பிரசன்னாவினால் நம்ப முடியவில்லை.

''சிவா உங்க பிஸினெஸ்சை பார்த்துக்குவானா? என்ன மாமா சொல்றீங்க?''

''ஏன் பிரசன்னா, சிவா மேல உனக்கு நம்பிக்கை இல்லையா என்ன? சிவா என்னிக்கு ப்ளஸ் டூ முடிச்சானோ அன்னியில் இருந்து லீவு நாட்களிலும், காலேஜ் டேசாக இருந்தால் ஈவ்னிங் டையத்திலும் என் கூட ஆபீஸ் வந்து தொழில் கத்துக்கத் தொடங்கிவிட்டானே! நம்ம குடும்பம் பிஸினெஸ் குடும்பம் இல்லியா? இப்படி இருந்தால் தானே நல்லது?''

''உண்மைதான் மாமா. ஆனால் எனக்கு இதையெல்லாம் தெரியாது மாமா. அதனால் தான் அப்படிக் கேட்டேன்...''

''இட்ஸ் ஆல்ரைட் பிரசன்னா. நம்ம மஞ்சரிகூட நம்மோட கார்மெண்ட்ஸ் பேக்டரியை அவதான் மெயின்டெய்ன் பண்றா. அவ காலேஜ் முடிச்சதுமே அதை அவகிட்ட ஹேண்ட்ஓவர் பண்ணிட்டேன். ஆனால் நான் எதிர்பார்த்ததுக்கும் மேலயே பிராபிட் வர்ற மாதிரி திறமையாகத்தான் நடத்திக்கிட்டு இருக்கா.''

இம்முறை பிரசன்னா வாய்திறந்து மஞ்சரியை பாராட்டவில்லை. அவனது பாராட்டுதலை மஞ்சரியும் எதிர்பார்க்க மாட்டாள் என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.



# 15

பரம்பரைப் பணக்காரக் குடும்பமாக கருதினாலும் பிரசன்னாவின் தாத்தாவின் காலத்தில்தான் தொழில் துறையில் காலடி எடுத்து வைத்தார்கள் பிரசன்னாவின் குடும்பத்தார். ஆனால் சுந்தரத்தின் குடும்பத்தினரோ பரம்பரையாக தொழில்துறைகளில் கொடிகட்டிப் பறக்கும் கோடீஸ்வரக் குடும்பத்தார்.

'மீன் குஞ்சுக்கு நீந்தக் கத்துக்கொடுக்கணுமா' என்று பட்டம்மாள் அடிக்கடி கூறுவாள். அதைப் போல பிஸினெஸ் ரத்தத்திலேயே ஊறிப்போய் இருக்கிற பரம்பரையில் வந்த மஞ்சரி ஒரு நிறுவனத்தை நிர்வாகம் செய்வதில் ஆச்சரியம் எதுவுமில்லை. மேலும் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு பிஸினெஸ் மேனேஜ்மெண்ட்டை டாரினில் சென்று படித்து வந்தவள் மஞ்சரி. அவள் தனியாக தொழில் செய்வது என்பது பிரசன்னாவிற்கு அதிசயமாகத் தெரியவில்லை. அவன் அன்புடன் மஞ்சரியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்னை மட்டும் எதுவும் சொல்லாமல் இருக்கீங்களே மாமா? என் மேல் உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?'' கேட்ட மஞ்சரியை மீண்டும் கண்டிக்கும் பாணியில் முறைத்த சுந்தரத்தைத் தடுத்தான் பிரசன்னா.

''என்னைவிட உன்மேல் எனக்கு அதிக நம்பிக்கை உண்டு மஞ்சரி. அதனால்தான் நான் எதுவும் சொல்லலை...'' பிரசன்னா கூறியதைக் கேட்ட அனைவருமே எதுவும் கூறாமல் அமைதியாக இருந்ததை விநோதமாக உணர்ந்தான் பிரசன்னா.

உணவினை முடித்துக் கொண்டு மறுபடியும் தன் வேலையைத் தொடரக் கிளம்பிய பிரசன்னாவை பட்டம்மாளின் அழைப்பு தடுத்து நிறுத்தியது.

''மணி நாலாகப் போகுது பிரசன்னா. இதுக்கு மேல நீ கடைக்குப் போய் என்ன செய்யப் போற? பேசாம இன்னிக்கு ஒரு நாள் வீட்டில் இரு...''

''இல்ல பாட்டி... நான் போய் கணக்கு முடிச்சால்தான் எனக்குத் திருப்தியா இருக்கும். பகலில் எல்லாமே கம்ப்யூட்டர் பில்தான் என்பதால் ஓரளவுக்குக் கவலை இல்லை. ஆனால் கணக்கு வழக்கை எல்லாம் நம் கைப்பட வைத்துக் கொள்வதுதான் நல்லது பாட்டி. நான் போயிட்டு முடிந்தவரையில் சீக்கிரமாக வர டிரை பண்றேன்...''

''அதுக்கில்லய்யா. அத்தையும் மாமாவும் வந்திருக்காங்க. உங்கப்பாவும் பேக்டரிக்குப் போயிட்டான். நீயும் கிளம்பிட்டின்னா வீடே வெறிச்சோடி இருக்குமில்ல? அதனாலதான் சொன்னேன்'' பட்டம்மாளின் குரலில் இருந்த நியாயம் புரிந்து தயங்கி நின்றான் பிரசன்னா.

''அட... நீங்க வேற பாட்டி. மாமா சொல்றதுதான் கரெக்ட். கணக்கு முடிக்கும் நேரம் மாமா அங்க இருக்கிறது முக்கியம் பாட்டி. கோடிக்கணக்கில் காசு போட்டு



தொழில் தொடங்கி அதை சக்சஸ்புல்லா இப்பத்தான் மாமா கொண்டு வந்திருக்கார். இந்த நேரத்தில் அவரை இப்படியெல்லாம் டிஸ்டர்ப் பண்ணக்கூடாது பாட்டி. மாமா நீங்க போயிட்டு வாங்க. நாங்க ஒண்ணும் சின்னக் குழந்தைங்க இல்ல. யாராவது கூடவே இருந்து விளையாட்டுக் காட்டிக்கிட்டு இருக்க...''

''நான் சொல்வது உனக்குக் கேலியாக இருக்கு மஞ்சரி. அப்பா கூட யாராச்சும் பேச்சுத் துணைக்கு இருந்தால்தான...''

''அப்பாவுக்கு பேச்சுத்துணைக்கு அம்மா இருக்காங்க. எனக்குப் பேச்சுத் துணைக்கு நீங்க இருக்கீங்க. இது பத்தாதா? மாமா... நீங்க இன்னுமா கிளம்பலை?'' மஞ்சரி மிரட்டிய குரலில் கூறியதைக் கேட்டுச் சிரித்தவாறே கிளம்பிவிட்டான் பிரசன்னா.

காரில் போகும் போதும், கடையிலும் வேலைகளைப் பற்றிய சிந்தனைகளே பிரசன்னாவின் எண்ணம் முழுவதிலும் பரவி நிற்க வீட்டைப் பற்றிய சிந்தனையை மறந்தே போய்விட்டான் பிரசன்னா... வழக்கமாக கணக்கு முடிக்கும் நேரத்தில் கணக்கு வழக்குகளை முடித்துவிட்டு பணத்தை சேஃப்ட்டியில பூட்டிச் சாவியை பேண்டில் போட்டுக் கொண்ட பிரசன்னா கார் சாவியைக் கையில் எடுத்த பொழுதுதான் வீட்டின் நினைவே அவனுக்கு மீண்டும் தோன்றியது. அவன் கிளம்பியபோது தடுத்த பாட்டியை மஞ்சரி சமாளித்த விதத்தை எண்ணிப் புன்னகையுடன் காரில் ஏறி அமர்ந்து அதை ஸ்டார்ட் செய்தான் பிரசன்னா.

மஞ்சரி பிறந்தபோது பிரசன்னாவிற்கு ஆறுவயது
இருக்கும். சூரியனின் இளம் மஞ்சள் நிறத்தில் ரோஜாப்பூ
வண்ண கன்னங்களும் கை கால்களுமாக ஒரு பொம்
மையை போல இருந்த மஞ்சரியை தரச்சொல்லி
அடம்பிடித்துத் தன் மடியில் வைத்துக் கொண்டது
பிரசன்னாவிற்கு இன்னும் பசுமையாக நினைவில்
இருந்தது. சுந்தரம் மிகப்பெரிய கோடீஸ்வரராக இருந்
தாலும் மனைவியின் குடும்பத்தை மிகவும் நேசிப்பவ
ராக இருந்தார். மனைவியின் அண்ணனான யோக
நாதனை தன் உற்ற நண்பராக எண்ணினார் அவர்.

அதனால் ஊர்த்திருவிழாவாக இருந்தாலும் சரி
ஏதாவது பண்டிகை விசேஷ தினங்களாக இருந்தாலும்
சரி மனைவி குழந்தைகளுடன் மாமனார் வீட்டிற்கு வந்து
விடுவார் அவர். சுந்தரம் வந்து தங்கிச் செல்லும்
நாட்கள்தான் பிரசன்னாவின் வீட்டில் பண்டிகை நாள்
போல இருக்கும். பேச்சும் சிரிப்பும் விருந்துமாக மிகவும்
கோலாகலமாகக் கழிந்த நாட்கள் அவை. குழந்தைகள்
வளர வளர அவர்களின் படிப்பின் காரணமாக மோகனா
வின் குடும்பத்தாரின் வரவு குறைந்து விட்டது. குழந்தை
களின் லீவு நாட்களில் சுந்தரத்திற்கு தவிர்க்க முடியாத
தொழில் பயணமும், சுந்தரம் ப்ரீயாக இருக்கும் நாட்
களில் குழந்தைகளின் பரீட்சை நேரமுமாக மோகனா
தம்பதியினர் குடும்பத்துடன் கண்ணூர் வரும் நாட்
களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

ஆனால் குழந்தைகளின் பள்ளி விடுமுறை நாட்
களில் சில தினங்களாவது அவர்களைக் கண்ணூருக்கு
அனுப்பி விடுவார் சுந்தரம். அந்த நாட்களில் பிரசன்னா,



மஞ்சரி, சிவா மூவரும் இணைந்து அடிக்கும் லூட்டி
களில் அவர்களது மாளிகையே கலகலத்துப் போய்
விடும். ஆனால் அவர்கள் மூவரும் அந்த வீட்டின்
செல்லக் குட்டிகள் என்பதால் அவர்களைக் கண்டிக்கும்
எண்ணமே அங்கிருக்கும் எவருக்கும் தோன்றாது.
அதுவே அவர்களது வால்தனத்தை மேலும் அதிகரிக்கச்
செய்யும்.

கண்ணூரிலேயே பிறந்து வளர்ந்திருந்தாலும்
பிரசன்னாவிற்கு அந்த ஊரில் உள்ள அவன் வயதுக்
குழந்தைகள் எவரிடத்திலும் அவ்வளவாக பழக்கம்
இருக்காது. அவன் தன் பள்ளியில் படிக்கும் தோழர்
களுடன் தோழமை வைத்துக் கொள்ளவே விரும்புவான்.

ஆனால் சிவா, கோயம்புத்தூரில் வளர்ந்திருந்தாலும்
கண்ணூரில் இருக்கும் அனைத்து சிறுவர்களிடத்தும்
அவனுக்கு பழக்கம் உண்டு. சிவா லீவுக்கு வந்து
விட்டால் போதும், அந்த ஊரில் இருக்கும் அனைத்து
சிறுவர்களும் பிரசன்னாவின் வீட்டில் தான் மையம்
கொண்டிருப்பார்கள். அவர்களது மாளிகையின்
முன்புறம் இருக்கும் பெரிய காம்பவுண்டுச் சுவருக்குள்
இருக்கும் மைதானம் போன்ற இடம் முழுவதும் அந்தச்
சிறுவர்கள்தான் குழுமி இருப்பார்கள். அவர்களுடன்
சிவா அடிக்கும் கொட்டத்திற்கு அளவே இருக்காது.
வெளியூரில் இருந்து வந்தவன் என்பதினால் சிவாதான்
அந்தக் கூட்டத்திற்கு தலைவன். அவன் சொல்வதுதான்
அவர்கள் அனைவருக்கும் வேதவாக்கு.

அன்றில் இருந்து இன்று வரை கண்ணூரில் இருக்கும்

அப்படியே தொடர்ந்து கொண்டுதான் இருந்தான். சிலர் வருகிறான் என்றால் போதும் கண்ணூரின் இப்படிக்குள் களுக்கு அந்த நாள்தான் திருவிழா நாள்.

பிரசன்னாவைப் போலவே மஞ்சரிக்கும் வெளியாட்களுடன் பழகுவது அவ்வளவாகப் பிடிக்காது. பட்டம்மாளும் மஞ்சரியை வெளியில் இருக்கும் சிறுமிகளுடன் பழக விட மாட்டாள். ஆகையால் பிரசன்னாவிற்கு மஞ்சரி தான் விளையாட்டுத் தோழி. மற்றவர்கள் வீட்டின் முன்புறத்தில் அனல் பறக்க விளையாடிக் கொண்டிருக்க மஞ்சரியும் பிரசன்னாவும் வீட்டிற்குள்ளேயே அமைதியாக கேரம் போர்டிலோ, செஸ்சிலோ எதையாவது விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இருவரும் விளையாடும் விளையாட்டு புரிகிறதோ இல்லையோ பட்டம்மாள் அவர்கள் இருவரின் அருகில் அமர்ந்து கொண்டு அவர்களது விளையாட்டைக் கவனித்துக் கொண்டிருப்பாள்.

வருடங்கள் செல்ல சொல்ல பிரசன்னா கல்லூரிப் படிப்பை தொடர ஹாஸ்டல் சென்றுவிட அவன் படித்து முடித்து வரும் நோத்தில் மஞ்சரி கல்லூரிப் படிப்பையும், பாரினில் மேற்படிப்பையும் படிக்கும் கவனத்தில் கண்ணூருக்கு வருவதை நிறுத்தி விட்டாள். அப்படியும் இடைவெளியில் சில நாட்கள் மஞ்சரி கண்ணூர் வரும் சமயங்களில் பிரசன்னாவினால் அங்கிருக்க முடியாத சூழ்நிலை அமைந்துவிட்டது. அதனாலேயே சமீப காலங்களில் மஞ்சரியை பிரசன்னா பார்க்கும் சூழ்நிலை அமையாமலேயே போய்விட்டது.



# 16

நகர எல்லையைத் தாண்டியவுடனேயே காரின் கண்ணாடிகளை இறக்கிவிட்டு சூழ்ந்து மூச்சிழுத்து சுவாசித்தான் பிரசன்னா. சில்லென்ற குளிர்காற்று முகத்தில் அறைந்து முடிக்கற்றையைக் கலைத்துவிட, அந்தக் குளிர்ச்சியான சூழ்நிலையில காரை ஓட்டுவதே ஒரு சுகானுபவமாக இருந்தது பிரசன்னாவிற்கு. இயற்கையான காற்றும் அதன் ஈரப்பதமும் பிரசன்னாவிற்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால் சஞ்சனா காரில் அமர்ந்திருந்தால் அவனுக்கு காரின் கண்ணாடிகளை ஏற்றி விட்டுவிட்டு ஏஸியின் குளுமையை அனுபவிக்க வேண்டும்.

''லட்சக்கணக்கில் போட்டுக் காரை வாங்கிட்டு ஏஸிக் காத்தைக்கூட அனுபவிக்கலேன்னா எப்படி மாமா? அத்தோட வெளிக்காத்து முகத்தில் பட்டா தூசியும் சேர்ந்துதான முகத்தில் படும்? அதனால இதுதான் சேஃப்ட்டி'' என்பாள் அவள்.

சஞ்சனாவைப் பற்றிய எண்ணம் தோன்றியவுடன் அன்று மதியம் அவளிடம் வைசாலி போனில் பேசியது நினைவுக்கு வந்தது பிரசன்னாவிற்கு. வீட்டில் இருக்கும் அனைவருமே பிரசன்னாவை வெறுப்பதற்கான காரண

பிரசன்னாவிற்கும் புரியவில்லை. இத்தனைக்கும் சஞ்சனா வைசாலியின் சொந்த அண்ணன் மகள். தன் அண்ணன் மகளே தனக்கு மருமகளாக வருவதை வைசாலி எதற்காக எதிர்க்கிறாள் என்ற சிந்தனை தோன்றியது அவனுக்கு.

சஞ்சனாவின் குணம் அனைவரையும் அனுசரித்து நடந்துகொள்ளத் தெரியாததுதான் இவை அனைத்திற்கும் காரணம் என்பதை பிரசன்னாவின் உள்ளுணர்வு உணர்ந்தாலும் அவனால் சஞ்சனாவிடம் அதைப்பற்றி எடுத்துக்கூறவோ அல்லது அவளது நடவடிக்கைகளைத் திருத்தவோ முடியாது என்பதையும் பிரசன்னா நன்றாகவே அறிவான். சஞ்சனாவால் பிறருக்காக தன்னை மாற்றிக் கொள்ள என்றுமே முடியாது.

ஆனால் அவள் பிரசன்னாவிடம் காட்டும் உரிமையான நெருக்கத்தில் பிரசன்னாவின் ஆண்மை கிறக்கம் கொண்டது. அவளது அந்த நெருக்கத்தை ஒரு வகையில் அவனது ஆண்மை விரும்பியது என்றும் கூறலாம். தன்னையும் ஒரு பெண் உயிராக விரும்புகிறாள் என்ற எண்ணமே பிரசன்னாவின் ஆண்மையைத் திருப்திப்படுத்த போதுமானதாக இருந்தது. அதற்கும் மேலாக அவனால் தன்னுடைய பிற்கால வாழ்க்கையையும், சஞ்சனா அதற்குத் தகுதியானவளா என்ற சிந்தனைக்கும் போக அவனுக்கு தற்போது விருப்பம் இல்லை என்றே கூறவேண்டும். அவனைப் பொறுத்தவரையில் சஞ்சனாவை அவனும் விரும்புகிறான் அல்லது அவன் விரும்புவதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஏனென்



றால் ஒரு இனக்கவர்ச்சி என்றுமே உண்மையான காதலாக இருக்க முடியாது என்பது பிரசன்னாவிற்கும் புரியாமல் இருந்தது.

அவனது ஆண்மையைத் தூண்டிவிடும் வித்தை தெரிந்த சஞ்சனாவோ எப்படியாவது பிரசன்னாவைத் திருமணம் செய்து கொண்டு, அந்த மாளிகைக்கு மருமகளாகிவிட வேண்டும் என்றுதான் எண்ணினாளே தவிர அந்த ஆண்மையின் தூண்டலை காதலாக மாற்றிவிடுவதற்கான எந்த முயற்சியையும் அவளும் எடுக்க விரும்பவில்லை. சஞ்சனாவைப் பொறுத்த வரையில் பிரசன்னா தன்னிடம் கொண்ட கிறக்கத்தில் இருந்து விடுபடாமல் இருக்க வேண்டும். அந்த ஒரே காரணத்திற்காகவே அவள் மேலும் மேலும் பிரசன்னாவை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

தன் மாளிகைக்கு முன்பாக காரை நிறுத்தி விட்டுக் கீழிறங்கிய பிரசன்னா தன் அருகில் வந்த தோட்டக்காரனிடம் காரின் சாவியைக் கொடுத்துவிட்டுத் திரும்பினான். திரும்பிய பிரசன்னாவின் கண்கள் ஆச்சரியத்தில் மலர்ந்தது. அவர்களது தோட்டத்தின் முல்லைக் கொடிக்கருகில் நின்று கொண்டிருந்த மஞ்சரி அந்தக் கொடியை நன்றாக படரும்படியாக சரிசெய்து கொண்டு இருந்தாள். வெண்மை நிறத்தில் அடர்ந்த சிவப்பு நிற பெரிய ரோஜாப்பூக்கள் மலர்ந்திருக்கும் தோற்றம் கொண்ட நைட்டியும் காலில் சாதாரண செருப்பும் அணிந்து கை, கழுத்தில் எந்த ஆபரணமும் இல்லாமல் கூந்தலை விரியவிட்டு மிகச் சாதாரணத் தோற்றத்தில் நிலவொளியில் நின்றிருந்த மஞ்சரியின் தோற்றம் ரவி

வர்மாவின் ஓவியம் போல மிகவும் அழகாய்த் தோன்றியது பிரசன்னாவிற்கு.

மஞ்சரி முல்லைக் கொடியை கம்பிகளில் நன்றாக படர விட்டுவிட்டு திருப்தியுடன் தள்ளி நின்று இடையில் கைவைத்துப் பார்த்தபோது முழங்கால்வரை நீண்டு படர்ந்து இருந்த அவளது கூந்தலும் முல்லைக் கொடியைப் போலவே காற்றில் அசைந்தாடியது. அவளது சந்தன நிறத்திற்கும் அப்போது அவள் அணிந்திருந்த வெண்ணிற நைட்டிக்கும், அவள் கூந்தல் அசைந்தாடும் அழகிற்கும் அந்த நிலவொளியில் கூட தேவதையைப் போல மஞ்சரி பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

மஞ்சரியின் ஒவ்வொரு அசைவிலும் தெரிந்த பெண்மையின் மென்மை பிரசன்னா அதுவரை காணாததாக இருந்தது. குழந்தையில் இருந்து தான் பார்த்து வந்த மஞ்சரிதானா இவள் என்று பிரசன்னாவிற்கே குழப்பமாக இருந்தது. அதுவரை மஞ்சரியைக் குழந்தையாகவே எண்ணிக்கொண்டு இருந்த பிரசன்னாவின் கண்களுக்கு அன்று அந்த மஞ்சரி ஒரு புது விதமான பரிமாணத்தில் தோற்றம் அளித்தாள். அவளை இப்படி அவள் அறியாமல் ரசிப்பதை பிரசன்னாவின் இதயம் அந்த நொடி மிகவும் விரும்பியது. அவன் ஒரு அடி பின்னால் நகர்ந்து இருட்டுக்குள் நின்று கொண்டு மஞ்சரியின் நடவடிக்கைகளைப் பார்வையிடத் தொடங்கினான். தன் செயலின் காரணத்தைப் பிரசன்னாவாலேயே புரிந்து கொள்ள முடியாமல் திகைத்தாலும் அவனால் மஞ்சரியின் மீதிருந்து கண்களை அகற்ற முடியவில்லை.



மஞ்சரி முல்லைப் பந்தலில் இருந்த விலக தோட்டத்தில் இருந்த மற்ற செடிகள் ஒவ்வொன்றின் அருகிலும் சென்று அவைகளை நலம் விசாரிப்பவள் போலத் தடவிக் கொடுத்தாள். அவளது பேச்சிற்கு தலையாட்டுவதை போல அந்த செடிகளும் காற்றில் அசைந்து மஞ்சரியைத் தழுவ அவள் கூச்சத்துடன் தன் முல்லைப் பற்கள் தெரிய சிரித்தாள்.

இயற்கையோடு இயற்கையாக எவ்விதமான போலித்தனங்களும் அற்ற மஞ்சரியின் நடவடிக்கை பிரசன்னாவின் மனதிற்குள் ஒரு இன்பப் பிரவாகையை ஊற்றெடுக்க வைத்தது. மஞ்சரியைப் போன்றே கட்டுப்பாடுகள் அந்த பறவை போன்ற மனத்துடன் வாழ வேண்டும் என்ற விருப்பம் பிரசன்னாவின் மனதில் தோன்றியது. அவன் மஞ்சரியிடம் பேசும் ஆவலைத் தாங்க முடியாதவனாக இருட்டைவிட்டு வெளிவருவதற்கும் வீட்டுக்குள் இருந்து பட்டம்மாள் வருவதற்கும் சரியாக இருந்தது.

‘‘கார் வந்து இவ்வளவு நேரம் ஆகியும் உன்னைக் காணாமேன்னுதான் வெளியில வந்தேன் கண்ணு. இவ்வளவு நேரம் என்ன பண்ணிக்கிட்டு இருந்த?’’ பட்டம்மாள் நேரடியாக கேட்டுவிட அவருக்குப் பதிலளிக்க முடியாமல் சில நொடிகள் தடுமாறினான் பிரசன்னா.

பட்டம்மாள் அனுபவசாலி மட்டும் அல்ல திறமைசாலியும் கூட. அவளால் பிரசன்னாவின் தடுமாற்றத்தை ஒரே பார்வையில் எடைபோட்டு விட முடிந்தது. அவளது

பார்வை பிரசன்னாவின் முகத்தில் திருப்தியுடன் படிந்தது.

“சரிய்யா ராசா. நீ போய் குளிச்சுட்டு வா. நான் ராமாயிகிட்டச் சொல்லி சூடா டிபனை எடுத்து வைக்கச் சொல்றேன்” பட்டம்மாளின் குரலைக் கேட்டும் கேட்காதவனாக வேகமாக வீட்டிற்குள் விரைந்துவிட்டான் பிரசன்னா.

இவர்கள் இருவரின் உரையாடலும் காதில் விழாதவளாக மஞ்சரி தனக்கும் தன்னுடைய செடிகளுக்கும் இடையிலாதன தனியொரு உலகத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.

# 17

வேகமாக அறைக்குள் சென்று கதவடைந்த பிரசன்னாவிற்குத் தன் இதயம் துடிப்பது தனக்கே தெளிவாகக் கேட்பதைப் போல இருந்தது. உண்மையில் அவனது இதயமும் அப்பொழுது படபடத்துக் கொண்டு தான் இருந்தது. அவன் இருட்டுக்குள் நின்று கொண்டிருந்ததை பட்டம்மாள் பார்த்து இருந்தால் தன்னைப் பற்றி அவள் என்ன நினைத்திருப்பாள் என்பதை எண்ணிப் பார்க்கவே பிரசன்னாவிற்கு அச்சமாக இருந்தது.



சஞ்சனாவின் மனதில் ஆசையை வளர்த்து விட்டுத் தான் இப்படி மஞ்சரியைப் பார்த்துக் கொண்டிருப்பது தவறு என்று பிரசன்னாவின் உள்ளம் குற்றவுணர்வில் தவித்தது. பிரசன்னாவை அருகில் வைத்துக்கொண்டே தினேசை சஞ்சனா ஆவலுடன் பார்வையிட்டது பிரசன்னாவின் உள்ளத்தில் தோன்றவே இல்லை.

எதையும் எண்ணிப் பார்த்து முடிவிற்கு வரும் மனநிலை அற்றவனாக வேகமாக குளியல் அறைக்குள் நுழைந்து ஷவரைத் திருகிவிட்டு அதனடியில் வெகு நேரம் நின்ற பிறகுதான் பிரசன்னாவின் இதயம் சம நிலைக்கு வந்தது. படபடப்பு மறைந்தவனாக உடை மாற்றி அறையை விட்டு வந்து சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தவனின் முன்பு ஆவி பறக்கும் இட்லிகள் இருந்த தட்டைக் கொண்டு வந்து வைத்தாள் பட்டம்மாள். அந்த முதிய முகத்தில் தெரிந்த தாய்மையின் தோற்றத்தில் மனம் நெகிழ்ந்தான் பிரசன்னா. அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் பிரசன்னாவிற்கு இரவு உணவை கொடுத்த பிறகே உறங்கச் செல்வாள் பட்டம்மாள். பிரசன்னா எவ்வளவோ தடுத்துக் கூறியும் பட்டம்மாள் தன்னுடைய இந்தக் குணத்தை மட்டும் மாற்றிக் கொள்ளவே இல்லை.

“நீங்க சாப்பிட்டீங்களா பாட்டி...” பாசத்தில் கரகரத்த குரலில் கேட்ட பேரனின் தோள்களைத் தடவிக் கொடுத்தாள் பட்டம்மாள்.

“நாங்க எல்லாரும் சாப்பிட்டுவிட்டோம் ராசா. நீ நிம்மதியா சாப்புடு. ராமாயி அந்தச் சாம்பாரைக் கொண்டு வா” ராமாயி கொண்டு வந்த சிறிய சாம்பார்

கிண்ணத்தில் அருகில் இருந்து இரண்டு ஸ்பூன் நெய் எடுத்து ஊற்றிக் கலக்கிவிட்டு பிரசன்னாவின் அருகில் வைத்தாள் பட்டம்மாள்.

பிரசன்னாவிற்கு சாம்பாரில் நெய் கலந்து சாப்பிடத்தான் பிடிக்கும். பேரனின் ஒவ்வொரு ருசியும் பாட்டிக்கு அத்துப்படி. சாம்பாரில் இட்லியை முக்கி எடுத்து வாயில் போட்ட பிரசன்னாவிற்கு அந்த உணவில் நெய்யின் சுவையை விட அதிகமாக பட்டம்மாளின் பாசம்தான் தெரிந்தது.

தோட்டத்தில் இருந்து வந்து மாடியேறிய மஞ்சரி டைனிங் டேபிளில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பிரசன்னாவைப் பார்த்துப் புன்னகையுடன் அவர்களின் எதிரில் வந்து அமர்ந்தாள்.

"எப்ப மாமா வந்தீங்க? நீங்க வந்ததை நான் கவனிக்கவே இல்லையே?" மஞ்சரியின் கேள்வி பிரசன்னாவின் மனதில் இனம் புரியாத நிம்மதியைத் தோற்றுவித்தது.

தான் வந்ததையும் மஞ்சரியைப் பார்த்ததையும் எவரும் அறியவில்லை என்ற உண்மையே பிரசன்னாவின் உள்ளத்திற்கு அமைதியைக் கொடுத்தது. அந்த அமைதி தந்த நிறைவுடன் மஞ்சரியின் முகத்தை எவ்விதக் குற்றவுணர்வும் இன்றி ஏறிட்டான் பிரசன்னா.

"நான் வந்து அரைமணி நேரத்திற்கு மேலே ஆச்சு மஞ்சரி. நீ என்ன இன்னும் தூங்கலையா?"

"இல்ல மாமா. எனக்கு நைட்ல கொஞ்சநேரம் தோட்டத்தில் வாக்கிங் போனால்தான் தூக்கமே வரும்.



ஆனால் இங்க நம்ம வீட்டுத் தோட்டத்தில் ஒரே குப்பையாக இருக்கு மாமா. ஏன்... தோட்டத்தை யாரும் சரியாக பராமரிப்பதில்லையா? பேத்தியின் முகத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் பட்டம்மாள்.

"எங்க கண்ணு? வைசாலிக்கு வீட்டுக்குள் இருக்கும் வேலையைக் கவனிக்கவே பொழுது சரியாக இருக்கு. நான்தான் தோட்டக்காரனை விரட்டி வேலை வாங்குவேன். இப்பத்தான் எனக்கு உங்க தாத்தாவைப் பத்தி நினைக்கவே பொழுது பத்தலியே? இதில் நான் செடியையும் கொடியையும் பத்தி எங்க நினைக்கிறது?" கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்ட பாட்டியின் தோளைக் கட்டிக் கொண்டாள் மஞ்சரி.

"பாட்டி..." அழுகையில் குலுங்கிய பேத்தியின் முதுகை தடவிக் கொடுத்தபடியாக தானும் கண்ணீர் விட்டபடி நின்றிருந்தாள் பட்டம்மாள்.

"அம்மாடி... கண்ணு. அழாதேடா செல்லம். நான்தான் கூறுகெட்ட தனமா இந்த ராத்திரி நேரத்தில எதையோ புலம்பிட்டேன். அதைக் கேட்டுட்டு நீயும் இப்படி அழுதா எனக்கு யாரு தாயி ஆறுதல் சொல்வது... என்னை ஆற்றவும் தேற்றவும் நீயும் என் பேரனும்தானே இருக்கீங்க?"

"தாத்தாவை நினைச்சா எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு பாட்டி. எவ்வளவு கம்பீரமா இந்த மாளிகையை வலம் வந்துக்கிட்டு இருந்த மனுசன் இப்படி படுக்கையில் கிடக்கிறதைப் பார்க்கிறப்ப எனக்கு... என்னால..." அழுகையில் குரல் அடைக்க பெரும் கேவ

லுடன் பட்டம்மாளை மேலும் இறுக்கிக் கொண்டாள் மஞ்சரி.

மஞ்சரியின் மென்மையான சுபாவத்தால் வாயடைத்து அமர்ந்துவிட்டான் பிரசன்னா. ஒரே வீட்டில் இருந்தாலும் அவன் தன் தாத்தாவின் நிலையை எண்ணி இவ்வளவு தூரம் வருத்தம் கொள்ளவில்லை என்பதை பிரசன்னாவின் இதயம் இடித்துரைத்தது. இத்தனைக்கும் ஏகாம்பரம் பிரசன்னாவைத் தன் உயிர் மூச்சாக எண்ணி வாழ்ந்தவர்.

''கண்ணு... ராசாத்தி. உங்க தாத்தாவும் நானும் என்னிக்கும் உங்க கூடத்தான் இருப்போம் கண்ணு. முதலில் கண்ணைத் துடைச்சுக்கடா. உன் அம்மா பார்த்தால் அவளும் வருத்தப்படுவா இல்ல? மஞ்சரிக் கண்ணு... சொன்னால் கேளுடா...'' தன் சோகம் மறந்து பேத்தியைத் தேற்றினாள் பாட்டி.

மோகனாவின் பெயரைக் கேட்டவுடன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் மஞ்சரி.

''அம்மா சரியாத் தூங்கியே மாசக் கணக்காகுது பாட்டி. நைட்ல ஸ்லீப்பிங் டேப்லெட் போட்டுக்கிட்டுத்தான் தூங்கறாங்க. பகலில் எல்லாம் தாத்தாவை நினைச்சே இருக்காங்க. அதனாலதான் அப்பா புலம்பிக்கிட்டு ஒருவாரம் எல்லா வேலையையும் ஒதுக்கி வெச்சுட்டு எங்களை இங்க கூட்டிக்கிட்டு வந்துட்டார்.''

''எல்லாம் விதி கண்ணு. வேற என்ன சொல்றது நான். அந்த ஆண்டவன் நம்மளுக்கு என்ன விதிச்சிருக்கானோ அதுதான நடக்கும்? நாம புலம்புறதினால எதையும்



மாத்தி அமைச்சுற முடியுமா கண்ணு? உங்கம்மாவுக்கு நான் புரிய வைக்கிறேன்டா. நீ போய் படு. ராமாயி... பிள்ளைகளுக்கு பால் ஆத்தி எடுத்துக்கிட்டு வா.''

ராமாயி கொண்டு வந்த பாலைக் குடித்து விட்டு மஞ்சரி படுக்கப் போய்விட, பட்டம்மாள் ஏகாம்பரத்தின் முனங்கல் ஓசைகேட்டு அவர்களின் அறைக்குள் சென்று விட ஹாலில் இருந்த சோபாவில் தனியாக அமர்ந்தான் பிரசன்னா.

பகலில் அத்தனை ஆள் நடமாட்டத்துடன் இருந்த அந்தப் பெரிய மாளிகையின் இரவின் நிசப்தம் பிரசன்னாவின் உள்ளத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. பக்கத்தில் இருந்த அறையில் இருந்து வந்த பட்டம்மாளின் பேச்சுக் குரலும் அதற்கு ஏகாம்பரத்தின் பதில் முனங்கலும் மெல்லிய குரலில் பிரசன்னாவின் காதில் விழுந்தது அவனது இதயத்தை வேதனையில் துவழ வைத்தது.



## 18

கண்ணாடியின் முன் நின்று தலைவாரிக் கொண்ட பிரசன்னா ஆளுயரக் கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்துப் புன்னகைத்தான். சிவந்த நிறமும், அலையலையாகப் பரவிப் படர்ந்த கூந்தலும், அளவான

செதுக்கிய நாசியும், அழகான பல்வரிசையும், அகன்ற தோள்களுடன் ஆறடிக்கும் அதிக உயரத்துடனும் கம்பீரமான அழகான ஆண்மகனாகத் தெரிந்த தன் தோற்றத்தை தானே பெருமையாகப் பார்த்துக் கொண்டான் பிரசன்னா.

"நீங்க ரொம்ப அழகு மாமா... என்னைப் போலவே" கிறக்கத்துடன் முணுமுணுக்கும் சஞ்சனாவின் குரல் காதோரமாக ஒலிப்பதைப் போல இருந்தது பிரசன்னாவிற்கு.

ஆண்களின் அழகென்பது அவர்களின் புத்திசாலித்தனமும், தொழிலில் அவர்கள் அடையும் வெற்றிகளும் தான் என்ற கொள்கையை உறுதியுடன் எண்ணிக் கொண்டிருக்கும் பிரசன்னா சஞ்சனாவின் கிறக்கமான குரலுக்கு மட்டும் மயங்கி விடுவான். பெண்களிடத்தில் அவன் அதிகமாக பழகியிராததும் கூட அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

"மாமா... ரெடியா? சாப்பிடப் போகலாமா?" அறைக் கதவை நாசுக்காகத் தட்டிவிட்டு உள்ளே வந்த மஞ்சரி கருநீல நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட காட்டன் சுடிதாரும், வெண்நிற பேண்ட்டும், சாலும் அணிந்திருந்தாள்.

சஞ்சனாவைப் போல இறுக்கமாக அணியாமல் கண்ணியமாகத் தைக்கப்பட்டிருந்த மஞ்சரியின் சுடிதாரின் அமைப்புதான் பிரசன்னாவின் கண்ணில் முதலில் தென்பட்டது. சாலைக்கூட சஞ்சனாவைப் போல கழுத்தில் அணியாமல், முன்புறம் விசிறி போன்ற



மடிப்புடன் அணிந்திருந்த மஞ்சரியின் தோற்றம் பிரசன்னாவிற்கு மிகவும் பிடித்திருந்தது. பிரசன்னாவின் பார்வை தன்னை ஆராய்வதை கன்னச் சிவப்புடன் கேள்வியாகப் பார்த்தாள் மஞ்சரி.

"என்னாச்சு மாமா?" புரியாமல் கேட்டாள் மஞ்சரி.

"இல்ல மஞ்சரி. சஞ்சனாவோட சுடிதார் உன்னோடதைப்போல இருப்பதில்லையேன்னு நினைச்சேன்..." உண்மையை மறைக்காமல் கூறினான் பிரசன்னா.

மஞ்சரியின் முகத்தில் ஒரு நொடி ஏமாற்றம் தோன்றியதைப் போல இருந்தாலும் மறுநொடியே தனது சிரிப்பால் அதை மறைத்துவிட்டாள் அவள்.

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு டேஸ்ட் மாமா. எனக்கு இப்படி டிரெஸ் பண்ணிக்கத்தான் பிடிக்கும்" அவனது பதிலை எதிர்பார்க்காமல் வெளியேறிவிட்ட மஞ்சரியைப் பின் தொடர்ந்தான் பிரசன்னா.

ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த யோகநாதனும் சுந்தரமும் தாழ்ந்த குரலில் கவலையுடன் எதையோ கூறிக் கொண்டிருக்க அவர்களின் எதிரில் நின்றிருந்த மோகனாவும் வைசாலியும் அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

பிரசன்னாவும் மஞ்சரியும் ஒருவருடன் மற்றவர் பேசிச் சிரித்தபடி வர பெரியவர்கள் தங்களின் பேச்சை நிறுத்திவிட்டு இருவரையும் கவலையுடன் ஏறிட்டுப் பார்த்தார்கள்.

தந்தையின் கண்ணில் தெரிந்த கவலையை நொடியில் புரிந்து கொண்ட மஞ்சரியின் புருவம் கேள்வியாகச்

சளித்தது. அவள் திரும்பி அருகில் இருந்த பிரசன்னாவைப் பார்க்க அவனும் புரியாமல் யோகநாதனைப் பார்த்தான். எதுவோ சரியில்லை என்பது சிறியவர்கள் இருவருக்கும் புரிந்தது.

''அப்பா... ஏன் கவலையா இருக்கீங்க?'' கேட்டபடி யோகநாதனின் அருகில் அமர்ந்தான் பிரசன்னா. படபடக்கும் மனதோடு மாமாவின் முகத்தைப் பார்த்தாள் மஞ்சரி.

''தாத்தாவுக்கு உடம்புக்கு ரொம்பவும் முடியலை பிரசன்னா. அதான் கவலையா இருக்கு'' யோகநாதன் சொல்லி முடிக்கும் முன்பாக மோகனாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''அம்மா... வேண்டாம்மா'' மஞ்சரி மோகனாவின் கண்ணைத் துடைத்துவிட வேதனையுடன் மோகனாவைப் பார்த்தார் சுந்தரம்.

''டாக்டர் ஏதோ ஆபரேசன்ல இருக்காராம் பிரசன்னா. வர்றதுக்கு மதியம் ஆகும்னு சொன்னார். அவருக்காக காத்திருக்கிறதைத் தவிர வேற வழியில்லை. பார்ப்போம்...''

''நாம வேணும்னா தாத்தாவை ஹாஸ்பிடலுக்கே கொண்டு போயிடலாம்பா. அதான் நல்லதுன்னு தோணுது...''

''வேண்டாம்ப்பா. மாமாவோட உடம்பு இருக்கிற கண்டிசன்ல அலைச்சல் வேண்டாம்னு தோணுது எனக்கு. நாம டாக்டர் வர்ற வரைக்கும் வெயிட் பண்ணிப் பார்க்கலாமே...'' பிரசன்னாவைத் தடுத்தது



சுந்தரத்தின் குரல். யோகநாதனும் அதையே எண்ணுபவராகத் தலையாட்ட வேறுவழியின்றி அமர்ந்துவிட்டான் பிரசன்னா.

''நீ கடைக்குக் கிளம்பு பிரசன்னா. நாங்கதான் இருக்கோமே? நாங்க இங்க பார்த்துக்கிறோம். நீ போய் உன் தொழிலைக் கவனி'' யோகநாதன் பிரசன்னாவைப் பார்த்துக் கூற அவன் சம்மதமாகத் தலையசைத்துவிட்டு எழுந்து ஏகாம்பரம் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

தோற்றத்திலும் கம்பீரத்திலும் பிரசன்னாவைப் போன்றே காட்சியளித்த ஏகாம்பரம், தன் அத்தனை அடையாளமும் தொலைந்தவராக கட்டிலில் தளர்வாகப் படுத்திருந்தார். அவரது கையைப் பிடித்துக் கொண்டே கண்ணீரை மறைத்த கண்களுடன அவரருகில் கட்டிலில் அமர்ந்திருந்தாள் பட்டம்மாள்.

''தாத்தா...'' பிரசன்னாவின் அழைப்பைக் கேட்டுக் கண் திறந்து பார்த்த ஏகாம்பரத்தின் கண்ணில் பேரனைக் கண்டவுடன் அந்த நிலையிலும் ஒரு ஒளி தோன்றியது. அவர் கையசைத்துத் தன் அருகில் அமரும்படி பேரனைக் கேட்டுக் கொண்டார்.

''சொல்லுங்க தாத்தா...'' ஏகாம்பரத்தின் முகத்தின் அருகில் குனிந்து அமர்ந்தான் பிரசன்னா.

''தாத்தா எது செஞ்சாலும் உன் நல்லதுக்காகத்தான் செய்வேன் பிரசன்னா...'' மெல்லிய குரலில் கூறினார் ஏகாம்பரம்.

எனக்குத் தெரியும் தாத்தா."

"அதை மட்டும் என்னிக்கும் மறக்காத. அது போதும் எனக்கு..." தன் கடமை முடிந்தவரைப் போல அதற்கு மேல் பேச முடியாமல் கண்மூடிப் படுத்துவிட்டார் கொம்பரம்.

தாத்தாவின் வார்த்தைகள் பிரசன்னாவின் இதயத்தில் ஆயிரமாயிரம் கேள்விகளைத் தோற்றுவித்தது. ஏனெனில் கொம்பரம் காரணம் இல்லாமல் ஒரு வார்த்தைக் கூடப் பேசிப் பிரசன்னா பார்த்ததில்லை.

அத்தனை நாட்களாக வராத சுந்தரம் குடும்பத்துடன் வந்திருப்பதும், பெரியவர்கள் அனைவரும் கூடிக்கூடிப் பேசுவதும் அதையும் அவனிடம் மறைப்பதும் பிரசன்னாவின் மனதில் சந்தேக விதையை விதைத்தது. அவன் என்னவோ நடக்கப் போவதாக உணர்ந்தாலும் அது என்னவென்பதை புரிந்து கொள்ள முடியாதவனாக குழப்பத்துடன் அறையில் இருந்து வெளிவந்தான்.

அறையை விட்டு வெளிவந்த பிரசன்னாவை ஹாலில் இருந்த அனைவரும் திரும்பிப் பார்க்க அவன் புதிரான மன நிலையுடன் அவர்களைப் பார்த்தான்.

"சரிங்கப்பா. நான் கடைக்குக் கிளம்பறேன்..." தன் கையில் இருந்த கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே யோகநாதனிடம் விடைபெற்றான் பிரசன்னா.

'சஞ்சனாவை இன்னும் காணோமே... இவ ஏன் இவ்வளவு லேட் பண்ணிக்கிட்டு இருக்கா' மனதிற்குள் எரிச்சலுடன் கூறிக் கொண்டிருந்த பிரசன்னாவின்



வார்த்தைகளைக் கேட்டவளைப்போல அவன் முன் வந்து நின்றாள் சஞ்சனா.

"போகலாமா மாமா... லேட்டாகிடுச்சு" ஏனோ கட்டிய புருசனைக் கூப்பிடும் உணர்வுடன் கேட்டவளை புருவம் சுளிக்கப் பார்த்தார் யோகநாதன்.

"சஞ்சனா காலேஜுக்கு பிரசன்னாவின் காருலதான் போவா மச்சான். அதான் கரெக்டா வந்து நிக்கிறா" யோகநாதனின் பார்வை அர்த்தத்துடன் சுந்தரத்தைப் பார்த்தது.

"அப்படியா மாப்பிள்ளை! நீங்க ஒண்ணு செய்யுங்க பிரசன்னா, மஞ்சரியையும் உங்ககூட கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போங்களேன். இங்கிருந்தா அவளும் தேவை இல்லாமச் கவலைப்பட்டுக்கிட்டு இருப்பா. கொஞ்ச நேரம் ப்ரீயா இருந்ததைப் போலவும் இருக்கும். உங்க ஷாப்பிங் காம்ப்ளக்ஸை சுத்திப் பார்த்ததைப் போலவும் இருக்கும். மஞ்சரி நீ போயிட்டு வாம்மா..." சுந்தரத்தின் பேச்சைத் தட்டமுடியாதவளாக பிரசன்னாவைத் திரும்பிப் பார்த்தாள் மஞ்சரி.

"ஆமாம் மஞ்சரி. நீ இதுவரைக்கும் என்னோட ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வந்ததில்லையில்ல? வா... போயிட்டு சீக்கிரமா வந்திருவோம்..." இயல்பாகக் கூறிக் கொண்டே அனைவருக்கும் பொதுவாக தலையசைத்து விட்டுச் சென்ற பிரசன்னாவை மஞ்சரி தொடர ஏமாற்றம் கவிழ்ந்த முகத்துடன் உடன் சென்றாள் சஞ்சனா.

# 19

காரின் கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் அமர்ந்த பிரசன்னா தன் அருகில் முன் இருக்கையில் அமரவந்த சஞ்சனாவைத் தடுத்தான்.

"மஞ்சரியோட சேர்ந்து பின் சீட்டில் உட்கார்ந்துக்க சஞ்சனா..." யாரோ முகத்தில் அறைந்ததைப்போல அவமானத்தில் முகம் சிவந்தாள் சஞ்சனா.

"என்ன மாமா இது? உங்க பக்கத்தில உட்கார்ந்து வர்றதுக்காகத்தான் நான் உங்ககூடக் காரில் வர்றதே? அதையும் கூட நீங்க..." காலைத் தரையில் செல்லமாக உதைத்துக் கொண்டே சிணுங்கினாள் சஞ்சனா.

"ப்ளீஸ்டா... இன்னிக்கு மட்டும்தான? மஞ்சரி தனியா உட்கார்ந்திருப்பாள்ல... அதனாலதான்டா..." நடக்கும் நாடகத்தைப் பார்க்கச் சகிக்காத குரலில் இடைமறித்தாள் மஞ்சரி.

"இட்ஸ் ஓகே மாமா. உங்க பழக்கத்தை எனக்காக மாத்திக்க வேண்டாம். ஆக்சுவலா எனக்கு இன்னிக்கு அவுட்டிங் வர்றதிலேயே விருப்பம் இல்லை. தாத்தாவைப் பற்றியே நினைப்பா இருக்கு..." கலங்கிய கண்களுடன் கூறிக்கொண்டே மஞ்சரி பின்னால்



அமர்ந்துகொள்ள, சட்டமாக முன் இருக்கையில் பிரசன்னாவின் அருகில் அமர்ந்து கொண்டாள் சஞ்சனா.

பிரசன்னா சங்கடத்துடன் திரும்பிப் பார்த்ததைக் கவனிக்காத பாவனையுடன் ஜன்னலின் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் மஞ்சரி.

அதே நேரத்தில் உதட்டில் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் சஞ்சனா தன்னைக் கவனிப்பதையும் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் இருந்தாள் அவள்.

"என்னோட ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அப்படியொன்னும் ரொம்பப் பெரிசெல்லாம் கிடையாது மஞ்சரி. கோயம்பத்தூரில் இருக்கிற பெரிய பெரிய மால்களை எல்லாம் இமேஜின் பண்ணிப் பார்த்தால் நீ இதைப் பார்த்து ஏமாந்துதான் போவ..."

"அப்படியெல்லாம் இல்லை மஞ்சரி. எங்களோட கடையும் பெரிசுதான். இவர் சும்மா பேச்சுக்காக இப்படிச் சொல்றார்."

"ஆக்சுவலா மஞ்சரி... நான் இதை இன்னும் பெரிய லெவலுக்குக் கொண்டு போகணும்னுதான் பிளான் பண்ணிக்கிட்டு இருக்கேன். பார்க்கலாம்..."

"இப்பவே நாங்க ரொம்பப் பெரிய லெவலில்தான் பண்ணிக்கிட்டு இருக்கோம் மஞ்சரி. கூடிய சீக்கிரத்தில் எங்க மாமாவோட டேலண்ட்டுக்கு இன்னும் உயரத்துக்குப் போயிடுவார்."

"கோயம்பத்தூரில் நீ மெயின்டெயின் பண்ணிக்கிட்டு இருக்கிற கார்மெண்ட் பேக்டரியும் பெரிதாகத்தானே இருக்கும் மஞ்சரி?"

"லேடீசுக்கு எதுக்கு மாமா பிஸினெஸ் எல்லாம்? என்னை மாதிரி புருசனைக் கவனிச்சுக்கிட்டாலே பத்தாதா? இதெல்லாம் ஒரு கேள்வின்னு கேட்கறீங்களே?"

"நீ பாரின் போயிருந்தப்ப நான் உங்க வீட்டுக்கு வந்திருந்தேன் மஞ்சரி. அப்பத்தான் நீ பாரின் போயிருக்கிற விசயமே எனக்குத் தெரியும்."

"நீங்க எப்ப மாமா கோயம்பத்தூர் போனீங்க? ஏன் இதுவரை என்கிட்ட சொல்லலை? நீங்க எதையுமே என்கிட்ட மறைச்சது இல்லையே மாமா..." சலுகையுடன் கேட்டவளைப்போலக் கேட்டு பிரசன்னாவின் தோளில் செல்லமாகக் குத்தினாள் சஞ்சனா. அவள் செல்லமாக அடித்ததைச் சிரிப்புடன் பொறுத்துக் கொண்டு மஞ்சரியை பார்த்தான் பிரசன்னா.

நடக்கும் அனைத்தும் மஞ்சரிக்குச் சொல்லிய செய்தியின் அர்த்தத்தை புரிந்து கொண்டதின் அடையாளமாகப் பிரசன்னாவைப் புன்சிரிப்புடன் பார்த்தாள் மஞ்சரி.

அதுவரை பிரசன்னா கேட்ட எந்தக் கேள்விக்குமே மஞ்சரியைப் பேசவிடாமல் இடைமறித்துக் கொண்டிருந்த சஞ்சனாவால் மஞ்சரியின் சிரிப்பைத் தடுக்க இயலவில்லை. மஞ்சரியும் சஞ்சனாவை ஒரு பொருட்டாகவே மதிக்காததைப் போல உணர்ந்தாள் சஞ்சனா.

அவள் பிரசன்னா எதிர்பாராத நேரத்தில் அவன் தோளில் சாய்ந்து கொண்டுவிட பிரசன்னா பதறிப்போய்



சஞ்சனாவை விலக்கிவிட்டு மஞ்சரியைச் சங்கடத்துடன் பார்த்தான்.

"மஞ்சரி... நான்... நாங்க..." தயக்கத்துடன் இழுத்துக் கொண்டிருந்த பிரசன்னாவைப் பார்த்து மயக்கும் புன்னகையை உதிர்த்தாள் சஞ்சனா.

"நீங்க ஒண்ணும் தப்பாக எடுத்துக்காதீங்க மஞ்சரி. மாமாவுக்கு நான் இப்படித் தோளில் சாய்ஞ்சுக்கிட்டா தான் பிடிக்கும். அதனாலதான்..."

"ஏய்... சஞ்சனா" அதட்டிய பிரசன்னாவை சட்டையே செய்யாமல் தொடர்ந்தாள் சஞ்சனா.

நானும் மாமாவும் ஒருத்தரையொருத்தர் லவ் பண்றோம் மஞ்சரி. மாமா என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறார். இல்ல மாமா? அதனால நாங்க இப்படி ஜாலியா இருப்பதெல்லாம் சகஜம்தான். இன்னிக்கு நீ இருக்கிறதால ரொம்ப அடக்கமா வர்றார். இல்லன்னா..." வெட்கத்தில் முகம் சிவக்க நிறுத்திய சஞ்சனா கூறாத வார்த்தைகளை அவளது வெட்கம் சிவப்பு மஞ்சரிக்குப் புரிய வைத்தது.

"ஓஹோ?" சஞ்சனாவின் அனைத்து வார்த்தைகளுக்கும் வெட்கத்திற்கும் மஞ்சரியிடம் இருந்து வந்த பதில் இந்த ஒற்றை வார்த்தை மட்டும்தான். மற்றபடி அவள் இதற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லாதவளைப் போல ஜன்னலின் பக்கமாக பார்வையைத் திருப்பி வெளியே தெரிந்த காட்சிகளை சுவாரசியமாகப் பார்வையிடத் தொடங்க இம்முறை திகைப்பில் ஆழ்ந்திருப்பது சஞ்சனாவின் நிலையாகிப் போனது.

ஷாப்பிங் காம்ப்ளக்ஸின் வாசலின் கார் சென்று நிற்கும் முன்பாக காரின் கதவைத் திறந்து கொண்டு திமிராக இறங்கி நின்று சுற்றுமுற்றும் அதிகாரமாகப் பார்த்தாள் சஞ்சனா.

வழக்கம்போல அவளைப் பார்த்த பணியாளர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துவிட்டு நமுட்டுச் சிரிப்புடன் அவளைப் பார்க்க அதையும் கண்டு கொள்ளாதவளாக பிரசன்னாவின் அருகில் சென்று நெருங்கி நின்று கொண்டாள் அவள்.

சஞ்சனா அருகில் வந்து நிற்பதைக் கவனிக்காத பிரசன்னா வேகமாக காரின் பின்கதவை மஞ்சரிக்காக திறந்துவிட ஒரு இளவரசியின் கம்பீரத்துடனும் அழகுடனும் காரில் இருந்து இறங்கிய மஞ்சரியைப் பார்த்த பணியாளர்கள் அனைவரும் தங்களது வேலைகளை மறந்தவர்களாக மெய்மறந்து நின்றுவிட ஒரு தேர்ந்த தொழிலதிபரின் கண்ணோட்டத்துடன் பிரசன்னாவின் கடையைச் சுற்றி வந்தது மஞ்சரியின் பார்வை.

''என்ன மஞ்சரி... நல்லாயிருக்கா?'' ஆவலுடன் கேட்டான் பிரசன்னா.

''ரொம்ப நல்லாயிருக்கு மாமா. சென்ட்ரான இடத்தில் இருக்கிறதால இன்னும் முன்னேற்றம் அடைய சான்ஸ் இருக்க. பெஸ்ட் விஸ்ஸஸ் பார் யூ..'' மனம் நிறைந்து வாழ்த்துக் கூறினாள் மஞ்சரி.

''சும்மாவா... கோடிக்கணக்கான காசையில்ல இதில கொண்டு வந்து கொட்டியிருக்கோம்'' ஸ்டைலாக



தலைமுடியைக் கோதிக் கொண்டே கூறியபடி நிமிர்ந்த சஞ்சனாவின் வார்த்தைகளைக் கேட்க அவளருகில் யாரும் 'இல்லை. மஞ்சரி கடையைப் பார்வையிட்டுக் கொண்டே செல்ல அவளுக்கு அனைத்தையும் சுட்டிக் காட்டியபடி உடன் சென்று கொண்டிருந்தான் பிரசன்னா. அவமானத்தில் முகம் சிவந்தாலும் அதைக் காட்டிக் கொள்ள மனம் இல்லாதவளாக அவர்களைத் தொடர்ந்து ஓடினாள் சஞ்சனா.

''இதெல்லாம் பலசரக்கு ஐட்டம் மஞ்சரி. இது வந்து...'' ஒவ்வொன்றையும் கைநீட்டி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்த பிரசன்னாவை நடையை நிறுத்திவிட்டுத் திரும்பி நின்று முறைத்தாள் மஞ்சரி.

''எனக்குத் தெரியும் மாமா. நான் சுற்றிப் பார்த்துக் கொள்கிறேன். நீங்க போய் உங்க வொர்க்கைப் பாருங்க.''

''வாட்... ஆர் யூ ஷ்யூர்?'' ஆச்சரியமாகக் கேட்டான் பிரசன்னா. ஏனென்றால் சஞ்சனா கடைக்கு வந்து விட்டால் பிரசன்னாவை ஒரு வேலையுமே பார்க்க விடாதபடி செய்துவிடுவாள். இத்தனைக்கும் அவள் இரு தினங்களுக்கு ஒரு முறையாவது கடைக்கு வருபவள்.

''மாமா இது என்ன... மாமா அது என்ன?'' என்ற அவளது கேள்விகளுக்குப் பதில் சொல்வதிலேயே பாதி நாள் ஓடிடும் பிரசன்னாவிற்கு. இப்பொழுது மஞ்சரி கூறியதைக் கேட்கும்பொழுது பிரசன்னாவிற்கு ஆச்சரியமாகவே இருந்தது.

''ஏன் மாமா... நான் என்ன சின்னக் குழந்தையா? நானாக பார்த்துவிட்டு உங்க ரூமுக்கு வர்றேன்... நீங்க போங்க.''

ஷாப்பிங் காம்ப்ளக்ஸின் வாசலின் கார் சென்று நிற்கும் முன்பாக காரின் கதவைத் திறந்து கொண்டு திமிராக இறங்கி நின்று சுற்றுமுற்றும் அதிகாரமாகப் பார்த்தாள் சஞ்சனா.

வழக்கம்போல அவளைப் பார்த்த பணியாளர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துவிட்டு நமுட்டுச் சிரிப்புடன் அவளைப் பார்க்க அதையும் கண்டு கொள்ளாதவளாக பிரசன்னாவின் அருகில் சென்று நெருங்கி நின்று கொண்டாள் அவள்.

சஞ்சனா அருகில் வந்து நிற்பதைக் கவனிக்காத பிரசன்னா வேகமாக காரின் பின்கதவை மஞ்சரிக்காக திறந்துவிட ஒரு இளவரசியின் கம்பீரத்துடனும் அழகுடனும் காரில் இருந்து இறங்கிய மஞ்சரியைப் பார்த்த பணியாளர்கள் அனைவரும் தங்களது வேலைகளை மறந்தவர்களாக மெய்மறந்து நின்றுவிட ஒரு தேர்ந்த தொழிலதிபரின் கண்ணோட்டத்துடன் பிரசன்னாவின் கடையைச் சுற்றி வந்தது மஞ்சரியின் பார்வை.

''என்ன மஞ்சரி... நல்லாயிருக்கா?'' ஆவலுடன் கேட்டான் பிரசன்னா.

''ரொம்ப நல்லாயிருக்கு மாமா. சென்ட்ரான இடத்தில் இருக்கிறதால இன்னும் முன்னேற்றம் அடைய சான்ஸ் இருக்க. பெஸ்ட் விஸ்ஸஸ் பார் யூ..'' மனம் நிறைந்து வாழ்த்துக் கூறினாள் மஞ்சரி.

''சும்மாவா... கோடிக்கணக்கான காசையில்ல இதில கொண்டு வந்து கொட்டியிருக்கோம்'' ஸ்டைலாக



தலைமுடியைக் கோதிக் கொண்டே கூறியபடி நிமிர்ந்த சஞ்சனாவின் வார்த்தைகளைக் கேட்க அவளருகில் யாரும் இல்லை. மஞ்சரி கடையைப் பார்வையிட்டுக் கொண்டே செல்ல அவளுக்கு அனைத்தையும் சுட்டிக் காட்டியபடி உடன் சென்று கொண்டிருந்தான் பிரசன்னா. அவமானத்தில் முகம் சிவந்தாலும் அதைக் காட்டிக் கொள்ள மனம் இல்லாதவளாக அவர்களைத் தொடர்ந்து ஓடினாள் சஞ்சனா.

''இதெல்லாம் பலசரக்கு ஐட்டம் மஞ்சரி. இது வந்து...'' ஒவ்வொன்றையும் கைநீட்டி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்த பிரசன்னாவை நடையை நிறுத்திவிட்டுத் திரும்பி நின்று முறைத்தாள் மஞ்சரி.

''எனக்குத் தெரியும் மாமா. நான் சுற்றிப் பார்த்துக் கொள்கிறேன். நீங்க போய் உங்க வொர்க்கைப் பாருங்க.''

''வாட்... ஆர் யூ ஷ்யூர்?'' ஆச்சரியமாகக் கேட்டான் பிரசன்னா. ஏனென்றால் சஞ்சனா கடைக்கு வந்து விட்டால் பிரசன்னாவை ஒரு வேலையுமே பார்க்க விடாதபடி செய்துவிடுவாள். இத்தனைக்கும் அவள் இரு தினங்களுக்கு ஒரு முறையாவது கடைக்கு வருபவள்.

''மாமா இது என்ன... மாமா அது என்ன?'' என்ற அவளது கேள்விகளுக்குப் பதில் சொல்வதிலேயே பாதி நாள் ஓடிடும் பிரசன்னாவிற்கு. இப்பொழுது மஞ்சரி கூறியதைக் கேட்கும்பொழுது பிரசன்னாவிற்கு ஆச்சரிய மாகவே இருந்தது.

''ஏன் மாமா... நான் என்ன சின்னக் குழந்தையா? நானாக பார்த்துவிட்டு உங்க ரூமுக்கு வர்றேன்... நீங்க போங்க.''

"என்னோட ரூம் வந்து..."

"மாமா! போதும் மாமா. எம் டியோட ரூம் எதுன்னு கேட்டால் சர்வன்ட்ஸ் கொண்டு வந்து விட்டுவிட மாட்டாங்களா? நீங்க போங்க முதலில்..." பிரசன்னாவை எதிர்பார்க்காமல் கடைக்குள் சென்றுவிட்டாள் மஞ்சரி.

ஒரு தொழிலதிபரின் நேர்த்தியோடு மெதுவாக அனைத்தையும் எடைபோட்டுக் கொண்டே சென்று கொண்டிருந்த மஞ்சரியை மலைப்பாக பார்த்தான் பிரசன்னா.

"என்ன மாமா... என்னை விட்டு விட்டு நீங்க பாட்டுக்கு வந்துட்டீங்க?" மூச்சிரைக்க வந்த சஞ்சனா கொஞ்சிய குரலில் கேட்க பார்வை சிவந்தான் பிரசன்னா.

"ஏன் உனக்கு வர வழி தெரியாதா? நீ என்ன பாப்பாவா?" பல்லிடுக்கில் வார்த்தைகளை உதிர்த்துவிட்டுத் திரும்பி வேகமாக பிரசன்னா சென்று விட விக்கித்து நின்று விட்டாள் சஞ்சனா.



# 20

தன் அறைக்குள் நுழைந்த பிரசன்னாவிற்கு அவசரமாகப் பார்க்க வேண்டிய வேலைகள் அவனுக்காகக் காத்திருந்தது. முதல் நாளில் சஞ்சனா அடித்த கூத்தில்



ஒரு வேலையும் நடக்காமல் போய்விட அவை அனைத்தையும் உடனடியாக செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தான் பிரசன்னா. டீலர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய செக்குகளை சரிபார்த்து கையெழுத்து இட்டுக் கொண்டிருந்தவனின் அருகில் வந்த நின்றாள் சஞ்சனா.

"மாமா... என்னை இங்க தனியா விட்டுவிட்டு நீங்க பாட்டுக்கு வேலையைப் பார்த்துக்கிட்டிருக்கீங்க. போர் அடிக்குது மாமா..." சஞ்சனாவின் கொஞ்சல் மொழி அந்த சூழ்நிலைக்கே சம்பந்தம் இல்லாததைப் போல உணர்ந்தான் பிரசன்னா.

"சஞ்சனா... உன்னால் முடிந்தால் அமைதியாக உட்கார்ந்திரு. இல்லைன்னா உன்னோட காலேஜுக்குக் கிளம்பு..."

"அப்ப நீங்க என்னை காலேஜில் டிராப் பண்ண வர மாட்டீங்களா?" ஏமாற்றத்துடன் கேட்டாள் சஞ்சனா.

கப்பல் போன்ற காரில் பிரசன்னா அருகில் அமர்ந்திருக்க காலேஜின் முன்னால் சென்று மிதப்பாக இறங்குவதை சஞ்சனா மிகவும் விரும்புவாள்.

"இன்னிக்கு என்னால எங்கயுமே நகரக்கூட முடியாது. நீ ஏதாவது ஆட்டோ புடிச்சுப் போயிடு. அதே போல நான் இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரமாகவே வீட்டுக்குப் போயிடுவேன். அதனால நீ ஈவ்னிங் பஸ்ஸில் வந்துவிடு..."

"பஸ்ஸிலா?" என்னவோ பிறந்ததில் இருந்தே பிரசன்னாவுடன் காரிலேயே சென்று வந்தவளைப் போல சஞ்சனா முகம் சுளித்துக் கேட்டாள்.

சொகுசாக ஏஸி காரில் சென்று பழக்கப்பட்டிருந்த சஞ்சனாவிற்கு பஸ்ஸில் பயணம் செய்வதை எண்ணிப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

"ஏன் மாமா? ஏதாவது முக்கியமான வேலையிருக்கா? எதுக்காக சீக்கிரமாப் போறீங்க?" சஞ்சனாவிற்கு இப்படிப் பொறுப்பாகக் கேள்வி கேட்கத் தெரியுமா என்று வியந்துவிட்டான் பிரசன்னா.

"தாத்தாவுக்கு ரொம்ப முடியலையில்ல சஞ்சனா? உனக்கு தெரியாதா?" அடுத்த நொடி சஞ்சனா கொடுத்த ஷாக் ரியாக்சனில் பிரசன்னாவிற்கு இதயமே நின்றுவிட்டது.

"ஐயோ மாமா! என்ன மாமா சொல்றீங்க? தாத்தா ரொம்ப முடியாமல் இருக்காரா? இதை ஏன் நீங்க காலையிலேயே என்கிட்ட சொல்லலே? ஐயோ தாத்தா" கண்களில் கண்ணீர் பெருக சஞ்சனா கதறிய கதறலில், பிரசன்னா தன் சேரில் இருந்து அவசரமாக எழுந்து நின்றே விட்டான்.

"ஸ்ஸ்... சஞ்சனா! இது ஆபீஸ். இங்க நின்னுக்கிட்டு எதுக்காக இப்படிக் கூச்சல் போட்டுக்கிட்டு இருக்கிறே? நீ முதலில் கிளம்பு..."

"என்னது? கிளம்பவா? நீங்க என்ன மாமா சொல்றீங்க? தாத்தா முடியாமல் கிடக்கையில என்னால காலேஜுக்கு எப்படிப் போக முடியும்? என்னை என்ன அவ்வளவு கல் நெஞ்சக்காரின்னா நீங்க நினைச்சீங்க?"

"சரிம்மா... சரி. இப்ப நீ என்னதான் பண்ணலாம்னு நினைக்கிற? அதையாவது சீக்கிரம் சொல்லு. எனக்கு



ஆயிரம் வேலை இருக்கு சஞ்சனா..." பொறுமையிழந்த குரலில் பிரசன்னா கேட்க அவன் எதிரில் அழுத்தமாக அமர்ந்துவிட்டாள் சஞ்சனா.

"நீங்க உங்க வேலையைப் பாருங்க. நான் இப்படி உட்கார்ந்திருக்கேன். வேலை முடிஞ்சதும் நாம உடனே வீட்டுக்குக் கிளம்பிப் போகலாம்."

மஞ்சரியை பிரசன்னாவுடன் தனியாக இருக்க விட்டு விட்டு கிளம்பிப்போக சஞ்சனாவுக்கு மனமில்லை. ஏற்கனவே மஞ்சரியின் அழகும் புத்திசாலித்தனமும் சேர்ந்து சஞ்சனாவை மிக அதிகமாகவே பயமுறுத்தியிருந்தது.

எப்படியோ தன்னை வேலை பார்க்கவிட்டால் போதும் என்ற மனநிலையுடன் பிரசன்னா தன் வேலையைத் தொடர்ந்தான்.

சற்று நேரத்தில் பிரசன்னாவின் அறைக்குள் நுழைந்த மஞ்சரி அங்கே சஞ்சனாவை எதிர்பாராதவளாக புருவம் உயர்த்தினாள்.

"ஹேய்! நீ காலேஜ் போகலியா? இங்க உட்கார்ந்திருக்கிற?" கேட்ட மஞ்சரியை அலட்சியமாகப் பார்த்தாள் சஞ்சனா.

"வீட்டில தாத்தாவுக்கு உடம்புக்கு முடியாமல் இருக்கிறப்ப என்னால எப்படி நிம்மதியா காலேஜ் போக முடியும்?" என்னவோ நியாயவாதியைப் போல சஞ்சனா கேட்ட விதத்தில் மஞ்சரியின் கண்கள் சிந்தனையுடன் சுருங்கியது.

"அப்ப நீ வீட்டில் தாத்தா பக்கத்தில இருந்திருக்க வேண்டியதுதானே? அப்புறம் எதுக்காக கிளம்பி இங்க வந்திருக்க?" புரியாமல் கேட்டாள் மஞ்சரி.

"அது... வந்து... நான்... ஆங்... எனக்கு இப்பத்தான மாமா சொன்னாங்க. இல்லேன்னா நான் வந்திருக்கவே மாட்டேன்."

"ஓஹோ?!" மறுபடியும் ஒற்றை வார்த்தையில் நம்பாமல் கேட்ட மஞ்சரியைக் கொன்றுவிடும் அளவிற்குக் கோபம் தோன்றியது சஞ்சனாவின் உள்ளத்தில்.

அதற்கு மேல் சஞ்சனாவிடம் பேச எதுவுமேயில்லாததைப் போல பிரசன்னாவின் அருகில் சென்று அமர்ந்து அவன் முன்னால் இருந்த ஃபைல்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கத் தொடங்கினாள் மஞ்சரி. பிரசன்னா தன் வேலைகளை முடிப்பதற்குள் அத்தனை ஃபைல்களையும் மஞ்சரி முடித்த வேகத்தைக் கண்ட சஞ்சனா உண்மையில் உள்ளே மிரண்டேதான் போய்விட்டாள்.

"மாமா... நீங்க டீலரிடம் நீங்க எதுக்காக இப்படி காண்ட்ராக்ட் போட்டிருக்கீங்க?" ஒரு ஃபைலை பிரசன்னாவின் முன் வைத்து மஞ்சரி கேட்ட விதத்தில் அவள் அத்தனை ஃபைல்களையும் உண்மையிலேயே கவனமாக படித்திருப்பதை உணர்ந்து கொண்டாள் சஞ்சனா. மஞ்சரியின் மீதிருந்த பொறாமை உணர்வு மேலும் கொழுந்துவிடத் தொடங்கியது அவளுக்கு.

மஞ்சரி கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தபடியே அவளுக்குப் பின்னால் இருந்த மற்றொரு ஃபைலைக் கை நீட்டி பிரசன்னா எடுக்க, மஞ்சரியை அணைத்தாற்போல



அவன் இருந்த தோற்றம் சஞ்சனாவின் பொறாமைத் தீயை மேலும் அதிகரித்தது.

பிரசன்னாவும் மஞ்சரியும் தீவிரமாக எதையோ கம்ப்யூட்டரில் ஆராய்ந்து கொண்டிருக்க தன் முன் இருந்த மஞ்சரியின் செல்போனைக் கையில் எடுத்து ஆராயத் தொடங்கினாள் சஞ்சனா. மஞ்சரிக்கு வந்த போன் கால்களைப் பார்த்துக் கொண்டே வந்தவளின் முகத்தில் பிரகாசம் தோன்ற அவள் நிமிர்ந்து மஞ்சரியைக் குரோதத்துடன் பார்த்தாள்.

"சாம்ன்னு பேர் வருதே அவர் யார் மஞ்சரி?" கம்ப்யூட்டரில் கவனமாக இருந்த மஞ்சரி முதலில் சஞ்சனாவின் கேள்வியை எதார்த்தமாகவே எடுத்துக் கொண்டு பதிலளித்தாள்.

"சாமா... அவர் பெயர் சாம்ஸன்" இயல்பாக கூறினாள் அவள்.

"அவரிடம் இருந்துதான் உனக்கு அதிகமான போன் கால்ஸ் வந்திருக்கே?" அவர் உனக்கு அவ்வளவு க்ளோஸா?"

"யார்... யாரைக் கேட்கிற?" முதலில் மஞ்சரிக்கு சஞ்சனாவின் கேள்வி புரியவில்லை. அவள் தீவிரமாக கம்ப்யூட்டர் கணக்குகளை ஆராய்ந்து கொண்டிருந்ததில் சஞ்சனாவின் கையில் தன்னுடைய செல்போன் இருப்பதே மஞ்சரியின் கவனத்தில் பதியவில்லை.

"என்ன மஞ்சரி ஒண்ணும் புரியாததைப் போல நடிக்கிற? மாமா முன்னால கேட்டுவிட்டேனேன்னு கோபமா?"

"கோபமா... எனக்கா... எதுக்கு?" புரியாமல் கேட்டாள் மஞ்சரி.

"அதுதான்... உன் பாய்பிரண்ட் சாம்ஸனைப் பத்தி நான் மாமா முன்னால கேட்டுவிட்டேனே? அதற்காக கோபமான்னு கேட்டேன்..."

படக்கென கம்ப்யூட்டரில் இருந்து திரும்பிய வேகத்தில் சஞ்சனாவின் கையில் இருந்த தன் போனைப் பிடுங்கிக்கொண்டே மஞ்சரி கோபத்தில் முகம் சிவக்க சஞ்சனாவை முறைத்துப் பார்த்தாள். யாரையும் எந்த சூழ்நிலையிலும் அவமானப் படுத்துவதை விரும்பாத மஞ்சரிக்கே சஞ்சனாவின் செயல் ஆத்திரமூட்டியது.

"படிச்ச பொண்ணுதான நீ? உனக்கு கொஞ்சமாவது மேனர்ஸ் இல்லையா? அடுத்தவங்க போனை அவங்க அனுமதி இல்லாமல் எடுக்கக் கூடாதுன்றது உனக்குத் தெரியாதா? இதில் உன் இஷ்டத்திற்குக் கேள்வி வேற கேக்கற?" கோபத்தில் படபடவென பொரிந்து தள்ளிய மஞ்சரியை பாவமாகப் பார்த்து விழித்தாள் சஞ்சனா.

"ஸாரி சஞ்சனா. இது உங்க பர்சனல்னு தெரியாம நான் கேட்டுட்டேன்... சாரி.."

"மண்ணாங்கட்டி...நான்சென்ஸ்" ஒன்றும் தெரியாதவளைப் போல நடந்த சஞ்சனாவைப் புரிந்து கொண்ட மஞ்சரி கோபத்தில் வெடித்துவிட்டு எழுந்து வேகமாக அறையை விட்டு வெளியேறி விட்டாள்.

இருவருக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளை முதலில் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத பிரசன்னாவிற்கு மஞ்சரியின் கோபம்தான் சஞ்சனாவின்



வார்த்தைகளை பிரசன்னாவின் மூளையில் ஆழமாகப் பதிய வைத்தது. அவன் மஞ்சரி வெளியேறிய திசையைப் பார்த்தபடி புருவங்கள் முடிச்சிட அமர்ந்துவிட சஞ்சனாவின் இதழ்களில் வெற்றிப் புன்னகை தோன்றியது.

ஒரு சில நிமிடங்கள் யோசனையாக பிரசன்னா அமர்ந்துவிட அவனது செல்போனின் மணியோசை கேட்டு அதை எடுத்து பிரசன்னாவிடம் கொடுத்தாள் சஞ்சனா.

"யாரு?"

"மஞ்சரிதான்" ஒற்றை வார்த்தையில் கூறிய சஞ்சனாவின் கையில் இருந்த செல்லை வாங்கிக் காதில் வைத்தவன் மறுமுனையில் மஞ்சரி கூறியதைக் கேட்டுவிட்டு எழுந்தான்.

"மஞ்சரி வெளியில் நிக்கிறாளாம். வீட்டுக்குப் போகலாம் வா..." புரியாமல் பார்த்த சஞ்சனாவிடம் கூறிவிட்டு அவன் வெளியேற புன்னகை மாறாத முகத்துடன் அவனுடன் இணைந்து நடந்தாள் சஞ்சனா.

# 21

ஏஸியின் குளிர்ச்சியிலும் கோபத்தினால் முத்து முத்தாக வியர்வை அரும்பிய முகத்துடன் அமர்ந்திருந்த

மஞ்சரியைத் திரும்பிப் பார்த்த சஞ்சனா மனதிற்குள் தோன்றிய சிரிப்பை மனதிற்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

மஞ்சரியின் கையில் இருந்த செல்போன் ஒளிர கண்கள் மின்ன பிரசன்னாவைப் பார்த்தாள் சஞ்சனா. அவனும் பின்னால் அமர்ந்திருந்த மஞ்சரியைப் பார்க்கும் விதமாக தன் முன் இருந்த கண்ணாடியை சரிசெய்வதைப் பார்த்து திருப்தியுடன் மனதினை மஞ்சரியிடம் திருப்பிக் கொண்டாள் சஞ்சனா.

கையில் இருந்த செல்போனில் வந்த எண்களைப் பார்த்துவிட்டு ஒருமுறை சஞ்சனாவின் மீது பார்வையைச் செலுத்திய மஞ்சரி செல்லை ஆன் பண்ணிக் காதில் வைத்தாள்.

"யா சாம்... சொல்லுங்க..." மஞ்சரியின் குரலைக் கேட்டவுடன் பிரசன்னாவின் உடல் விறைப்பதை அவனருகில் அமர்ந்திருந்த சஞ்சனாவினால் உணர முடிந்தது.

"ம்ம்... சரி..."

"ஓகே... ஓகே..."

"ஐ அல்ஸோ திங்க்கிங் அபெளட் யூ."

"சரி யார்... சொல்லு..."

"நான்தான் உனக்கு எல்லா ரைட்சும் கொடுத்திருக்கிறேனே. அப்புறம் என்ன..."

"டோண்ட் போரிங் யார்..."

"நோ நோ... டோண்ட் டூ இட்..."



"ஓகே... ஓகே... சரி... ஓகே... பை..." மஞ்சரி பேசி முடிக்கும் வரை அமைதியாக இருந்த பிரசன்னா மஞ்சரியை ஆராய்ச்சியாக பார்ப்பதை மஞ்சரியும் உணர்ந்திருந்தாள்.

"யார் மஞ்சரி?" உரிமையுடன் அழுத்தமாகக் கேட்ட பிரசன்னாவிற்கு பதில் கூறாமல் அமைதியாக இருந்த மஞ்சரி மெதுவாக நிமிர்ந்து பிரசன்னாவைப் பார்த்தாள்.

"வீட்டிற்குப் போன பிறகு சொல்றேன் மாமா.." சஞ்சனாவின் முன்பாக அவள் பேசவிரும்பாததை அவளது குரல் பிரசன்னாவிற்கு உணர்த்தியது.

ஆனால் வீட்டின் காம்பவுண்டிற்குள் நுழைந்தவுடனேயே அங்கிருந்த அசாதாரணமான சூழ்நிலை இருவரையும் திகைக்க வைத்தது.

ஊர்ப் பெரியவர்கள், நெருங்கிய சொந்தங்கள் என அனைவரும் வீட்டின் முன்பாக இருந்த நாற்காலிகளில் அமர்ந்திருக்க, அவர்களுக்கு நடு நாயகமாக யோகநாதனும் சுந்தரும் அமர்ந்திருந்தார்கள்.

கோயம்பத்தூரில் இருந்து சிவா வந்திருக்க அவனை சுற்றி அவனது நண்பர்கள் கூட்டம் நின்றிருந்தது.

"மாமா... தாத்தா..." பதறியபடி காரில் இருந்து இறங்கி வீட்டிற்குள் ஓடிய மஞ்சரியின் பின்னாலேயே தானும் வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான் பிரசன்னா.

ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து உறவுக்காரர்களுடன் பேசிக் கொண்டிருந்த பட்டம்மாளைப் பார்த்தபிறகுதான் இருவருக்கும் நிம்மதியாக மூச்சு வந்தது.

ஏகாம்பரத்தின் உடல்நிலை மோசமாக இருந்தால் பட்டம்மாள் அப்படி உறவினர்களிடம் பேசிக் கொண்டிருக்க மாட்டாள் என்ற உண்மையை இருவரும் நன்றாக அறிந்திருந்ததனால் ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டபடி ஹாலுக்குள் மெல்ல நுழைந்தார்கள்.

''இதோ பிரசன்னாவும் மஞ்சரியும் வந்துட்டாங்களே! என்ன பிரசன்னா... பர்ச்சேஸ் பண்ண போயிருந்தீங்களா?'' பிரசன்னாவிற்கு அத்தை முறை கொண்ட பெண்ணொருத்தி கேட்க பிரசன்னா பதில் சொல்லத் தெரியாமல் முழித்தான்.

பேரனின் நிலையை உணர்ந்த பட்டம்மாள் அவன் கைப் பற்றி அழைக்க எதுவும் புரியாத மனநிலையுடன் ஏகாம்பரத்தின் அறைக்குள் சென்றான் பிரசன்னா.

''தாத்தா...'' மெல்லிய குரலில் பிரசன்னா அழைப்பதைக் கேட்டவுடன் கண்களைத் திறந்த ஏகாம்பரம் பேரனின் கைப் பற்றித் தன்னருகில் அமர வைத்துக் கொண்டார்.

''வந்துட்டியா...'' அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தவரைப் போல ஏகாம்பரம் கேட்பதை உணர்ந்து உள்ளூர வியந்தான் பிரசன்னா.

''ஏன் தாத்தா? என்கிட்ட ஏதாவது சொல்லணுமா? சொல்லுங்க தாத்தா...'' ஏகாம்பரத்தின் முகத்தின் அருகில் குனிந்து கேட்ட பிரசன்னாவின் கன்னத்தை ஏகாம்பரத்தின் முதிய மெல்லிய கை தடவிக் கொடுத்தது.



''ஆமாம் ராஜா. அதுக்காகத்தான் நான் காத்திருந்தேன்...'' மெல்லிய குரலில் மூச்சுவாங்கக் கூறிக் கொண்டிருந்த ஏகாம்பரத்தைப் பார்த்துக் கொண்டே அறைக் கதவைத் திறந்து மஞ்சரி உள்ளே வர வேகமாகச் சென்று அறைக் கதவைப் பூட்டித் தாளிட்டாள் பட்டம்மாள்.

புரியாமல் பார்த்த பேத்தியையும் கணவரின் அருகில் அழைத்துச் சென்று நிறுத்திய பட்டம்மாள் பிரசன்னாவின் தோளில் கை வைத்து ஆதரவாக தடவிக் கொடுத்தாள். ஏகாம்பரத்தையும் பட்டம்மாளையும் குழப்பத்துடன் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான் பிரசன்னா.

''ராஜா...'' மெல்லிய குரலில் அழைத்தார் முதியவர்.

''சொல்லுங்க தாத்தா...'' பழையபடி முதியவரின் முகத்தருகில் குனிந்து கேட்டான் பிரசன்னா.

''நான் ஒண்ணு சொல்வேன். நீ எனக்காக அதைச் செய்வியா...'' வாக்குக் கேட்பவரைப் போல தன் முன் கை நீட்டிய ஏகாம்பரத்தின் கை மீது தன் கை வைத்துப் பற்றிக் கொண்டான் பிரசன்னா.

''கண்டிப்பாச் செய்றேன் தாத்தா. சொல்லுங்க'' உறுதியுடன் வெளிப்பட்டது அவனது குரல்.

''என் பேத்தியை கல்யாணம் பண்ணிக்க...''

''தாத்தா!?'' ஏகாம்பரம் கூறியதை நம்ப முடியாதவனாக திரும்பி மஞ்சரியைப் பார்த்தான் பிரசன்னா.

''என் பேத்தி மஞ்சரிக்கும் உனக்கும் நாளைக்குக் கல்யாணம். நீ எங்களை ஏமாத்தாம கல்யாணத்துக்கு

சம்மதம் சொல்லணும் ராஜா. செய்வியா?'' கண்... உயிரைத் தேக்கிக் கொண்டு நம்பிக்கையுடன் தன்... பார்த்த முதியவரின் வார்த்தையைத் தட்ட மு... யாதவனாக செயலிழந்து அமர்ந்து விட்டான் பிரசன்னா.

அவனது பார்வை நம்பிக்கையுடன் மஞ்சரியின் விழிகளைப் பார்த்தது. சஞ்சனாவும் தானும் விரும்புவது மஞ்சரிக்குத் தெரியும். அவள் மட்டும் சம்மதம் சொல்லாமல் மறுத்து விட்டால் இந்தக் கல்யாணத்தில் இருந்து தான் தப்பி விடலாம் என்ற நம்பிக்கை தோன்றியது பிரசன்னாவிற்கு.

அவன் தப்பிக்கும் வழி தெரிந்த மகிழ்வுடன் தன் முகம் நோக்கி அவளது சம்மதத்திற்காகக் காத்திருந்த ஏகாம்பரத்தைப் பார்த்து புன்னகைத்தான்.

''கல்யாணத்துக்கு நான் மட்டும் சம்மதித்தால் போதுமா தாத்தா? அதுக்கு உங்க பேத்தியோட சம்மதம் வேண்டாமா?'' புத்திசாலித்தனமாக பிரச்சினையை மஞ்சரியை நோக்கித் திருப்பிவிட்டு நிம்மதியுடன் தலை நிமிர்ந்தான் பிரசன்னா.

''அம்மாடி... மஞ்சரி, இங்க வாடா...'' கை நீட்டி அழைத்த முதியவரின் அழைப்பை மறுக்க முடியாமல் அவருகில் சென்று நின்ற மஞ்சரியின் கண்கள் கலங்கியது.

''தாத்தாவோட கடைசி ஆசையை நீ நிறைவேற்ற மாட்டாயா செல்லம்...?'' ஏக்கத்துடன் கேட்ட ஏகாம்பரத்தின் கையை கண்ணீருடன் பிடித்துக் கொண்டாள் மஞ்சரி.



''கட்டாயம் நிறைவேற்றுவேன் தாத்தா. நீங்களும் இன்னும் ரொம்ப வருசத்துக்கு நல்லா இருக்கணும்'' அழுகையில் உடைந்தது மஞ்சரியின் குரல்.

''தாத்தாவுக்கும் வயசாகிடுச்சில்ல செல்லம்? இனி வரும் சந்ததிக்கு வழிவிடணும் இல்ல? இப்ப நான் கேக்குற கேள்விக்குப் பதிலைச் சொல்லு. மாப்ளையை கல்யாணம் பண்ணிக்க உனக்கு சம்மதமா தாயி...'' பேச முடியாதவராக மூச்சிரைக்க பாதியில் பேச்சை நிறுத்தி விட்டுக் கண்களால் பேத்தியிடம் ஏகாம்பரம் கெஞ்சியதைப் பொறுக்க முடியாதவளாக அவர் அருகில் அமர்ந்து மார்பில் முகம் புதைத்துக் கண்ணீர் விட்டாள் மஞ்சரி.

''சம்மதம் தாத்தா...'' அழுகையின் ஊடாக வந்த மஞ்சரியின் பதிலை நம்ப முடியாத அதிர்ச்சியில் உறைந்து அப்படியே சிலையாக அமர்ந்துவிட்டான் பிரசன்னா.

அழுகையில் குலுங்கிய பேத்தியின் முதுகை ஒன்றும் பேச வழியில்லாமல் தன் மெல்லிய கரத்தினால் தட்டிக் கொடுத்த ஏகாம்பரத்தின் கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தது.

பொங்கி வரும் விம்மலைத் தன் சேலையின் முந்தானையால் வாயடைத்து அடக்கிக் கொண்ட பட்டம்மாளின் கண்களில் சந்தோஷமும் சோகமும் மாறி மாறி போட்டி போட்டுக் கொண்டு தோன்றியது.

# 22

பூட்டிய அறைக்குள் வெறி பிடித்தவர் போல் யோகநாதனின் முன் நடந்து கொண்டிருந்தார் கணபதி. அவர் கட்டிய கனவு மாளிகையை ஒரு முதியவர் மிகவும் சுலபமாக உடைத்துத் தள்ளுவதை ஒத்துக் கொள்ள முடியாத மனநிலையுடன் வெறித்துக் கொண்டிருந்தார் அவர்.

"இப்ப நீ என்னதான் சொல்ற கணபதி? என் மகனுக்குத் தாய்மாமன்னு நான் உன்கிட்ட இல்லையா தாரம் எடுத்துச் சொல்லிக்கிட்டிருக்கேன். எதையும் கேட்காமல் வீம்பு பிடிச்சேன்னா... அப்புறம் உன் விருப்பம்" பொறுமையிழந்த குரலில் கூறினார் யோகநாதன்.

"அதெப்படி மாப்பிள்ளை இம்புட்டு ஈஸியா பேசிக்கிட்டிருக்கீங்க? அப்ப என் பொண்ணுக்கு என்ன வழி? அவ கதி என்ன?" கணபதியின் கேள்வியைக் கேட்ட யோகநாதனின் கண்கள் கோபத்தில் சிவந்தது.

"நீ இப்படி முட்டாள் தனமா எதையாவது உளறிக்கிட்டு இருப்பேன்னுதான் உன்னைத் தனியாக் கூட்டிட்டு வந்தேன் கணபதி. நான் நினைச்சது சரியாப் போச்சு."



"அம்மா நிறுத்துங்க மாப்பிள்ளை. நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க? என் பொண்ணுக்கு என்ன வழி... இனி அவளை யாரு கட்டிக்குவாங்க?"

"அதை உன் பொண்ணை என் மகன் கூட பழக விடுவதற்கு முன்னால யோசனை பண்ணி இருக்கணும். நான் எத்தனை தடவை நேரடியாகவும் மறைமுகமாகவும் உன்கிட்ட எடுத்துச் சொன்னேன்? அப்பல்லாம் என் பேச்சைக் கேட்காம இருந்துட்டு இப்ப என்கிட்ட வந்து கதி என்ன... கத்தரிக்காய் என்னன்னு டயலாக் பேசிக்கிட்டு இருக்க?"

"நான் பேசறது உங்களுக்கு கேலியா இருக்கா மாப்பிள்ளை? என் பொண்ணுக்கு ஒரு வழியைச் சொல்லுங்க முதலில்..."

"முட்டாளாடா நீ? பெத்த பொண்ணுக்கு நல்ல வழியைக் காட்ட வக்கில்லாத நீ எல்லாம் எதுக்குடா பொண்ணைப் பெத்த? யார் கிட்ட வந்து வழி காட்டச் சொல்லிக் கேட்கிற? தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு..."

"என்ன மாப்பிள்ளை... இப்படி மிரட்டினா நான் எங்க போவேன்?" யோகநாதனின் கோபத்தைக் கண்டவுடன் பயத்தில் குழறியது கணபதியின் நாக்கு.

"தெரியுதில்ல... போக்கிடம் இல்லைன்றது தெரியுதில்ல? அப்புறம் எதுக்காக இம்புட்டு வாய்ச்சவடால்? நான் உன்னோட வம்சத்துக்கே வழியைக் காட்டியிருக்கேன்டா. நீ செஞ்ச தில்லு முல்லு எல்லாத்தையும் கண்டும் காணாம நான் இருந்ததினாலதான் நீ இன்னிக்கு

இம்புட்டுப் பவுசா வாழ்ந்துக்கிட்டு இருக்க, இல்லேன்னா இன்னும் குடிசையில் உட்கார்ந்து கூழ்தான் குடிச்சு கிட்டு இருந்திருப்பே...''

''மாப்பிள்ள...''

''எனக்கு எல்லாம் தெரியும் கணபதி. ஏதோ நம்ம பொண்டாட்டி கூடப் பிறந்தவன். அவனும் நல்லா இருந் துட்டுப் போகட்டும்னுதான் அமைதியா இருந்தேன். அதுக்காக நீ என் தலை மேல உட்கார்ந்து ஆட்டம் போட லாம்னு நினைச்சேன்னா அது ஒரு நாளும் நடக்காது கணபதி. உனக்கு என் கோபத்தையும் பத்தி நல்லா தெரியும். யோசனை பண்ணிச் சொல்லு...''

''சரி மாப்பிள்ளை. நாளைக்கு நான் இந்தக் கல் யாணத்துக்கு வர்றேன்...''

அமைதியாக கணபதியின் முகத்தை முறைத்துவிட்டு அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்று விட்டார் யோகநாதன். அவமானத்தால் சிவந்திருந்த முகத்தை அடுத்தவர் அறியாமல் மறைத்தபடி தன்வீடு நோக்கி விரைந்தார் கணபதி.

''என்னப்பா... அந்தக் கிழவன் போய்ச் சேர்ந்துட் டானா? வாசலில் அவ்வளவு கூட்டமா இருந்துச்சு...'' கையில் இருந்த புத்தகத்தைப் படிக்காமல் தந்தையிடம் வம்பு பேச வந்த மகளை வெறியுடன் பார்த்தார் கணபதி.

''வாயை மூடு முதல்ல. ஒரு கைத்தண்டிப் பயல மயக்கிக் கைக்குள்ள போடத் தெரியல... வம்பு பேசமட்டும் வாயைப் பொளந்துக்கிட்டு வந்துடுவ...'' கணவரின் கத்தலைக் கேட்டு ஓடிவந்த பூஞ்சோலை சிலையாக நின்று விட்டாள்.



''அடப்பாவி மனுசா. பெத்த பொண்ணைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது? உன் நாக்கில நரம்புக்குப் பதில் விஷத்தையா வெச்சுப் படைச்சிருக்கான் அந்த ஆண்டவன்?'' கோபத்தில் வெடித்த மனைவியின் குரலைக் கேட்டவுடன்தான் தன் வார்த்தைகளின் பொருள் கணபதிக்கே புரிந்தது.

அவர் மகளது முகத்தைப் பார்க்கக்கூட தயங்கியவராக தலை குனிந்து கொள்ள, தயக்கமில்லாமல் அவரருகில் வந்து கணபதியின் முகத்தைப் பார்த்தாள் சஞ்சனா.

''என்னப்பா ஆச்சு... சொல்லுங்கப்பா...'' கணபதி யிடம் தூண்டித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்த சஞ்ச னாவின் முதுகில் ஒரு போடு போட்டாள் பூஞ்சோலை.

''போடி வெட்கம் கெட்டவளே. நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே... கேட்டியா நீ? இப்ப உன் தலையில மண்ணை அள்ளி போட்டுவிட்டாரே அந்த மனுசன். இனியாவது நீ உன் புத்தியை மாத்திக்கிற வழியைப் பாரு சஞ்சனா...''

''அம்மா, உன் புலம்பலைக் கொஞ்சம் நிறுத்து. அப்பா நீங்க சொல்லுங்க'' அன்னையின் புலம்பலை அலட் சியம் செய்துவிட்டு கணபதியிடம் கேட்டாள் சஞ்சனா.

''என்னத்தம்மா சொல்லச் சொல்ற? அந்தப் பிரசன்னா பய காலை வாரிட்டாம்மா. அவனுக்கும் அந்த சுந்தரத் தோட மக மஞ்சரிக்கும் நாளைக்கு கோவில்ல வெச்சுக் கல்யாணம் நடக்கப் போகுது. வெளியில தெரியாம பேசி முடிவு பண்ணிவிட்டு கடைசி நேரத்தில என்னைக் கூப்பிட்டுச் சொல்கிறான் அந்த யோகநாதன். தந்தை

யின் பேச்சை நம்பமுடியாதவளாக தலையசைத்து மறுத்தாள் சஞ்சனா.

''நீங்க சொல்வதை என்னால நம்பவே முடியலப்பா. அந்த மஞ்சரி வேற யாரையோ லவ் பண்ணிட்டிருக்கா...'' மகளது வாயைப் பொத்தி அடக்கிய பூஞ்சோலையின் கண்ணில் பயம் தோன்றியது.

''வாயை மூடுடி முதல்ல. அந்த மஞ்சரி இப்ப யோகநாதனோட மருமகளாகப் போறவ. சுந்தரத்தோட மக. அவளைப் பத்திப் பேசுறது இதுவே உனக்குக் கடைசி முறையா இருக்கட்டும். இப்ப நிம்மதியாக் குடிச்சிக்கிட்டு இருக்கிற கஞ்சிக்குக் கூட உன் பேச்சால வழியில்லாமப் பண்ணிடாதேடி...''

''அவ யாரா வேணும்னாலும் இருக்கட்டும்மா. ஆனா அந்தப் பிரசன்னா என் பார்வைக்கு ஆடுற பொம்மை. இவனுக எல்லாரும் முடிவு பண்ணிட்டா போதுமா? இந்தக் கல்யாணம் எப்படி நடக்கும்னு நானும் பார்க்கிறேன்.''

''என்னம்மா சொல்ற? உன்னால இதை நிறுத்த முடியுமா? ஆனால் அதுக்கப்புறம் அந்த யோகநாதனோட கோபத்துக்கு நாம ஆளாகணுமேம்மா...'' நப்பாசையும் பயமுமாக கேட்டார் கணபதி.

''என்னப்பா புரியாமல் பேசறீங்க. பிரசன்னா நம்ம பக்கம் வந்துட்டா அப்புறம் நீங்க அந்த யோகநாதனுக்கு எதுக்காகப் பயப்படணும்?''

''ஆமாமில்ல... ஆனால் உன்னால முடியுமா...''

''இந்த சஞ்சனா நினைச்சா எல்லாமே முடியும்ப்பா. நான் இப்பவே போன் பண்ணி அவனை இங்க வர



வைக்கிறேன் பாருங்க'' அலட்சியமாக போனை எடுத்துப் பிரசன்னாவின் நம்பரை அழுத்தினாள் சஞ்சனா.

மறுமுனையில் மணியடித்துக் கொண்டேயிருக்க போனை யாரும் எடுக்காததை உணர்ந்த சஞ்சனாவின் முகத்தில் முதல் முறையாக தோல்வியின் வலி தெரிந்தது.

''போனில் கூப்பிடாட்டி என்னப்பா. நானே நேரில் போறேன். என் முகத்தைப் பார்த்துச் சொல்லட்டும் அவன்...'' வேகமாகக் கிளம்பிய சஞ்சனாவை பயத்துடன் தடுத்தார் கணபதி.

''வேண்டாம்மா. நீ இப்ப அங்க போக வேண்டாம். அவன் உன்னைப் பார்த்து உன் பின்னால் வருவான்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. அப்படி வராத பட்சத்தில் உன்னைப் பத்தி மத்தவங்க தப்பாகப் பேசுற நிலைமை நமக்கு வந்துவிடும். அதனால நீ நாளை வரை பொறுமையா இரு. கல்யாணத்துக்கு நாளைக்கு நாம எல்லாரும்தான போகப் போறோம். அவனுக்கு உன் மேல உண்மையான அன்பிருந்தா கல்யாண மேடையை விட்டு எந்திரிச்சு வந்து உன் கழுத்தில் தாலி கட்டுவான். அப்படி இல்லேன்னா நீ அவனை மறக்கிறதுதான் நம்ம குடும்பத்துக்கு நல்லது...''

கடைசி நேரத்திலாவது தன் கணவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்த இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்ட பூஞ்சோலை சஞ்சனாவை அணைத்துக் கொண்டாள்.

# 23

கண்ணூரின் பெருமாள் கோவில் திருவிழா கோலம் பூண்டிருந்தது. சந்நிதானத்தின் முன்புறம் இருந்த பெரிய தூண்கள் அனைத்தும் பூ அலங்காரத்தால் மேலும் அழகுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. நான்கு தூண்களுக்கும் இடையில் இருந்த இடைவெளியை பூச்சரங்களால் நிரப்பி மணமேடையைப் போல அலங்கரித்திருந்தனர்.

பெருமாளின் முன்னிலையில் மணமக்கள் இருவரும் கரம் கூப்பி நின்றிருக்க சுவாமியின் பாதத்தில் வைத்து இருந்த மாங்கல்யம் கோர்த்த மஞ்சள் கயிற்றினை ஐயர் மந்திரங்கள் சொல்லி முடித்துவிட்டு, அதை பிரசன்னாவின் கையில் கொண்டு வந்து கொடுத்தார். ஐயர் கொடுத்த தாலிக் கயிற்றை கையில் வாங்கிக் கொண்ட பிரசன்னா அதை மஞ்சரியின் கழுத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லாத முகத்துடன் கட்டினான். கெட்டி மேளம் முழங்க நெருங்கிய உறவினர்கள் அனைவரும் கையில் இருந்த மஞ்சள் அரிசியை மணமக்கள் தலையில் தூவ, பெற்றோர்கள் கண்களுக்கு மனம் நெகிழ்ந்து ஆசீர்வதிக்கக் கூட மறந்தவர்களாக நின்றிருக்க பெருமாளின் முன்னிலையில் பிரசன்னா மஞ்சரி



தம்பதியினரின் திருமணம் இனிதாக நிறைவேறியது. மாங்கல்யம் கட்டி முடித்த பிரசன்னாவின் முன் ஐயர் குங்குமத் தட்டை நீட்ட அதைத் தொட்டு மஞ்சரியின் நெற்றியில் வைத்து விட்டான் பிரசன்னா.

முதல் நாள் மாலை ஏகாம்பரத்திடம் மஞ்சரி சம்மதம் என்ற வார்த்தையைக் கூறிய நொடியில் இருந்து மஞ்சரியின் முகத்தைக் கூட பிரசன்னா பார்க்கவில்லை. அறையை விட்டு அமைதியான முகத்துடன் கொந்தளிக்கும் மனத்துடன் வெளியேறிய பிரசன்னா நேராகத் தன் அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டவன்தான். இரவு உணவைக்கூட மறுத்துவிட்டு தன் அறைக்குள் தானே சிறைப்பட்டவனாக இருந்துவிட்டான் பிரசன்னா.

கல்யாண வேலைகளின் முனைப்பில் இருந்த சுந்தரம் தம்பதியினரும், சிவாவும் இதனைப் பெரிதாக எடுத்துக் கொண்டு கவனிக்கும் மனநிலையில் இல்லாமல் இருந்ததே பெரிய நிம்மதியாக இருந்தது மஞ்சரிக்கு. தன் ஒரே மகளான மஞ்சரியை மணக்கப் போகும் மணமகனின் முகத்தில் ஒரு சிறு வெறுப்பின் அறிகுறி தெரிந்தால்கூட அந்தத் திருமணத்தை நடத்தச் சம்மதிக்க மாட்டார் சுந்தரம். அவருக்கு உயிரே அவரது மகள் மஞ்சரிதான் என்பதை மஞ்சரி நன்றாக அறிவாள்.

மஞ்சரியின் வாழ்க்கைக்கு இடையூறாக யார் வந்தாலும் அவர்களது உறவையே துண்டித்துக் கொள்ளத் தயங்காதவர் சுந்தரம். அதனால் பிரசன்னா தன் தந்தையின் எதிரில் ஏதாவது ஏடாகூடமாகப் பேசிவிடக் கூடாதே என்று கடவுளை வேண்டிக் கொண்டிருந்தாள்

மஞ்சரி. இந்தத் திருமணம் தன் ஆசை தாத்தாவின் கடைசி ஆசை என்பதினால் தன் வாழ்வைக் கூட பெரிதாக எண்ணாமல் சம்மதித்திருந்தாள் அவள். அப்படியிருக்க ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்து இத் திருமணம் நடக்காமல் நின்று விட்டால் ஒரு முதிய வருக்கு தான் செய்து கொடுத்திருந்த சத்தியத்தை காப்பாற்ற முடியாமல் போய்விடுமே என்று மஞ்சரியின் உள்ளம் பரிதவித்துக் கொண்டிருந்தது.

தற்செயலாக மாமனாரின் விருப்பத்திற்காக உடனடி யாக முடிவான திருமணமாக இருந்தாலும் தன் செல்வ மகளின் திருமணத்தை ஒரு குறையும் இல்லாமல் நடத்தி முடிக்கத் துடித்துக் கொண்டிருந்தார் சுந்தரம். அதனால் திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் தானே முன்நின்று கண்காணித்துக் கொண்டு இருந்தார் அவர்.

தன் ஒரே மகள் இத்தனை விரைவில் தன்னை விட்டுப் பிரியப் போவதை ஏற்கமுடியாத மனநிலையுடன் போராடிக் கொண்டிருந்தாள் மோகனா. ஒருபுறம் தந்தை யின் விருப்பத்திற்குக் கணவன் கொடுத்த மரியாதை யால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் மறுபுறம் தன் ஒரே மகளை அத்தனை விரைவில் பிரியப்போகும் வேதனையும் மோகனாவின் உள்ளத்தை வாட்டியது. அவள் தன் அறையில் மஞ்சரியைத் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டு அவளது தலையை தடவியவாறே அமர்ந்து விட தங்கையின் மனநிலை புரிந்து அவளது அறைக்குள் யாரையும் நுழைய வேண்டாம் என்று தடுத்துவிட்டார் யோகநாதன். மஞ்சரிக்கும் அந்தத் தனிமை தேவையாக இருந்ததினால் அவள் தன் தாயின் மடியிலேயே தஞ்சம் புகுந்து கொண்டாள்.



நினைவு தெரிந்த நாளில் இருந்தே தன்னுடைய அக்காதான் உலகம் என்று வாழ்ந்தவன் சிவா. உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அக்காவுடன் தொடர்ந்து போனில் பேசிக்கொண்டே இருப்பான் அவன். ஒரு வருடம் பாரினில் படிப்பதற்காக மஞ்சரி சென்றுவிட ஒவ்வொரு வார விடுமுறை நாளிலும் அவளைச் சென்று பார்த்து வந்தவன் சிவா.

“என்னடா சிவா? உன் அழிச்சாட்டியத்துக்கு அளவே இல்லையா? என்னவோ கோயம்பத்தூரில் இருந்து குன் னூருக்கு வருவதைப் போல சனி, ஞாயிறு தவறாமல் அமெரிக்க வந்துடுகிறாயே?” என்று மஞ்சரி கூடக் கேலியாகக் கேட்பாள்.

அக்கா மஞ்சரிதான் சிவாவிற்கு எல்லாமே. அவள் சொல்வதுதான் வேதவாக்கு அவனுக்கு. தன் குரு, தோழி, என எல்லாமுமாக மஞ்சரியை நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் உடன்பிறப்பு அவன். தன் அக்காவின் திருமணம் முடிவாகி இருப்பதை தந்தை போனில் சொன்ன மறுகணமே கோயம்பத்தூரில் இருந்து கிளம்பி விட்டான் சிவா. காரில் வரும் போதே தொழில்களைக் கவனிக்க தக்க ஆட்களை போனிலேயே நியமித்து விட்டவன், கண்ணூரில் இருக்கும் அத்தனை நண்பர் களுக்கும் ஆளுக்கொரு வேலையாகப் பிரித்தும் கொடுத்துவிட்டான்.

சிவா வந்து இறங்கிய அடுத்த நிமிடமே கல்யாண வேலைகள் ஜரூராக ஆரம்பித்துவிட்டது. தன் ஒரே அக்காவின் திருமணத்தை கோலாகலமாக நடத்தக் கனவு கண்டு கொண்டிருந்த சிவாவிற்கு அதை கண்ணூரில்

வைதது நடத்த வேண்டிய நிலை வந்ததில் சிறிது வருத்தம்தான். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை அவ்வாறு அமைந்துவிட்டதை உணர்ந்து கொண்ட அவன் அந்த சூழ்நிலையிலும் மஞ்சரியின் திருமணத்தை ஒரு குறையும் இல்லாமல் நடத்த வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கிவிட்டான்.

முதியவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்த அந்த நிலையிலும், அந்த வீட்டையே தேவலோகம் போல அலங்கரிக்கத் தயங்கவில்லை அவன். மின் விளக்கு அலங்காரத்தால் அந்த பெரிய மாளிகையை ஜொலிக்கச் செய்துவிட்டான் சிவா. அவனை தடுக்க பெரியவர்கள் எவரும் முன்வராததினால் அவன் விருப்பப்படி அனைத்தையும் செய்து முடித்துவிட்டவன், இரவு முழுவதும் மஞ்சரியின் அருகிலேயே தூங்காமல் விழித்தபடி அமர்ந்து, அவள் முகத்தை தன் மனதிற்குள் பதிய வைத்துக் கொள்ள முயற்சிப்பவன் போல அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

தம்பியின் மனநிலையை உணர்ந்துகொண்ட மஞ்சரி தாயின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்ட மஞ்சரி தம்பியின் மடியில் கை போட்டபடி தன் எதிர்கால வாழ்வைத் தேடுபவள் போல தன் முன் இருந்த அரையிருட்டைக் கண்களால் துழாவிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் இருந்த அனைவரும் ஆளுக்கொரு மன நிலையில் ஆளுக்கொரு வேதனையில் தனக்குள் உழன்று கொண்டிருக்க இதில் பிரசன்னாவின் ஒதுக்கம் ...ல் தென்படாமல் போய் விட்டது.



# 24

திருமணம் முடிந்த கையோடு மணமக்கள் இருவரையும் சந்நிதானத்தின் எதிரில் அமைக்கப்பட்டிருந்த பூமேடையில் அமரச் செய்தார்கள் உறவுப் பெண்கள்.

நெருங்கிய உறவினர்களும், சுந்தரத்தின் நெருக்கமான நண்பர்களையும், ஊரில் இருந்த பெரிய மனிதர்களையும் மட்டுமே திருமணத்திற்கு அழைத்திருந்ததினால் அந்த சின்னக் கோவிலில் ஜன நெருக்கடியின்றி இனிதாகத் திருமணத்தை நடத்த முடிந்திருந்தது.

மற்ற உறவினர்களை சூழ்நிலையைப் பொறுத்து வேறொரு நல்ல நாளில் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருந்தார் யோகநாதன்.

ரோஜா வண்ணப் பட்டில், மிகக் குறைந்த நகைகளுடன், தலையில் ஒரு சிறிய வைர நெத்திச்சுடி, மற்றும் சாதாரணமாகப் பின்னப்பட்டிருந்த கூந்தலில், தழையத் தழையப் பூவைத்து அந்தத் தோற்றத்திலேயே தேவதையைப் போல ஜொலித்துக் கொண்டிருந்த மஞ்சரியைக் கடைக் கண்ணால்கூட பார்க்காமல் நின்றிருந்தான் பிரசன்னா.

அவனது கண்களில் நன்றாகத் தெரியும்படியாக ... நேர் எதிரில் முன் வரிசையில்

அன்னையின் அருகில் சோகமான முகத்துடன் அமர்ந்திருந்தாள் சஞ்சனா. மற்ற நேரங்களில் மஞ்சரியை குரோதத்துடன் முறைத்துக் கொண்டிருந்த சஞ்சனாவின் விழிகள் பிரசன்னா அவளைப் பார்க்கும் போது மட்டும் கண்ணீரால் நிறைந்தது. வேதனையைத் தாங்க முடியாதவள் போல சோகமான முகத்துடன் சோர்ந்த பார்வையுடன் பிரசன்னாவை பார்த்த சஞ்சனாவின் மீது பார்வை படியும்போதெல்லாம் குற்ற உணர்வினால் தவித்தான் பிரசன்னா. அந்த குற்ற உணர்வுக்குக் காரணமாக அவன் நம்பிக் கொண்டிருந்த சஞ்சனாவின் மேல் அவனுக்கு கோபம் பெருகிக் கொண்டிருந்தது.

நல்ல நேரம் பார்த்து மணமக்களை தன் மாளிகைக்கு அழைத்துச் செல்வதற்காக அவர்கள் அருகில் வந்த வைசாலி மஞ்சரியின் கன்னத்தில் பாசத்துடன் முத்தமிட தன் கண்மணியை ஒரு நல்ல இடத்தில் ஒப்படைத்த நிறைவுடன் கண்களைத் துடைத்துக் கொண்டார் சுந்தரம். அவரது மனம் புரிந்த யோகநாதன் அவர் கைகளைத் தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டார்.

''மாப்பிள்ளை, மஞ்சரி உங்களுக்கு மட்டும் இல்ல, எங்களுக்கும் பொண்ணுதான். நீங்க அவளை எந்த அளவுக்கு பாசமாப் பார்த்துக்கிட்டீங்களோ அந்த பாசத்திற்கு இம்மியளவும் குறையாத அன்போடு அவளை நாங்க பார்த்துக்குவோம். எங்களை நம்புங்க.''

''எனக்கும் அது நல்லாத் தெரியும் மச்சான். இருந்தாலும்... பெத்தவன் இல்லையா. அதனால மனசு கொஞ்சம் கலக்கமா இருக்கு அவ்வளவுதான்'' யோகநாதனின் கைகளுக்குள் அடங்கியிருந்த சுந்தரத்தின் கைகள் நடுங்கியது.



எவ்வளவு பெரிய கோடீஸ்வரனாக இருந்தும் மகள் மேல் கொண்ட பாசத்தினால் குழந்தையாக மாறி நின்ற சுந்தரத்தின் கோலம் யோகநாதனின் மனதை நெகிழச் செய்தது.

''கவலைப்படாதீங்க மாப்பிள்ளை. எங்க அப்பாவுக்காக விலைமதிப்பில்லாத வைரத்தை எங்க கையில் கொடுத்திருக்கீங்க. அதன் மதிப்பு தெரிஞ்சு நாங்க பொக்கிசமாப் பாதுகாப்போம். இது நான் உங்களுக்கு செய்யுற நன்றிக் கடன்...''

யோகநாதனின் வார்த்தைகளில் இருந்த உண்மை உணர்ந்து சுந்தரத்தின் மனம் சிறிதளவு அமைதியானது. அவர் திரும்பி மகளின் அருகில் நின்றிருந்த மோகனாவை ஜாடையாக அழைத்தார். கணவரின் கண்ஜாடையைப் புரிந்து கொண்ட மோகனா வைசாலியை மஞ்சரியின் அருகில் நிற்கச் சொல்லிவிட்டு சுந்தரத்திடம் வந்தாள்.

''நேரமாகுது மோகனா. இப்பக் கிளம்பினால்தான் நாம கோயம்பத்தூரில் போய் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளை பார்க்க முடியும்.''

''மஞ்சரி...?''

''மஞ்சரியையும் மாப்பிள்ளையையும் சிவா இங்க இருந்து கூட்டிக்கிட்டு வந்திடுவான். நாம கிளம்பலாம்'' தன் அருகில் நின்றிருந்த யோகநாதனிடம் கூறிவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பினார் சுந்தரம்.

அவர்கள் கிளம்புவதை ஏக்கத்துடன் பார்த்த மஞ்சரியிடம் லேசாகத் தலையசைத்துவிட்டு கணவருடன் கிளம்பி விட்டாள் மோகனா.

வைத்து நடத்த வேண்டிய நிலை வந்ததில் சிறிது வருத்தம்தான். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலை அவ்வாறு அமைந்துவிட்டதை உணர்ந்து கொண்ட அவன் அந்த சூழ்நிலையிலும் மஞ்சரியின் திருமணத்தை ஒரு குறையும் இல்லாமல் நடத்த வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கிவிட்டான்.

முதியவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்த அந்த நிலையிலும், அந்த வீட்டையே தேவலோகம் போல அலங்கரிக்கத் தயங்கவில்லை அவன். மின் விளக்கு அலங்காரத்தால் அந்த பெரிய மாளிகையை ஜொலிக்கச் செய்துவிட்டான் சிவா. அவனை தடுக்க பெரியவர்கள் எவரும் முன்வராததினால் அவன் விருப்பப்படி அனைத்தையும் செய்து முடித்துவிட்டவன். இரவு முழுவதும் மஞ்சரியின் அருகிலேயே தூங்காமல் விழித்தபடி அமர்ந்து, அவள் முகத்தை தன் மனதிற்குள் பதிய வைத்துக் கொள்ள முயற்சிப்பவன் போல அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். தம்பியின் மனநிலையை உணர்ந்துகொண்ட மஞ்சரி தாயின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்ட மஞ்சரி தம்பியின் மடியில் கை போட்டபடி தன் எதிர்கால வாழ்வைத் தேடுபவள் போல தன் முன் இருந்த அரையிருட்டைக் கண்களால் துழாவிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் இருந்த அனைவரும் ஆளுக்கொரு மனநிலையில் ஆளுக்கொரு வேதனையில் தனக்குள் உழன்று கொண்டிருக்க இதில் பிரசன்னாவின் ஒதுக்கம் கருத்தில் தென்படாமல் போய் விட்டது.



# 24

திருமணம் முடிந்த கையோடு மணமக்கள் இருவரையும் சந்நிதானத்தின் எதிரில் அமைக்கப்பட்டிருந்த பூமேடையில் அமரச் செய்தார்கள் உறவுப் பெண்கள்.

நெருங்கிய உறவினர்களும், சுந்தரத்தின் நெருக்கமான நண்பர்களையும், ஊரில் இருந்த பெரிய மனிதர்களையும் மட்டுமே திருமணத்திற்கு அழைத்திருந்ததினால் அந்த சின்னக் கோவிலில் ஜன நெருக்கடியின்றி இனிதாகத் திருமணத்தை நடத்த முடிந்திருந்தது.

மற்ற உறவினர்களை சூழ்நிலையைப் பொறுத்து வேறொரு நல்ல நாளில் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருந்தார் யோகநாதன்.

ரோஜா வண்ணப் பட்டில், மிகக் குறைந்த நகைகளுடன், தலையில் ஒரு சிறிய வைர நெத்திச்சூடி, மற்றும் சாதாரணமாகப் பின்னப்பட்டிருந்த கூந்தலில், தழையத் தழையப் பூவைத்து அந்தத் தோற்றத்திலேயே தேவதையைப் போல ஜொலித்துக் கொண்டிருந்த மஞ்சரியைக் கடைக் கண்ணால்கூட பார்க்காமல் நின்றிருந்தான் பிரசன்னா.

அவனது கண்களில் நன்றாகத் தெரியும்படியாக அவர்களுக்கு நேர் எதிரில் முன் வரிசையில்

ஏகாம்பரத்தின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு மணமக்கள் இருவரையும் அன்றே மறுவீட்டிற்கு அழைத்திருந்தார் சுந்தரம். மறுநாளே கோயம்புத்தூரில் பெரிய அளவில் ரிசப்சனுக்கும் சுந்தரம் ஏற்பாடு செய்திருந்தால் மணமக்கள் இருவரும் முதல் நாள் இரவை கோயம்புத்தூரில் சுந்தரத்தின் இல்லத்தில் கழிப்பதாக ஏற்பாடாகியிருந்தது.

ஏகாம்பரத்திற்கு ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்து விட்டால் தன் மகளின் திருமணத்தை நண்பர்களை அழைத்துக் கோலாகலமாக கொண்டாடுவது முடியாமல் போய்விடும் என்பதால் இந்த முடிவை எடுத்திருந்தார் சுந்தரம். உடல்நிலை சரியில்லாத பெரியவர் இருக்கும் வீட்டில் மணமக்களால் சந்தோசமாக இருக்க முடியாது என்ற எண்ணத்தினால் யோகநாதனும் சுந்தரத்தின் முடிவை மனமார ஏற்றுக் கொண்டார்.

நல்ல நேரத்தில் தன் வலது காலை எடுத்து வைத்து பிரசன்னாவின் மனைவியாக, குலம் தழைக்க வந்த மகாலட்சுமியாக, யோகநாதனின் மருமகளாக ஏகாம்பரத்தின் கனவு மாளிகைக்குள் அடியெடுத்து வைத்தாள் மஞ்சரி.

நினைவு தெரிந்த நாள் முதலாக ஓடியாடி விளையாடி வந்த மாளிகைதான் என்றாலும் அந்த நொடி முதல் அந்த மாளிகை தன் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறிவிட்டதாக உணர்ந்தாள் மஞ்சரி. கணவரின் அருகில் இருக்க வேண்டிய காரணத்தினால் திருமணத்திற்கு வந்திராத பட்டம்மாள் வாசலுக்கே ஓடிவந்து மஞ்சரியின் கன்னத்தில் முத்தமிட்டு வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.



வீட்டிற்குள் வந்த மணமக்கள் முதலில் பூஜை அறைக்குச் செல்லாமல் நேராக ஏகாம்பரத்தின் அறைக்குச் சென்று அவர் முன் மாலையும் கழுத்துமாக மணக்கோலத்தில் நிற்க கண்களில் கண்ணீருடன் அவர்களை வாழ்த்துவதற்காக மிகவும் சிரமத்துடன் கட்டிலை விட்டு இறங்க முயற்சித்தார் ஏகாம்பரம். அவரைத் தடுத்த மஞ்சரி பிரசன்னாவின் கைப்பற்றி படுத்த நிலையில் இருந்த ஏகாம்பரத்தின் கால்களில் விழுந்தாள். எதுவும் புரியாத நிலையில் நின்றிருந்த பிரசன்னா மஞ்சரி தன் கையைப் பிடித்தவுடன் முதலில் உதற நினைத்து, அவள் செயலை எதிர்பார்த்தவன் போல அவன் கையை இறுக்கப் பற்றி தாத்தாவின் காலருகில் அழைத்துச் சென்று அவர் பாதம் பணிந்தாள். மஞ்சரியின் நோக்கம் புரிந்த பிரசன்னாவும் அமைதியாக ஏகாம்பரத்தின் பாதம் பணிந்தான்.

மனம் கொள்ளாத பெருமையுடன் வைசாலி மஞ்சரியை அழைத்துச் சென்று பூஜை அறையில் இருந்த விளக்கினை ஏற்றச் செய்தார். தனக்குப் பின்னால் தன் பரம்பரையைக் காப்பாற்ற ஒரு நல்ல மருமகள் வந்து விட்ட மனநிறைவுடன் அனைத்துத் தெய்வங்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறிக் கொண்டாள் வைசாலி.

ஹாலில் இருந்த சோபாவில் மஞ்சரியும் பிரசன்னாவும் அருகருகில் அமர்ந்திருக்க சுமங்கலிப் பெண்கள் சுற்றி நின்று நலுங்குப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறிய கிண்ணத்தில் பாலும் பழமும் கலந்து ஒரு ஸ்பூன் போட்டு எடுத்து வந்த வைசாலி தன்

கையினால் அந்த கலவையை எடுத்து பிரசன்னாவிற்கும் மஞ்சரிக்கும் ஊட்டி விட்டாள்.

"வைசாலி... பால் பழத்தைக்கூட உன் மருமகள் அவ கையால எடுத்துச் சாப்பிட மாட்டாளா? இப்படியே இப்படி ஊட்டி விட்டுப் பழக்கினால் பின்னாடி உன்பாடு திண்டாட்டம் தான் போ..." உறவுப் பெண்களில் ஒருத்தி கிண்டலாகக் கூறுவதைப்போல வயிற்றெரிச்சலுடன் கூறினாள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த வைசாலி கோடீஸ்வரக் குடும்பத்திற்கு மருமகளாக ஆனது மட்டும் அல்லாமல், ஒரு கோடீஸ்வர மருமகளையும் கொண்டு வந்துவிட்ட பொறாமை அவளுக்கு.

"என் மஞ்சரி எனக்கு என்னிக்கும் குழந்தைதான். காலம் பூராவும் அவளுக்கு நான் ஊட்டிவிட்டுக்கிட்டே இருந்தாலும் அது எனக்கு சந்தோசம்தான்..." உண்மையான அன்புடன் கூறிய வைசாலியின் பாசம் மஞ்சரியின் மனதைத் தொட்டது. இத்தகைய அன்பிற்காக எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்யலாம் என்று மனதிற்குள் உறுதியுடன் சொல்லிக் கொண்டாள் மஞ்சரி.



## 25

கட்டில் அளவாக பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்க, கட்டிலின் அருகில் இருந்த டீப்பாயின் மேல்



பழங்களும், இனிப்பு வகைகளும் தனித்தனித் தட்டில் அழகாக வைக்கப்பட்டிருந்தது. தட்டுக்களின் அருகில் பால் நிறைந்த பிளாஸ்க்கும், அதன் அருகில் மிக நுட்பமான வேலைப்பாடுகளைக் கொண்ட வெள்ளி டம்ளர் பளபளத்துக் கொண்டிருந்தது.

அறைக்குள் நுழைந்த பிரசன்னாவை ரூம் ஸ்பிரேயரின் இதமான நறுமணமும், ஏஸியின் குளிர்ச்சியும் போட்டி போட்டுக்கொண்டு வரவேற்றது. இரண்டு நாட்களாக உடலும் மனமும் செயலற்றவனாக பித்து பிடித்தவனைப் போல இருந்த பிரசன்னாவிற்கு அந்த ரம்மியமான சூழ்நிலை ஏதோ ஒரு வகையில் மனதிற்கு இதமளிப்பதைப் போல இருந்தது. அவன் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த கட்டிலில் கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்தாற்போல வைத்துக்கொண்டு சாய்ந்து அமர்ந்தான்.

அறைக்கதவு மெல்லியதாக தட்டப்பட அதைத் தொடர்ந்து அறைக்குள் வந்த மஞ்சரி கை வளையல்கள் மெல்லச் சிணுங்க ரூமின் கதவை அடைத்தாள். கண்ணை உறுத்தாத இனிமையான க்ரீம் கலர் எம்பிராய்டரி சேலையும், நீண்ட பின்னலில் ஜாதி மல்லிகைச் சாமும், கை கழுத்துக்களில் அளவான நகைகளும், கழுத்தில் அவன் அன்று காலை கட்டிய மஞ்சள் கயிறுமாக மிகப்பேரழகுடன் நின்றிருந்த மஞ்சரியைப் பார்க்கையில் பிரசன்னாவிற்கு நடந்தவை எல்லாம் கனவாகத் தோன்றியது.

செதுக்கிய சிலை உயிர்பெற்று எழுந்ததைப் போல மெதுவாக நடந்து பிரசன்னாவின் அருகில் வந்த மஞ்சரி

அவன் கால்களில் விழுந்து வணங்கி எழுந்து, டீப்பாயில் பிளாஸ்க்கில் இருந்து பாலை ஊற்றி பிரசன்னாவிடம் நீட்டினாள். ஒன்றும் கூறாமல் அதை வாங்கிக் குடித்து விட்டு காலி டம்ளரை மஞ்சரியின் கையில் தராமல் அருகில் இருந்த டீப்பாயில் அவன் வைக்க, அதே டம்ளரில் தானும் பாலை ஊற்றிக் குடித்த மஞ்சரி அதை அங்கேயே வைத்துவிட்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாதவளாக தயக்கத்துடன் அங்கேயே நின்று விட்டாள்.

தனி அறையும், அருகில் பேரழகின் மொத்த உருவமாக கழுத்தில் புது மஞ்சள் கயிறு மின்ன நின்றிருந்த மஞ்சரியும் பிரசன்னாவின் மனதிற்குள் ஏதோ ஒரு ரசாயன மாற்றத்தை உண்டாக்கினாலும், அதையும்மீறி சஞ்சனாவின் சோகம் கொண்ட முகம் கண்முன் தோன்றுவதை பிரசன்னாவால் தடுக்க முடியவில்லை. சஞ்சனாவுடன் தன் திருமணம் நிகழ்ந்திருந்தால் இந்த முதலிரவு அறைக்குள் இந்நேரம் என்னென்ன நிகழ்ந்திருக்கும் என்ற கற்பனையில், அந்த கற்பனை கைகூடாத ஆண்மையின் தவிப்பில் கோபத்துடன் மஞ்சரியைப் பார்த்தான் பிரசன்னா.

"ஏன் அங்கயே நிக்கிற? இங்க வந்து உட்காரு. அதான் உங்கப்பா இவ்வளவு பெரிய கட்டிலை வாங்கி போட்டிருக்காரே? இதில் உனக்கு உட்கார இடமில்லாமலா போய்விட்டது?" பிரசன்னாவின் குத்தல் வார்த்தைகள் முள்ளாக தைத்தாலும் மறுக்காமல் வந்து கட்டிலில் அமர்ந்தாள் மஞ்சரி.

அவள் தலையில் சூடியிருந்த ஜாதி மல்லிகையின் மணம் பிரசன்னாவைச் சூழ்ந்து கொண்டு அவனை



அதில் மூழ்கடித்தது. தாங்க முடியாத தவிப்புடன் அந்த நறுமணத்தை மெதுவாக உள்ளிழுத்துக் கொண்டான் பிரசன்னா.

"ஏன் இப்படிச் செஞ்ச மஞ்சரி?" ஒற்றை வரிக் கேள்விதான்.

ஆனால் அந்த ஒற்றைவரிக் கேள்வியை எதிர்நோக்கி ஏறக்குறைய இரண்டு நாட்களாக உள்ளத்தில் பேதயையின் துடிப்புடன் காத்திருந்த மஞ்சரியால் பிரசன்னாவின் முகம் பார்த்து அதற்கான விடையைக் கூற முடியவில்லை.

"என்னை வேற என்ன செய்யச் சொல்றீங்க மாமா?" அவனது கேள்வியையே அவளுக்கான பதிலாகக் கேட்டுவிட்டாள் மஞ்சரி.

"எவ்வளவு தெளிவாக புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய். ஆனால் இதே தெளிவை என் வாழ்க்கையை நாசமாக்குவதற்கு முன்பாக காட்டியிருக்கலாமே? ஏன் செய்யலை மஞ்சரி?"

"இதில் என் வாழ்க்கையும்தான் அடங்கியிருக்கு மாமா?"

"அதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும். உன் வாழ்க்கையை நீதான் உன் வாயால் தீர்மானித்தாய்... ஆனால் அதனால் என் வாழ்க்கையும் நிம்மதியில்லாமல் போயிருச்சே? எதற்காக இப்படி செஞ்ச?" மனம் தாளாமல் குமுறிய பிரசன்னாவின் முகத்தை அமைதியுடன் பார்த்தாள் மஞ்சரி.

"நான் என்ன செஞ்சிருக்கணும்னு நீங்க எதிர்பார்த்தீங்க மாமா?"

புருசன் பொண்டாட்டி. நாலு சுவத்துக்குள்ள நீ யாரோ... நான் யாரோ..."

"....."

"இப்படி அமைதியா இருந்தால் நான் மாறிடுவேன்னு கனவிலகூட நினைக்காத. இனி நான் உன் பக்கங்கூட திரும்ப மாட்டேன். இதுவரை நீ பார்த்த பிரசன்னா வேற... இனி நீ பார்க்கப் போற பிரசன்னா வேற... பார்க்கலாம்டி..."

"....."

"அப்புறம் இன்னும் ஒன்றை சொல்லிடறேன். நல்லாக் கேட்டுக்க. இந்த வீட்டில் இருந்து நகை, பணம்னு நீ எதையும் கொண்டுவரக்கூடாது. அப்புறம் நீ பார்த்துக்கிட்டு இருக்கியே கார்மெண்ட் பேக்டரி அதையும் நீ உன் அப்பாகிட்டயே ஒப்படைச்சிடணும். உங்கப்பன் சொத்துல இருந்து எனக்குச் சல்லிக்காசு கூட வேண்டாம். அதையெல்லாம் அவர் மூஞ்சியில தூக்கி எறிஞ்சுட்டு வர்றதா இருந்தால் உன்னைக் கூட்டிக்கிட்டுப் போவேன். இல்லாட்டி..."

"இல்லாட்டி...? இல்லாட்டி என்ன பண்ணுவீங்க? என்னை இங்கயே விட்டுட்டுப் போயிடுவீங்களா. நான் இல்லாமல் போனா உங்க வீட்டில உங்களையே உள்ள நுழைய விடமாட்டாங்க. தெரியுமில்ல? அப்புறம் இனிமேல் எங்கப்பாவை மரியாதைக் குறைவா பேசற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க. தன்னோட மாப்பிள்ளையை நீங்க மரியாதைக் குறைவாப் பேசினது தெரிஞ்சாப் போதும்... பெரிய மாமா உங்களை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாரு..."



"என்னடி மிரட்டுறியா? அதையும்தான் பார்ப்போம்டி..."

"பாருங்க... பாருங்க... நல்லாப் பாருங்க... எங்கப்பாவும், அம்மாவும் நான் பிறந்ததில் இருந்து பார்த்துப் பார்த்து எவ்வளவோ ஆசைகளோடவும் கனவுகளோடவும் வாங்கிச் சேர்த்த நகைங்க இதெல்லாம். உங்களுக்கு வேணும்னா இதெல்லாம் வெறும் தங்கமும் வைரமுமாத் தெரியலாம். ஆனால் எனக்கு இதெல்லாம் என்னைப் பெத்தவங்க எனக்காக சேர்த்து வெச்ச அன்பும் பாசமும். விலை மதிப்பில்லாத பொக்கிசம். அதை என்னால யாருக்காகவும் விட்டுத்தர முடியாது..."

"சரிடி... இந்தக் கதையெல்லாம் கூட சரிதான். ஆனால் அந்த கார்மெண்ட் பேக்டரி..." பிரசன்னா பிடிவாதமாகக் கேட்க அவளைப் பார்த்த மஞ்சரியின் கண்களில் மென்மையும் அன்பும் தெரிந்தது.

"இப்ப நான் சொன்ன எல்லாத்தையும் விட விலை மதிப்பில்லாத பொக்கிசம் அதுதான். ஏன்னா அது என் தாத்தா எனக்காகக் கண்ட கனவு..." மஞ்சரியின் முகத்தில் தெரிந்த அன்பு அவளது முகத்திற்கு மேலும் அழகூட்டுவதை எரிச்சலுடன் பார்த்தான் பிரசன்னா.

"தாத்தாவா? இது என்ன புதுக்கதை?"

"ஆமா... எங்க தாத்தா... எங்க அப்பாவோட அப்பா... அழகு சுந்தரம். அவர் கண்ட கனவு இது. நான் பொண்ணாப் பொறந்த உடனே என் பெயரில் தொடங்கிய, எனக்காகத் தொடங்கிய தொழில் இது. ஆண்களைப் போல பஞ்சு மில்லிலும், ஆட்டோ மொபைல்ஸிலும் நான் வேலைபார்க்க முடியாதுன்னு நினைச்சு எனக்காக உருவாக்கின தொழில்தான் இந்த கார்மெண்ட் பேக்டரி.

பெண்களுக்கு அழகுணர்ச்சி அதிகமா இருக்கும்கிறதால புது புது டிசைனில் துணிகளைக் கொண்டு வரமுடியும்னு நினைச்சாராம் எங்க தாத்தா. அவரோட கனவை நிறைவேற்றத்தான் நான் பாரினில் போய் பேசன் டிசைனிங் படிச்சிட்டு வந்தேன். ஒரு சாதாரண பேக்டரியா இருந்த அதை என் உழைப்பால பெரிய லெவலுக்குக் கொண்டு வந்திருக்கேன். என்னோட பேக்டரியில் உருவாகும் பிராண்டு உடைகளுக்கு உலக அளவில் மதிப்பு உருவாக்கிக்கிட்டு இருக்கு. என் உயிரே போனாலும் அதை நான் விட்டுத்தர மாட்டேன்...'' உறுதியான குரலில் கூறினாள் மஞ்சரி.

''அப்ப நான் சொன்ன எதையுமே நீ கேட்க மாட்ட? அப்படித்தான...''

''அப்படியில்ல மாமா. நான் என் அம்மாவைப் பெத்த தாத்தாவுக்காக என் வாழ்க்கையைக் கொடுத்திருக்கேன். என் அப்பாவைப் பெத்த தாத்தாவுக்காக என் உழைப்பைக் கொடுக்க நினைக்கிறேன். ஆனால்... நான்...? எனக்காக...? எனக்காக என்ன இருக்கு மாமா? இதில் என் வாழ்க்கை... இல்ல உங்க வார்த்தை... எதுக்குமே இடமே இல்லாதபோது அதை நான் எப்படிக் கேட்க முடியும்? என் வாழ்க்கையில் எல்லாத்தையுமே அடுத்தவங்களே தீர்மானிச்சுட்டாங்க. நான் அதை நிறைவேத்த ஓடிக்கிட்டு இருக்கேன். அவ்வளவுதான்...'' பேசி முடித்த மஞ்சரி தாங்க முடியாத சோர்வுடன் பிரசன்னாவின் அருகில் இருந்த தலையணையை எடுத்துக் கட்டிலின் ஒரு ஓரமாகப் போட்டுப் படுத்துவிட, அவளது வார்த்தைகள் உருவாக்கிய தாக்கத்தில் இருந்து விடுபடும் வகையறியாத திகைப்புடன் படுக்கையில் சாய்ந்தான் பிரசன்னா.





# 26

அழகான மலர்த்தோட்டம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரவிப் படர்ந்திருந்தது கற்பனைக்கு எட்டாத வண்ணங்களில் எல்லாம் மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது.

அந்த மலர்த் தோட்டத்தின் நடுவில் நின்றிருந்த சஞ்சனா பிரசன்னாவிற்கு முதுகு காட்டி தூரத்தில் தெரிந்த மலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆவலும் குற்ற உணர்ச்சியுமாக அவளது அருகில் சென்று அவள் தோளில் கை வைத்துத் தன்புறம் திருப்பினான் பிரசன்னா. அவன் திருப்பிய வேகத்தில் சஞ்சனா திடீரென்று மஞ்சரியாக மாறிவிட திகைப்புடன் நின்று விட்டான் பிரசன்னா. அவனது திகைப்பைப் போக்க மஞ்சரி தன் கையில் இருந்த மலர்ச்செண்டால் பிரசன்னாவின் தோளில் தட்டினாள்.

திடுக்கிட்டு விழித்தெழுந்த பிரசன்னாவிற்கு ஒரு கணம் எங்கிருக்கிறோம் என்பதே புரியவில்லை. கண்களை கையால் கசக்கியபடி இருந்த அவனது மூளைக்கு மெதுவாகத் தன் திருமணமும் முதலிரவும் நினைவுக்கு வர மெதுவாகக் கண் திறந்து அறையைச் சுற்றிப் பார்த்தான்.

முதல் நாள் இரவில் டீப்பாயின் மீதிருந்த ஸ்வீட், பழ வகைகளும், பிளாஸ்க் மற்றும் டம்ளரும் காணாமல் போயிருக்க அறையெங்கும் தூவப்பட்டு இருந்த மலர்கள் காற்றில் வாடிப் போய் கிடந்தது.

அவன் எதிரில் நின்றிருந்த மஞ்சரி குளித்து முடித்து ஈரமுடியைக் காயும் பொருட்டு நன்றாக விரிந்திருக்கும்படி தோளில் படரவிட்டிருந்தாள். கழுத்தில் அவன் கட்டிய தாலியுடன் புதிதாக ஒரு தங்கச் சங்கிலி வைர முகப்புடன் தொங்கிக் கொண்டு இருந்தது. கைகளிலும் காதிலும் அவள் அணிந்திருந்த வைர நகைகள் கூட புது மெருகுடன் மின்னியதைக் கண்கள் சுருங்கப் பார்த்தான் பிரசன்னா.

''அப்படியெல்லாம் பார்க்க வேண்டாம் மாமா. இதெல்லாம் அம்மா செய்த வேலை. மற்றபடி நாளுக்கொரு நகையும் வேலைக்கொரு அலங்காரமும் செய்து கொள்ளும் பழக்கம் எனக்கில்லை.''

''அதை எதுக்காக என்கிட்ட சொல்லுற? நீதான் நேத்து நைட்டே எல்லாத்தையும் தெளிவாகச் சொல்லிட்டியே? அதற்கு மேலும் உன்னைக் கேள்வி கேட்க நான் என்ன பைத்தியமா?''

''நான் என் சூழ்நிலையைச் சொன்னேன் மாமா. மத்தபடி எனக்கு நினைவு தெரிந்து என் மாமா பைத்தியமும் இல்லை. அவர் ரொம்பப் புத்திசாலி. என்ன... கொஞ்சம் முன் கோபம் ஜாஸ்தி'' மஞ்சரி கூறிய விதத்தில் பிரசன்னாவின் இதழ்களில் அவனையறியாமல் புன்னகை தோன்றியது.



''இப்படியெல்லாம் பேசினால் நான் எல்லாத்தையும் மறந்துடுவேன்னு மட்டும் நினைக்க வேண்டாம்...''

''நான் உங்களை எதையும் மறக்கச் சொல்லவே இல்லையே மாமா. இன்பாக்ட்... நீங்கதான் எனக்குக் கண்டிசன் போட்டதாக ஞாபகம்...''

''ஆமாம். நான் கண்டிசன் போட்டவுடன் நீ அதை அப்படியே கேட்டுடுவியாக்கும். சும்மா இங்க நின்னு என் வாயைப் பிடுங்காதே. போய் ஏதாவது உருப்படியான வேலை ஏதாச்சும் இருந்தால் பாரு... போ...''

எரிச்சலுடன் முகம் சுளித்த பிரசன்னாவின் முன் தன் கையில் இருந்த காபிக் கோப்பையை நீட்டினாள் மஞ்சரி.

''எனக்கு இதுதான் உருப்படியான முக்கியமான வேலை மாமா. காபியைக் குடிச்சிட்டுப் போய்க் குளிச்சிட்டு வாங்க. பாத்ரூமில் ஹீட்டர் ஆன் பண்ணி வெச்சிருக்கேன். டவல் பாத்ரூமிற்கு உள்ளேயே இருக்கு. அந்த ஹேங்கரில் உங்களுக்கான பேண்ட் சர்ட் எடுத்து வெச்சிருக்கேன். பேஸ்ட் அப்புறம் புது பிரஸ் எல்லாமே பாத்ரூமில் இருக்கிற ஸ்டாண்டில் எடுத்து வெச்சிருக்கேன்...''

''இதையெல்லாம் நான் பார்த்துக்க மாட்டேனா? நான் என்ன பச்சைக் குழந்தையா? என்ன... பத்தினி தர்மத்தை கடைப்பிடிக்கிறதா நினைப்பா உனக்கு?'' அதுவரை முகத்தில் இருந்த சிரிப்பு.காணாமல் போக படக்கென்று நிமிர்ந்து பிரசன்னாவை பார்த்தாள் மஞ்சரி.

''எனக்கு தர்மமெல்லாம் தெரியாது மாமா. ஆனால் நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும் நான் பத்தினி தான்'' கூறிவிட்டு அவனது பதிலை எதிர்பார்க்காத

வளாக வேகமாக அறையைவிட்டு வெளியேறிவிட்டாள் மஞ்சரி.

அதன்பின் மாலை வரை அவனது தேவைகள் அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்த மஞ்சரி அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவனாக பேச வந்தாலும் ஒரு மௌனப் பார்வையுடன் விலகிச் சென்று விட்டாள்.

அதற்கு முன் பலமுறை அத்தையின் வீட்டிற்கு வந்திருந்தாலும், மோகனா எவ்வளவோ அன்புடன் உபசரித்திருந்தாலும் ஒருவித தர்மசங்கடத்துடன் அந்த வீட்டுடன் ஒட்ட முடியாமல் தவித்து விடுவான் பிரசன்னா. அதனாலேயே அவன் அத்தையின் வீட்டிற்கு வந்தாலும் அங்கு இரவு தங்க வேண்டிய சூழ்நிலையைத் தவிர்த்து விடுவான்.

ஆனால் இம்முறை அவனுக்கு அத்தையின் வீடு அடுத்தவர் வீடாகத் தோன்றவில்லை. தன் அக்காவின் கணவனை விட்டுக் கணநேரம்கூட பிரிய மனம் இல்லாதவனைப் போல பிரசன்னாவின் அருகிலேயே அமர்ந்து அவனுடன் பேசிக் கொண்டே இருந்தான் சிவா. தன்னுடைய நண்பர்கள் அனைவரையும் வீட்டிற்கு வரவழைத்து தன் மாமாவைப் பெருமையுடன் அறிமுகம் செய்து வைத்தான்.

தங்களது கம்பெனிகள், அவற்றின் நிலவரம், எந்த மாதிரியான சூழ்நிலையில் எம்மாதிரியான இடையூறுகளும் ஏற்படும், தன் கல்லூரியின் ஆண்டுவிழாவில் சிவா டான்ஸ் ஆடியது, அந்த விழாவில் மற்றவர்கள் சொதப்பியது என பிரசன்னாவிற்கு போர் அடிக்காத



... தேடித்தேடி பல்வேறு வகைகளில் பேசிக் ... சிவா பிரசன்னா அதுவரை பார்த்தறியாத ... இருந்தான்.

... சிவாவைப் பார்க்கும் போதெல்லாம் அவள் ... தெரியும் தாய்மையின் மென்மையும், அக்கா, ... அடைகாக்கும் கோழியைப் போல அவ... சுற்றிவரும் சிவாவையும் பார்க்கும் ... ஒரு அக்கா இல்லையே என்ற ஏக்கம் ... பிரசன்னாவிற்கு.

... மட்டும் எப்படி அனைவரின் அன்பையும் ... பெற்றுவிட முடிகிறது என்று வியப்புடன் ... கொண்டான் பிரசன்னா.

"அக்கா... பியூட்டி பார்லரில் இருந்து எத்தனை ... வரவேண்டும் என்று கேட்கிறார்கள். எத்தனை ... வரச் சொல்லட்டும்?"

"அம்மாடி மஞ்சரி... அந்த கோவிந்தனின் நம்பர் ... தெரியுமா? அதைக் கொஞ்சம் எடுத்துக் ..."

"மஞ்சரிக் கண்ணு... ரிசப்சனில் ஸ்வீட் வகைகளில் ... பண்ணட்டும்னு கேட்டரிங் சர்வீஸில் கேக் ... கொஞ்சம் லிஸ்ட்டைப் பார்த்து செலக்ட் ... விடும்மா..."

"... நீ வெச்ச மஞ்சள் ரோஜாவில் மொட்டுக்கள் ... கருகிவிடுதும்மா. போனமுறை நீ என்ன உரம் ...?"

"அம்மா... இன்னிக்கு சமையல்ல மாப்பிள்ளைத் ... க்கு விருப்பமான ஐட்டத்தை செய்யலாம்னு

இருக்கேன். அவருக்கு என்ன புடிக்கும்னு கேட்டுச் சொல்லு தாயி...''

வீட்டில் இருக்கும் அத்தனை பேரும் மஞ்சரியிடம் ஏதாவது கேட்டுக் கொண்டே இருக்க அவரவர்களுக்குத் தக்க பதில்களைக் கொடுத்துக் கொண்டும், இடையிடையே பிரசன்னாவின் தேவைகளைக் கவனித்துக் கொண்டும், தன்னுடைய துணிகளையும், நகைகளையும் பத்திரமாக பேக் பண்ணிக்கொண்டும் இருந்த மஞ்சரியின் முகத்தில் ஒரு துளி சோர்வும் இல்லை. அவளது சுறுசுறுப்பிற்கு ஈடாக மற்ற அனைவரும் ஓடிக்கொண்டிருப்பதைப் போல இருந்தது பிரசன்னாவிற்கு. அவளை அனைவரும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதில் அர்த்தம் இருப்பதாகத் தோன்றியது பிரசன்னாவிற்கு.



## 27

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலே விருந்தினர் வருகையினால் அல்லோகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. வந்த விருந்தினர்களின் எண்ணிக்கை சுந்தரம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்க நெகிழ்ந்து நின்று விட்டார் சுந்தரம்.

அவசரமாக ஏற்பாடு செய்திருந்த ரிசப்ஷன் என்பதினால் சுந்தரத்தினால் அனைவரையும் அழைக்க முடியாமல் போனதை எண்ணி அவரும் மனதளவில்



கவலையுடன் இருந்தார். ஆனால் அவரது நண்பர்களும், வாடிக்கையாளர்களும், உறவினர்களும் அவரது சூழ்நிலை புரிந்து அவர்களாகவே ரிசப்ஷனுக்கு வந்து கௌரவித்ததில் சுந்தரத்திற்கு மட்டில்லாத மகிழ்ச்சிதான்.

விருந்தினர் அனைவருக்கும் கை குலுக்கி, ஆசீர்வாதம் பெற்று, பரிசுப் பொருட்களுக்காக நன்றி தெரிவித்து என்று மஞ்சரியும் பிரசன்னாவும் மிகவும் சோர்ந்து விட்டார்கள். இரண்டு நாட்களாக உடலளவில் மட்டும் அல்லாது மனதளவிலும் இருவரும் பல உளைச்சல்களுக்கு ஆளாகி விட்டிருந்ததினால் ரிசப்ஷன் முடிந்து வீட்டிற்கு வந்து தங்களது அறைக்குள் சென்றவர்கள் அவர்களை அறியாமல் அப்படியே கட்டிலில் படுத்து உறங்கத் தொடங்கி விட்டார்கள். முதல் நாள் இரவில் பேசிய வீம்புப் பேச்சுக்கள் எதுவுமே நினைவில் இல்லாதவனாக சுவாதீனமாகத் தூங்கிக் கொண்டிருந்த பிரசன்னா தன் அருகில் படுத்திருந்த மஞ்சரியைப் பற்றிய எண்ணமே இல்லாதவனாக கைகால்களை அலுப்புடன் பரப்பிக் கொண்டு நிச்சிந்தையாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

அதிகாலையில் முதலில் கண்விழித்த மஞ்சரிக்கு அப்பொழுதுதான பிரசன்னா படுத்திருந்த கோலமே கருத்தில் தென்பட்டது. கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந்த பிரசன்னா தன் ஒரு கையை மஞ்சரியின் இடையைச் சுற்றி அணைத்துக் கொண்டும், காலை தூக்கி மஞ்சரியின் பாதத்தில் போட்டுக் கொண்டும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

சிறிய வயதில் இருந்து பார்த்துப் பழகியவளாக இருந்தாலும், தன் கழுத்தில் தாலிகட்டிய தன் கணவன்

என்ற உரிமையுள்ள ஒருவன் தன்னை அணைத்துக் கொண்டிருக்க, அவனது அணைப்பில் அடங்கியிருக்கும் அந்த நிலையை மஞ்சரி தன் மனதளவில் இப்போது உணர்ந்தாள். திருமணத்திற்குப் பின்பு முதல் முறையாக உரிமையுடன் தன் கணவன் தன்னைத் தொட்டிருக்கும் இந்த நொடி தன் ஜென்மம் முழுவதும் தன் நெஞ்சை விட்டு நீங்காமல் நிலைத்திருக்கும் என்ற எண்ணத்துடன் அசைவற்றுப் படுத்திருந்தாள் மஞ்சரி.

முதல் முறையாக ஒரு ஆணின் அணைப்பிற்குள் அடங்கியிருப்பதை உணர்ந்த கூச்சம் உடலெங்கும் பரவ, எங்கே தான் அசைந்தால் பிரசன்னா எழுந்து விடுவானோ என்ற அச்சத்தில் அப்படியே கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தாள் மஞ்சரி.

காலைப் பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்ட நேரத்தில் ஒரு வழியாகக் கண்விழித்த பிரசன்னா கட்டிலில் இருந்து எழுந்து அமர்ந்து சோம்பல் முறித்தான். கைகளை உயர்த்தி உடம்பை முறுக்கிக் கொண்டு தன் அருகில் திரும்பிப் பார்த்தவனுக்கு அப்பொழுதுதான் அவள் படுத்திருந்த கோலம் மூளையில் உறைத்தது. அவன் அப்படியே திகைப்புடன் அமர்ந்துவிட, வெட்கம் சிவப்பு உடம்பெல்லாம் பரவ வேகமாக எழுந்து பாத்ரூமிற்குள் சென்று மறைந்துவிட்டாள் மஞ்சரி.

மறுவீட்டுப் பலகாரக் கூடை கொண்டு செல்லும் சம்பிரதாயத்திற்காக செய்யப்பட்டிருந்த பலகார வகைகள் அடங்கிய பெரிய பெரிய சில்வர் டிரம்கள் ஒருபுறமும், சீர்வரிசைப் பாத்திரங்கள் மறுபுறமும் ஒரு காரில் ஏற்றப்பட்டிருந்தது. மற்றொரு சிறிய வேனில்



[illegible]

''இனி மஞ்சரி நம்ம ரெண்டுபேருக்குமே மகதான் மாப்பிள்ளை'' ஆயிரம் அர்த்தங்களையும் உறுதி மொழி களையும் உள்ளடக்கிய யோகநாதனின் ஒரு வரிப் பதிலில் உள்ளம் நிறைந்தார் சுந்தரம்.

முகம் கொள்ளாத சிரிப்பும் பெருமையுமாக வைசாலி ஆரத்தி எடுக்க மறுவீட்டிற்குள் நுழைந்தார்கள் மணமக்கள்.

''வாடா ராசாத்தி... வா... வா...'' உறவுப் பெண்கள் கூட்டத்தின் நடுவில் நடுநாயகமாக அமர்ந்திருந்த பட்டம்மாள் பேத்தியின் கரம் பற்றித் தன் அருகில் பெருமையுடன் அமர்த்திக் கொண்டாள்.

அப்பா மற்றும் மாமாவுடன் இணைந்து வீட்டிற்குள் நுழைந்த பிரசன்னாவின் உள்ளம் இனம் தெரியாத கிளர்ச்சியில் திளைத்திருந்தது. காரின் சீட்டின் ஒரு புறமாக பெட்டிகள் அடுக்கப்பட்டிருக்க மீதம் இருந்த இடத்தில் கணவனுக்கு மிகவும் நெருக்கமாக அமர்ந் திருந்த மஞ்சரி சற்று நேரத்திலேயே தன்னையறியாமல் உறங்கிவிட அவளது தலை பிரசன்னாவின் தோளில் மென்மையாக சாய்ந்து கொண்டது.

காரின் அசைவிற்கேற்ப அசைந்த மஞ்சரியின் உடல் உணர்த்திய மென்மையான ஸ்பரிசம் பிரசன்னாவின் உள்ளத்தில் அவனையறியாமல் மோகத்தீயைப் பற்ற வைத்தது. பிரசன்னா எதையும் வெளிக்காட்டாத முகத்துடன் முன்புறம் அமர்ந்து இருந்த சிவாவுடன் பேசிக்கொண்டிருக்க, பிரசன்னாவைத் திரும்பிப் பார்த்த சிவாவின் முகத்தில் பாசத்தின் புன்னகை தோன்றியது. தூங்கிக் கொண்டிருக்கும் அக்காவை தன்னுடைய பேச்சு இடையூறு செய்துவிடும் என்ற எண்ணத்துடன் அவன்



தன் பேச்சினை நிறுத்திவிட்டு காரின் முன்புறம் தெரிந்த ரோட்டை வெறிக்கத் தொடங்கினான்.

காரில் ஆழ்ந்திருந்த மௌனம் மஞ்சரியின் நெருக் கத்தை பிரசன்னாவிற்கு இன்னும் நன்றாக உணர்த்த அவன் உணர்வுகளின் கலவையாக மாறி அதில் மூழ்கத் தொடங்கி இருந்தான். கண்ணூருக்குள் கார் நுழைந்து தன் வீட்டின் வாசலில் வந்து நின்ற பொழுதுதான் பிர சன்னா தன் சுய உணர்விற்கே வந்தான். அவன் மெதுவாக மஞ்சரியின் கைப்பற்றி அசைக்க வேகமாகக் கண்விழித்த மஞ்சரி அவசரமாக பிரசன்னாவிடம் இருந்து தள்ளி அமர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தாள்.

என்னவோ செய்யக்கூடாத தவறினைச் செய்தவள் போல அவள் பார்த்த விதத்தில் பிரசன்னாவின் மனதில் ஒரு சிணுங்கல் தோன்றியது.

'புருசன் தோளில்தானடி சாஞ்சிருந்த? அதுக்கெதுக்கு இந்த முழி முழிக்கிற?' கோபத்துடன் தனக்குள் முணு முணுத்துக் கொண்டான் பிரசன்னா.

'அவதான் உனக்கு வேண்டாத பொண்டாட்டி ஆச்சே? அப்புறம் அவ எப்படிப் பார்த்தால் உனக்கென்ன?'

'எப்படிப் பார்த்தாலும் அவ என்னோட பொண்டாட் டியா ஆகிட்டாள்ள? அப்புறம் எங்களுக்குள் இதெல்லாம் சகஜமான ஒன்றாகத்தானே இருக்கணும்?'

'அப்படின்னா நீ அவளை முழு மனசோட பொண் டாட்டியா ஏத்துக்கிட்டயா? அதைத் தைரியமாக மஞ்சரி யிடம் உன்னால் ஒப்புக் கொள்ள முடியுமா? சஞ்சனாவை உன்னால அவ்வளவு சீக்கிரமாக மறந்துற முடியுமா?'

பிரசன்னாவின் மனம் இரண்டாக மாறி மாறி மாற்றிக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் திகைத்தான் பிரசன்னா.

## 28

"மாமா. இந்தப் பெட்டிகளை எல்லாம் எங்கே வைக்கச் சொல்லட்டும்?" நகைகள் அடங்கிய பெட்டிகளைக் காட்டிக் கேட்டான் சிவா.

தனக்குள் தோன்றியிருந்த கேள்விகளின் சிறைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த பிரசன்னா திடீரென சிவா கேட்ட கேள்வியில் திகைத்து நின்றான்.

சந்தாத்தை ஆதரவுடன் கைப்பற்றி யோகநாதன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றுவிட, மோகனாவோ வைசாலியுடன் இணைந்து நின்று வந்திருந்த உறவினப் பெண்களுடன் பேசி உபசரித்துக் கொண்டிருந்தாள்.

பெரியவர்கள் யாரிடத்திலும் கேட்க முடியாமல் திகைத்து நின்று சிவாவின் முகம் பார்த்த பிரசன்னாவின் நிலையை ஒரு நொடியில் புரிந்து கொண்ட மஞ்சரி வேகமாக எழுந்து கூட்டத்தினை விட்டு வெளிவந்து கணவனின் அருகில் வந்தாள்.

"இல்ல... சிவா... இந்தப் பெட்டியை எல்லாம் எங்க வைக்கலாம்னு கேட்டான். அதான்..." தயக்கத்துடன்



தடுமாறிய பிரசன்னாவை ஒரு நொடி நிமிர்ந்து பார்த்து விட்டு சிவாவின் கைகளில் இருந்த பெட்டிகளை தன் கைகளில் வாங்கிக் கொண்டாள் மஞ்சரி.

சிவாவினைத் தொடர்ந்து வருமாறு பார்வையிலேயே கூறிவிட்டு அருகில் இருந்த அறைக்குள் சென்று பெட்டிகளை வைத்துவிட்டு சிவாவை அங்கேயே நிற்கச் செய்துவிட்டு அறையில் இருந்து வெளிவந்த மஞ்சரி மெதுவாக வைசாலியின் அருகில் செல்வதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் பிரசன்னா.

"என்னடா மஞ்சரி? ஏதாச்சும் வேணுமா?" மருமகளின் கன்னத்தில் பெருமையுடன் தன் கைகளால் வருடியவாறு கேட்டாள் வைசாலி. அவளது அன்பில் நெகிழ்ந்த மனதுடன் அவளது கைப்பிடித்துக் கொண்டாள் மஞ்சரி.

"ஒன்றும் வேணாம் அத்தை. ஒரு நிமிசம் கொஞ்சம் வர்றீங்களா?" மஞ்சரி என்னதான் மெல்லிய குரலில் கூறினாலும், மற்றவர் பேச்சினை ஒட்டுக் கேட்பதற்காகவே வந்திருந்த ஒரு சிலர் இதனை கேட்டுவிட அவர்களது பார்வை பொறாமையுடன் இருவரையும் சூழ்ந்தது.

"பார்த்தியாடி கதையை! இப்பவே மாமியார்கிட்டே ரகசியம் பேசினால் எப்படி மஞ்சரி? எங்க கிட்டயும் கொஞ்சம் என்ன விசயம்னுதான் சொல்லேன்?" கேலியும் சிரிப்புமாக கேட்டவர்களுக்கு புன்சிரிப்பை மட்டுமே பதிலாகக் கொடுத்துவிட்டு வைசாலியின் கைப்பற்றி அறைக்குள் அழைத்துச் சென்று அறைக் கதவை மூடினாள் மஞ்சரி.

"என்னடா மஞ்சரி...?" புரியாமல் பார்த்த வைசாலி யிடம் நகைகள் அடங்கிய பெட்டிகளைக் கொடுத்தாள் மஞ்சரி.

"இதெல்லாம் அம்மா எனக்காகக் கொடுத்த நகைகள் அத்தை. உங்ககிட்டக் கொடுக்கத்தான் உங்களைக் கூப்பிட்டேன்" மஞ்சரி கூறியதைக் கேட்ட வைசாலி திகைத்து நின்று விட்டாள்.

"அடிக்கண்ணு! இதையெல்லாம் எதுக்காக என்கிட்ட கொடுக்கிற? விலைமதிப்பில்லாத உன்னை மட்டும் தான் இந்த வீட்டு மருமகளாகக் கொண்டு வரணும்னு நான் ஆசைப்பட்டேன்டா. அது போதும் செல்லம் எனக்கு... இதையெல்லாம் கொண்டு போய் பிரசன்னா வின் ரூமில்... சரிடா கண்ணு... உங்க ரூமில் இருந்த லாக்கரில் வைடா மஞ்சரி... போ..." கூறிய வைசாலியின் வார்த்தைகளைத் தலையசைத்து மறுத்தாள் மஞ்சரி.

"வேண்டாங்கத்தை. இதையெல்லாம் கொண்டு போய் பொதுவில் இருக்கிற லாக்கரில் வெச்சுருங்க. எனக்குத் தேவைப் படும்போது நான் உங்ககிட்டக் கேட்டு வாங்கிக்கிறேன்."

கண்களில் நீர் நிறைய மருமகளின் முகத்தினைத் தன் இரு கரங்களால் தாங்கிக் கொண்டாள் வைசாலி. புகுந்த வீட்டில் நுழைந்தவுடன் பீரோவின் சாவியைக் கைப் பற்றத் துடிக்கும் பெண்களின் நடுவில் தன்னுடைய ஐஸ்வரியத்தையும் மாமியாரின் வசம் ஒப்படைக்கும் மஞ்சரியின் ஒப்பற்ற குணத்தினை எண்ணிப் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவில்லை அவளால். பட்டம் மாளின் தீர்க்க தரிசனமான முடிவினை எண்ண[illegible] கூறிக் கொண்டாள் வைசாலி.



நடந்த அனைத்தையுமே ஒரு பார்வையாளரின் நிலையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பிரசன்னா வின் மனம் நிம்மதியால் நிறைந்தது. தன் அன்னையை தன் மனைவி சகல மரியாதைகளுடன் பார்த்துக் கொள் வாள் என்ற எண்ணமே பிரசன்னாவிற்கு நிறைவைக் கொடுத்தது. அந்த மன நிறைவுடன் திரும்பியவனின் பார்வை அவனுக்கு எதிரில் இருந்த தூணில் சாய்ந்து நின்று கொண்டு சோகமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்த சஞ்சனாவைக் கண்டவுடன் நிலைகுத்தி நின்று விட்டது.

மெதுவாக அவன் அருகில் வந்த சஞ்சனா தன் முகத்தில் இருந்த சோகத்தினை மேலும் அதிகரித்துக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நல்லா இருக்கீங்களா மாமா? கடைசியில் நீங்களும் சேர்ந்து எனக்குத் துரோகம் செஞ்சிட்டீங்கள்ள?"

"சஞ்சனா... நான்..."

"நீங்க ஒண்ணும் பேச வேண்டாம் மாமா. என்ன இருந்தாலும் நான் ஏழைவீட்டுப் பொண்ணுதான? அதான் கோடீஸ்வரி வந்ததும் என்னை மறந்துட்டீங்க..."

"என்னைப் போய் இப்படி..." அவனது வார்த்தைகள் காதில் வாங்காமல் அங்கிருந்து வேகமாகச் சென்று விட்ட சஞ்சனாவின் முதுகைத் திகைப்புடன் பார்த்தபடி நின்று விட்டான் பிரசன்னா.

"மாமா..." எவ்வளவு நேரம் அப்படியே நின்று இருந் தானோ அது பிரசன்னாவிற்கே தெரியாது.

அவன[illegible] பற்றிக் குலுக்கிய மெல்லிய கரத்தின் ஸ்பரிசத்[illegible]னுணர்வுக்கு மீண்டான் பிரசன்னா.

"மஞ்சரி!! நான் ... வந்து..." தடுமாறிய பிரசன்னாவை உறுதியான குரலில் தடுத்து நிறுத்தினாள் மஞ்சரி.

"தெரியும் மாமா... நானும் பார்த்தேன்..."

அவள் முகம் பார்க்க முடியாமல் தலைகுனிந்த பிரசன்னாவின் உள்ளத்தில் மறுபடியும் குழப்பம் தலைதூக்கத் தொடங்கியது. அதை அறிந்தவள்போல மஞ்சரியும் அதற்குமேல் அவனிடம் எதுவும் பேச முற்படவில்லை.

"அத்தை சாப்பிடக் கூப்பிட்டாங்க..."

"ம்ம்..."

திருமணம் முடிந்து முழுதாக இரண்டு நாட்கள் கூட முடியாத புத்தம் புது மனைவியின் முகம் பார்த்து ஆயிரம் கதைகள் பேச வேண்டியவன் அவளிடம் பேச எதுவுமே இல்லாத வெறுமையான மனதுடன் அவனைக் கடந்து செல்வதை துன்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் மஞ்சரி.

## 29

"என்னப்பா பிரசன்னா... கடைக்குக் கிளம்பிட்டியா?" ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்திருந்த யோகநாதன் கேட்க அவரது குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் மஞ்சரி.



"ஆமாம்ப்பா. ஏற்கனவே ஒரு வாரமாய் கடைப்பக்கமே போகாமல் இருந்துட்டேன். இனிமேலும் இப்படியே இருந்தால் சரிவராதுப்பா. அதான் கிளம்பிட்டேன்" தயக்கத்துடன் கூறிய பிரசன்னாவை ஏறிட்டுப் பார்த்தாள் பட்டம்மாள்.

"கண்டிப்பாக நீ கடைக்குப் போகத்தான் வேணும் ராசா. உடைமைக்காரன் இருந்து பார்த்தால்தான் தொழில் உருப்படியா நடக்கும். இங்கதான் நாங்க இத்தனை பேர் இருக்கோமே? நாங்க தாத்தாவைப் பார்த்துக்குவோம் கண்ணு. நீ தயங்காம போயிட்டு வா."

பாட்டியின் வார்த்தைகளைக் கேட்ட பிரசன்னா அனைவரையும் பார்த்து ஒரு லேசாக தலை ஆட்டிவிட்டு வேகமாகத் தன் காரை நோக்கிச் சென்றான்.

உறவினர் கூட்டம் அனைவரும் தத்தமது வீட்டிற்கு திரும்பிச் சென்றுவிட, மோகனாவும் சுந்தரமும் கூட முதல்நாளே தங்களது வீட்டுக்குக் கிளம்பிச் சென்றிருக்க, வெறுமையாகத் தெரிந்த வீட்டினைச் சுற்றித் தன் பார்வையைச் சுழற்றினாள் மஞ்சரி.

பிறந்தது முதல் அவளைப் பாராட்டிச் சீராட்டிய மனிதர்கள் அனைவரும் அப்போதும் அந்த வீடு முழுவதும் நிறைந்திருந்தாலும் தன் மனதில் இனம்புரியாத வெறுமை படர்வதை இயலாமையுடன் உணர்ந்தாள் மஞ்சரி.

பட்டம்மாள் தன்னிடம் தன் திருமணத்தைப் பற்றிக் கேட்டபோதே இவை அனைத்தையும் எதிர்பார்த்தே அதையெல்லாம் எதிர் கொண்டும் உறுதியான மனநிலையுடனேயே சம்மதித்திருந்தாள் மஞ்சரி. ஆனால்

நடைமுறை வாழ்க்கையில் அதே சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடும்போது அதனை தாங்க முடியாத வேதனையுடன் மனம் தவிப்பதை வியப்புடன் உணர்ந்து திகைத்தாள் அவள்.

மறுவீடு வந்த நாளன்று சஞ்சனா பேசிய வார்த்தைகளைக் கேட்டது முதலாகவே பிரசன்னாவின் முகம் குழப்ப மேகங்களால் சூழ்ந்தே இருப்பதைக் கண்ட மஞ்சரி முடிந்த அளவிற்கு அவனது மனநிலையைக் காயப்படுத்திய மனமில்லாதவளாக பிரசன்னாவை விட்டு விலகியே இருந்தாள்.

பகலில் பிரசன்னா அறையில் இருக்கும் சமயங்களில் படுக்கையறைக்குள் செல்வதைக்கூட மஞ்சரி தவிர்த்து வந்தாள். இரவில் அனைவரும் உறங்கச் சென்ற பிறகும் தாத்தா பாட்டியின் அறையில் ஏகாம்பரத்தைக் கவனித்துக் கொள்ளும் சாக்கில் வெகுநேரம் வரை இருந்துவிட்டு பிரசன்னா உறங்கியிருப்பான் என்று மனதிற்குள் தோன்றிய பிறகுதான் தங்களது தனி அறைக்குச் செல்வாள். பேரன் பேத்தி இருவரின் இடையில் நடக்கும் நாடகத்தை கண்டும் காணாதவள் போல இருந்து வந்தாள் பட்டம்மாள்.

பிரசன்னாவின் உள்ளம் எது உண்மையான அன்பு என்பதை வெகு விரைவில் உணர்ந்து கொண்டுவிடும் என்று உறுதியாக நம்பினாள் அவள். அப்படி அவள் உணர்ந்து கொண்ட பிறகே தன் பேத்தியின் உண்மையான மணவாழ்க்கை தொடங்கவேண்டும் என்றே பட்டம்மாள் உள்ளூர ஆசை கொண்டாள். அதனால் தன்னால் முடிந்த அளவிற்குக் கணவனிடம் கிடைக்காத



அன்பினை எண்ணி மஞ்சரி ஏக்கம் கொள்ளாத வகையில் அவளைத் தன் உயிரில் வைத்துப் பார்த்துக் கொண்டாள் பட்டம்மாள்.

"மாமா..." தன் காதில் விழுந்த குரலைக் கேட்டு மின்சாரத்தால் தாக்குண்டவனைப் போல பதறி நிமிர்ந்தான் பிரசன்னா.

யாரை எதிர்கொள்ளத் தயங்கி அவன் இத்தனை நாட்களாக வீட்டின் நான்கு சுவர்களுக்குள் தன்னைச் சிறை வைத்திருந்தானோ அவளை அந்த சஞ்சனாவை எதிர்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்து உள்ளத்தில் குற்ற உணர்ச்சியுடன் குறுகிப் போனான் பிரசன்னா.

"என்ன மாமா... என்னை வான்னு சொல்லக்கூட வாய்வராம அப்படியே சிலைமாதிரி உட்கார்ந்திருக்கீங்க? அந்த மஞ்சரி இந்த ஒரு வாரத்திலேயே உங்களை அவ்வளவு மயக்கி வெச்சிட்டாளா?" சஞ்சனாவின் பேச்சில் தெரிந்த குத்தல் பிரசன்னாவின் மனதைத் தைப்பதற்குப் பதிலாக அவமானத்தை உண்டாக்கியது.

அனைத்தையும் அறிந்திருந்தும் தன் மனைவியாக அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தும் தன் மனதினைக் காயப்படுத்தும் எந்தக் கேள்வியையும் கேட்காத மஞ்சரியை ஒரே நிமிடத்தில் சஞ்சனா மட்டமாகப் பேசிவிட்டதை எண்ணி உள்ளூரக் கொதிப்படைந்தான் பிரசன்னா.

ஆயினும் சஞ்சனா அவளுடைய ஏமாற்றத்தைத் தாங்க முடியாத துன்பத்தில் பேசுகிறாள் என்ற உணர்வினால் தன் கோபத்தினை மறைத்துக் கொண்டு சஞ்சனாவை ஏறிட்டுப் பார்த்தான் பிரசன்னா.

''நான் வான்னு சொல்லித்தான் இத்தனை நாட்களாய் இங்கே வந்தாயா சஞ்சனா?''

''நான் அப்போது பார்த்த மாமாவாக நீ இருந்திருந்தால் நான் ஏன் இப்படிக் கேட்கப் போறேன் மாமா? நீங்கதான் இப்பக் கோடீஸ்வர வீட்டு மாப்பிள்ளை ஆகிட்டீங்களே?''

''என்னைச் சித்ரவதை செய்யாதே சஞ்சனா. நான் முழு மனதாக இந்தக் கல்யாணத்தைப் பண்ணிக்கலேன்றது உனக்கு நல்லாத் தெரியும்தானே? அப்புறமும் ஏன் இப்படி என்னைக் குத்திக் கிழிக்கிற?''

''யார்? நானா உங்களைக் குத்திக் கிழிக்கிறேன்? நீங்கதான் என்னை, என்னோட வாழ்க்கையை, என்னோட அன்பை, ஆசையை, கனவுகளை எல்லாம் சிதறடிச்சுட்டீங்க'' முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பும் சஞ்சனாவை தேற்றும் வகையறியாதவனாக அமர்ந்திருந்தான் பிரசன்னா.

''சஞ்சனா ப்ளீஸ்... அழுகாத. நடந்தது நடந்துடுச்சு. இனி அதை நம்மாள மாத்த முடியாது. நீதான் என்னை...''

''உங்களை...? உங்களை மறந்துறச் சொல்றீங்களா மாமா? நான் உயிரோட இருக்கிறவரைக்கும் அது நடக்காது மாமா...''

''இப்படிச் சொன்னால் எப்படி சஞ்சனா?''

''நான் அப்படித்தான் சொல்வேன் மாமா? நீங்க உங்க முழு மனசோட அவளைக் கல்யாணம் பண்ணிக்கலேன்றது உண்மைதானே?''

பதில் கூறாமல் தலை குனிந்தான் பிரசன்னா.



''அப்படின்னா அவளை அவங்க வீட்டுக்கு அனுப்பிட்டு என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க மாமா. இப்ப நமக்கு இருக்கிற ஒரே வழி இதுதான்...'' மிகவும் நிதானமாக சஞ்சனா கூறியதைக் கேட்டும் பதட்டத்துடன் தலைநிமிர்ந்தான் பிரசன்னா.

''என்ன பேசுறேன்னு தெரிஞ்சுதான் பேசுறியா நீ? நாங்க இந்தக் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டதே தாத்தாவோட கடைசி ஆசையாக இதைக் கேட்டதாலதான் சஞ்சனா. அந்தக் கல்யாணத்தைத் தூக்கி எறியச் சொல்றியே?''

''நான் உங்க தாத்தா... அந்தக் கூறு கெட்ட கிழவனையே தூக்கி எறியச் சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்க என்னடான்னா கடைசி ஆசை அது இதுன்னு...''

''சஞ்சனா...'' சஞ்சனா தன் வார்த்தைகளை முடிக்கும் முன்பாகத் தன் கோபத்தினை அடக்கிக் கொள்ள முடியாதவனாக கத்திக் கொண்டு எழுந்து நின்ற பிரசன்னாவை அலட்சியமாகப் பார்த்தாள் அவள்.

''இப்ப எதுக்கு இப்படிக் கத்தறீங்க? நான் என் மனதிற்குப் பட்டதைத்தானே சொன்னேன்?''

''எதுடி உன் மனதிற்குப் படுவது? என் தாத்தாவும் அவரோட ஆசையும் உனக்கு அத்தனை அலட்சியமாகப் போய் விட்டதா?''

''அப்புறம்? நான் வேற எப்படிப் பேசுவேன்னு எதிர்பார்த்தீங்க நீங்க? முதல்ல உங்ககிட்ட பேசினதைப் போல நடிச்சுக்கிட்டு இருக்க வேண்டிய அவசியம் இப்ப எனக்கில்லை மாமா? நான் இப்படித்தான். என் மனதிற்கு என்ன தோணுதோ அப்படித்தான் பேசுவேன். என்னை

நம்ப வெச்சக் கழுத்தை அறுத்திட்டீங்களே? அதனால நீங்க அதைக் கேட்டுத்தான் ஆகணும்?'' அழுத்தம் திருத்தமாகப் பேசிக் கொண்டே போன சஞ்சனாவை குமுறும் இதயத்துடன் பார்த்துக் கொண்டே இருந்தான் பிரசன்னா.

தன் தோளில் சாய்ந்து கொண்டு கொஞ்சிக்கொஞ்சி பேசிய சஞ்சனாவா இது என்று பிரசன்னாவிற்கே வியப்பாக இருந்தது. இவ்வளவு சுயநலத்தையும் அலட்சியத்தையும் தன் மனதில் மறைத்துக் கொண்டா தன்னுடன் இவள் பழகினாள் என்பதை எண்ணிப் பார்க்கவே அருவெறுப்பாக இருந்தது அவனுக்கு.

''என்னமோ கடைசி ஆசை... கடைசி ஆசைன்னு சொல்றீங்களே... இப்ப உங்க தாத்தா என்ன செத்தா போயிட்டார். இன்னும் சாகாம உயிரோடதான குத்துக் கல்லாட்டம் இருக்கார். இதற்குமேல அவர் இன்னும் ஆயிரம் ஆசைகளைச் சொல்வார். அதனால இதுதான் அவரோட கடைசி ஆசைன்னு புலம்பிக்கிட்டு இருக்காம, மேல நடக்க வேண்டியதைப் பாருங்க மாமா...''

பிரசன்னாவின் பொறுமை எல்லை மீறிக் கொண்டு இருப்பதை அறியாதவளாக, தன் சுயரூபத்தை அவன் தெரிந்துகொண்டு விட்டதை உணராமல் பேசிக் கொண்டிருந்த சஞ்சனா தன் முன் கண்கள் சிவக்க வந்து நின்ற பிரசன்னாவைப் பார்த்து வாயடைத்துப் போய் பயத்துடன் எழுந்து நின்றாள்.

''மரியாதையா இந்த இடத்தை விட்டுப் போயிடு. இன்னும் ஒரு வார்த்தை நீ பேசினேன்னா நான் கொலைகாரனா மாறிடுவேன்...''



''மாமா... நான்...''

''இன்னொரு தடவை என்னை இப்படிக் கூப்பிடாதே. என்... இனி என் முகத்தில்கூட முழிக்காதே. போயிடு...''

''அப்ப என் கதி...?''

''யார் கிட்ட வந்து உன் கதியைப் பத்திக் கேட்கிற? நானா உன்னை என்கூட பழகச்சொல்லிக் கூப்பிட்டேன். இன்னும் சொல்லப்போனா உன்கூட பழகச் சொல்லி உன் அப்பனும் நீயும் தான் என்னைத் தூண்டிவிட்டீங்க. நான் எல்லை மீறியிருந்தால் கூட நீ அதற்கு மறுப்புச் சொல்லியிருக்க மாட்டாய்தானே? அப்படி இருந்த உனக்குக் கதியை சொல்ல நான் யார்? போய் என்னை மாதிரி வேற எவனாவது இளிச்சவாயனாகப் பார்த்து மயக்கி உனக்கான கதி என்னன்றதை நீயே பார்த்துக்க. முதல்ல இப்ப இந்த இடத்தைக் காலி பண்ணு.''

பிரசன்னாவின் கோபத்தின் முழு பரிமாணத்தையும் முதன் முறையாக கண்ட பயத்துடன் அங்கிருந்து வேகமாக வெளியேறிவிட்டாள் சஞ்சனா. அவள் சென்ற திசையைக் கூட பார்க்க விரும்பாதவனைப் போல தலையைப் பிடித்துக்கொண்டு சேரில் சரிந்தான் பிரசன்னா.

# 30

மாலை நேரத்துத் தென்றல் உடலை வருட சேலையின் முந்தானை காற்றில் பறப்பதைக் கட்டுக்குள்

172



கொண்டு வர முடியாமல் தவித்தபடி அதை இடுப்பு இடையில் சொருகிக் கொண்ட மஞ்சரி தன் அருகில் கீழே இருந்த தண்ணீர் பைப்பினை மறுபடியும் குனிந்து கையில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு செடிக்கும் அதன் அடிப்பாகத்தில் இருந்து நுனிவரை நனையும்படியாக தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். பேத்தியின் செயலின் நேர்த்தியையும், குடும்பப் பாங்கான அழகினையும் ரசித்துக் கொண்டே வீட்டின் முன்புறம் இருந்த பெரிய வராண்டாவின் இருந்த சேரில் அமர்ந்திருந்தாள் பாட்டி.

பட்டம்மாளின் காலடியில் இருந்த படியில் அமர்ந்திருந்த வைசாலி தன் முன் இருந்த தட்டில் நிறைந்து இருந்த ஜாதிமல்லியின் மொட்டுக்களைக் கட்டி சரமாக்கிக் கொண்டிருந்தாள். பட்டம்மாள் எதையாவது கூறுவதையும் அதை புன்சிரிப்புடன் ஆமோதித்துக் கொண்டே வைசாலி பதில் கூறும் பாங்கினையும் மனதிற்குள் ரசித்துக்கொண்டே தன் வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள் மஞ்சரி.

காம்பவுண்டிற்குள் நுழைந்த காரினைக் கண்ட மூவரின் மனதிலும் மூன்றுவிதமான சிந்தனை தோன்ற அந்த சிந்தனைக்குச் சொந்தமான பிரசன்னாவோ அங்கிருந்த யாரையும் கவனத்திலேயே கொள்ளாதவனாக தனக்குள் மூழ்கியவாறே காரில் இருந்து இறங்கி அவர்களைக் கடந்து வீட்டிற்குள் சென்றான்.

''வைசாலி... இவன் ஏன் இப்படி மந்திரிச்சு விட்ட ஆடு மாதிரி போயிக்கிட்டு இருக்கான்?''



''அதுதான் எனக்கும் புரியலை அத்தை. பிரசன்னா எப்பவும் இப்படி இருந்ததில்லையே அத்தை! நாம இருக்கிறதைக் கூட கவனிக்காதவன் போல போறானே?'' மாமியாரின் குரலில் இருந்த கவலைக்குக் குறையாத கவலையுடன் பதில் கூறினாள் வைசாலி.

பிரசன்னாவின் முகத்தைப் பார்த்தே ஏதோ ஒரு விரும்பத்தகாத ஒன்று நடந்திருப்பதை யூகித்துக் கொண்ட மஞ்சரி தன் கையில் இருந்த பைப்பினைத் தோட்டக்காரனிடம் கொடுத்துவிட்டு அவசரமாக அவர்களிடம் வந்து நின்றாள்.

''ஒருவாரம் கழிச்சு இன்னிக்குத்தான கடைக்குப் போய் இருக்காங்கத்தை? அதனால ஒர்க் கொஞ்சம் அதிகமாக இருந்திருக்கும். இதைப்போய் பெரிசாப் பேசிக்கிட்டு...'' மாமியார், பாட்டி இருவருக்கும் பொதுவாகக் கூறிவிட்டு வேகமாக பிரசன்னாவைத் தொடர்ந்த மஞ்சரியை புன்சிரிப்புடன் பார்த்துவிட்டு பட்டம்மாளும் வைசாலியும் தங்களது வேலையில கவனமாகிவிட, வீட்டிற்குள் நுழைந்த மஞ்சரி பிரசன்னா சோர்வுடன் தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்திருப்பதை இரக்கத்துடன் பார்த்தாள். அவள் வந்ததைக் கூட அறியாதவனாக குழம்பிய மனதுடன் அமர்ந்திருந்தான் பிரசன்னா.

காபியின் மணமும், பலகாரத்தின் வாசனையும் மூக்கைத் துளைக்க மெதுவாக கண் திறந்தவனின் முன்பாக தன் கையில் இருந்த டிரேயை வைத்துவிட்டு அவனுக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்த மஞ்சரியை அமைதியான பார்வையால் அளவெடுத்தான் பிரசன்னா.

மாலை வெயிலின் பொன்நிறம் முழுவதையும் தன்னுள் உள்வாங்கிக் கொண்டவளைப் போல பொன் போல ஜொலிக்கும் உடலழகுடன், அகன்ற நீண்ட விழிகளில் குறைவில்லாத அன்பும் கருணையுமாக தன்னைப் பார்த்துப் புன்னகைத்த மஞ்சரியைப் பார்க்கும் பொழுது தன் மனதின் பாரம் படிப்படியாக குறைவதைப் போல இருந்தது பிரசன்னாவிற்கு.

மஞ்சரியின் இடை தாண்டி நீண்ட பின்னலில் வைசாலி நெருக்கமாகக் கட்டி வைத்துவிட்டிருந்த ஜாதிமல்லியின் மணம் இருவரையும் மென்மையாக சூழ்ந்து அந்த இடத்தையே அழகானதாக மாற்றிக் கொண்டிருந்தது. தன்னுடைய வீடே இதற்கு முன் இத்தனை அழகாகத் தனக்குத் தோன்றியது இல்லை என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் பிரசன்னா.

''வெறும் காபி மட்டும் போதும் மஞ்சரி. பொதுவாக நான் ஈவ்னிங்கில் டிபன் எதுவும் சாப்பிட மாட்டேன்...'' வெகுநாட்களுக்குப் பிறகு பிரசன்னா இயல்பாக பேசியதில் உள்ளூர நிம்மதியாய் உணர்ந்தாள் மஞ்சரி.

''இருக்கட்டும் மாமா. நீங்க இன்னிக்கு மதியம் எதுவும் சாப்பிட்டு இருக்க மாட்டீங்கன்னு நினைக்கிறேன். அதான் தலைவலி வந்திருக்கு. ஏதாச்சும் கொஞ்சமாக கொறிச்சுட்டு சூடாக காபி குடிங்க. அப்பத்தான் கொஞ்சமாவது ரிலீப் கிடைக்கும்'' இதமான குரலில் கூறிக் கொண்டே மஞ்சரி நீட்டிய டிபன் தட்டினை மறுக்காமல் வாங்கிக் கொண்ட பிரசன்னா ஒரு நொடியில் அதைக் காலி செய்வதை இரக்கத்துடன் பார்த்தாள் மஞ்சரி.

டிபனை உண்டு முடித்துவிட்டு மஞ்சரி கொடுத்த காபியையும் குடித்துமுடித்த பின்னர் தனக்குள் ஒரு



பலம் தோன்றியதை வியப்புடன் உணர்ந்தான் பிரசன்னா.

''தேங்க்ஸ் மஞ்சரி. எனக்கு இத்தனை பசி இருந்தது எனக்கே தெரியலை. தேங்க்ஸ் அகெய்ன்...''

''ச்சு... மாமா. இது என் டியூட்டி மாமா. இதுக்குப் போய் பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு...'' பிரசன்னாவிடம் பேசிக்கொண்டே சமையலறையை நோக்கி மஞ்சரி பார்க்க அவளது பார்வைக்காகவே காத்திருப்பவளைப் போல வேலைக்காரி அஞ்சலை வேகமாக வந்து காலித் தட்டினையும் டிரேயையும் எடுத்துக் கொண்டு சென்றாள்.

ஒரு மகாராணியின் நிமிர்வுடன் கண்ணசைவில் மற்றவர்களை கட்டுப்படுத்தும் மஞ்சரியை வியப்புடன் பார்த்தான் பிரசன்னா.

இந்த ஒரு வார காலத்திலும், ஒவ்வொரு நாளும் மஞ்சரி காட்டிய ஒவ்வொரு பரிமாணத்தினையும் பிரசன்னாவால் மனதிற்குள் வியக்காமல் இருக்க முடியவில்லை.

வீட்டின் சமையல் மெதுவாக இருந்தாலும், வெளியில் யோகநாதன் செய்துவந்த பிஸினெஸ் கணக்குகளை சரிபார்த்து வைப்பதாக இருந்தாலும், ஏகாம்பரத்தின் உடல்நிலையை கவனிப்பதற்காக வீட்டுடன் ஒரு நர்சை நியமித்து அவளையும் தன் கண்காணிப்பில் வைத்திருப்பதாக இருந்தாலும் அனைத்து வேலைகளையும் நுட்பமான அறிவுடன் அவள் செய்து முடிக்கும் நேர்த்தி பிரசன்னாவை மிகவும் வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

மஞ்சரி வந்த பிறகு யோகநாதனும் கூட தன் மில்லின் கணக்கு வழக்குகளை கணபதியிடம் ஒப் படைப்பதை நிறுத்திவிட்டு மஞ்சரியிடம் அனைத் தையும் ஒப்படைத்து விட்டார். அவளும் தன் வேலையைக் கவனத்தில் கொண்டு செய்து முடித்து, செலவுகளை முடிந்த அளவிற்குக் குறைத்து அதன் மூலமாக லாபத் தினை அதிகரிக்கச் செய்திருந்தாள். ஒரே வாரத்தில் தன் மருமகள் லாபத்தினை ஓரளவிற்குக் கூட்டி இருந்ததில் யோகநாதனுக்கு சொல்லமுடியாத பெருமை.

''என் மருமகள் நம்ம வீட்டுக்கு வந்திருக்கும் மகாலட்சுமி வைசாலி. நாம ஏதோ ஒரு ஜென்மத்தில் புண்ணியம் பண்ணியிருக்கோம். அதனாலதான் இப்படி ஒரு புண்ணியவதி நமக்குக் கிடைச்சிருக்கா'' யோக நாதன் பெருமையுடன் கூறியது உண்மைதானோ என்று எண்ணிக் கொண்டான் பிரசன்னா.

இரவு உணவினை முடித்துக் கொண்டு எப்பொழுதும் போல தாத்தா பாட்டியுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு வெகுநேரம் சென்றபிறகு தன் அறைக்குள் நுழைந்து மெதுவாகக் கதவடைத்தாள் மஞ்சரி. கட்டிலில் கண்மூடி சீரான சுவாசத்துடன் படுத்திருந்த பிரசன்னாவின் உறக்கத்தைக் கலைக்காத மெல்லிய காலடி ஓசையுடன் நைட்டியை எடுத்துக் கொண்டு குளியல் அறைக்குள் சென்று நைட்டியுடன் வெளிவந்த மஞ்சரியை உறங் காமல் கண்மூடி படுத்திருந்த பிரசன்னா அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மஞ்சரியின் தங்க நிற அழகை மேலும் மெருகூட்டிக் காட்டுவதைப்போன்ற அரக்குச் சிவப்பு நிற நைட்டியும்,



தலையில் ஜாதிமல்லிச் சரமும், கழுத்தில் பிரசன்னா கட்டிய புத்தம்புது மஞ்சள் கயிறுமாக எவ்வித அலங் காரமும் இல்லாமலேயே தேவதையைப் போல ஜொலித்துக் கொண்டிருந்த மஞ்சரியைப் பார்க்கும் போது பிரசன்னாவின் ஆண்மை முதன் முறையாக தன் கட்டுப்பாட்டை உடைக்க முயல்வதை விருப்பத்துடன் கண்மூடி வரவேற்றான் பிரசன்னா. அவன் உறங்குவதாக எண்ணி மெதுவாக கட்டிலின் மறுமுனையில் படுத்த மஞ்சரியை இழுத்து அணைத்து அவளை தன்னுள் புதைத்துக் கொள்ள பிரசன்னாவின் மனம் ஏங்கியது. அவளை ஆண்டு முடித்துவிட அவனது ஆண்மை தவித்தது.

ஆனாலும் ஏதோ ஒரு மெல்லிய தடுமாற்றம் தன் ஆசையை அணைபோட வைப்பதை உணர்ந்த பிர சன்னா ஏமாற்றம் தாங்காதவனாக மஞ்சரியைத் திரும்பிப் பார்த்தான். நாள் முழுவதும் ஓடியாடிய களைப்புடன் படுத்தவுடன் அமர்ந்து உறங்கிவிட்ட மஞ்சரியின் களைத்த தோற்றம் பிரசன்னாவின் உள்ளத்தில் அன் பினைத் தோற்றுவித்தது.

அவன் மெதுவாக நகர்ந்து மஞ்சரியின் அருகில் சென்று தன் ஒரு கையால் அவளை அணைத்துக் கொண்டான். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மஞ்சரி அவனது அணைப்பை உணராதவளாக நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்க அவளை அணைத்த நிலையிலேயே பிரசன்னாவும் உறங்க முயன்று கொண்டிருந்த நேரத்தில்தான் அது நிகழ்ந்தது.

உறக்கத்தில் இருந்த மஞ்சரி மெதுவாகத் திரும்பிப் படுத்து தன் கையை பிரசன்னாவின் மீது போட்டு அவன்

மார்பில் முகம் புதைத்து உறங்கிவிட ஒரு நொடி இன்ப அதிர்ச்சியில் உறைந்துவிட்ட பிரசன்னா தாளாத தாபத்துடன் மஞ்சரியைத் தனக்குள் புதைத்துக் கொண்டு அவள் தலையில் தன் உதடு பதித்து முத்தமிட்டு அப்படியே முகம் புதைத்துக் கொண்டான்.

அதுவரை மனதில் இருந்த குழப்பங்களும் சஞ்சலங்களும் அவன் மனதில் பெருகிய அன்பின் அலைகளால் அடித்துச் செல்லப்பட நிர்மலமான நிம்மதியான மனத்துடன் வெகு நாட்களுக்குப் பிறகு நிச்சலனமாக உறங்கினான் பிரசன்னா. அவர்கள் இருவரையும் தாலாட்டிய நித்திரா தேவி மெல்லிய புன்னகையுடன் அவர்கள் இருவரையும் கடந்து சென்றாள்.



## 31

“என் சாமி... நான் என்ன செய்வேன்?” ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அனைவரையும் உலுக்கி எழுப்பியது பட்டம்மாளின் கதறல்.

பதட்டத்துடன் எழுந்த பிரசன்னா வேகமாகப் படியிறங்க பட்டம்மாளின் அறையை நோக்கி ஓட அவனைத் தொடர்ந்து ஓடினாள் மஞ்சரி.

தரையில் படுக்கவைக்கப்பட்டு இருந்த தன் அன்புக் கணவனின் தலையைத் தன் மடியில் தாங்கியிருந்த



பட்டம்மாள் அவரது முகத்தோடு தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறிக் கொண்டிருந்தாள்.

அவளைத் தேற்றவும் முடியாமல் தனது துக்கத்தை அடக்கவும் முடியாமல் குமுறிக் கொண்டிருந்த வைசாலி மஞ்சரியைப் பார்த்தவுடன் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொண்டு கதற வைசாலியின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி நிலைகுத்திய பார்வையுடன் தாத்தாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றிருந்த மஞ்சரியின் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது.

தன் வாழ்க்கையையே தன் தாத்தாவின் ஒரு சொல்லுக்காக அர்ப்பணித்த மஞ்சரி ஏகாம்பரத்தின் மீது கொண்டு இருந்த அன்பு பிரசன்னாவிற்கு நன்றாகத் தெரியும். மஞ்சரிக்கு இது எத்தகைய பேரிழப்பு என்பதை உணர்ந்த அவனது கை மெதுவாக மஞ்சரியின் தோள்மீது படர்ந்து அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டது.

திக்பிரமையுடன் சிலையாக நின்றிருந்த மஞ்சரி பிரசன்னாவின் அணைப்பில் தன் உணர்வுக்கு வந்தவளாக அவன் தோளில் சாய்ந்து கதறித் தீர்த்தாள். யார் யாரை ஆறுதல் படுத்துவது, யார் யாரைத் தேற்றுவது என்று புரியாத சூழ்நிலையுடன் அனைவரும் கதறிக் கொண்டிருக்க தன் துக்கத்தை கட்டுப்படுத்திய உறுதியுடன் தலை நிமிர்ந்தாள் மஞ்சரி. ஏகாம்பரத்தின் காலில் தலை வைத்துக் கதறிக் கொண்டிருந்தார் யோகநாதன். தன் உயிரே போய்விட்ட துக்கத்தில் துடித்துக் கொண்டிருந்தாள் பட்டம்மாள். எதுவும் செய்வதறியாத துயரத்துடன் அரற்றிக்கொண்டு இருந்தாள் வைசாலி.

மணிக்கணக்காக கதறித் தீர்த்துக் கொண்டு இருந்தாலும் வைருடைய துக்கமும் குறையாமல் மேலும் மேலும் கூடிக் கொண்டே இருந்தது. தன்னைச் சுற்றி இருந்த அனைவரின் நிலையையும் உணர்ந்துகொண்ட மஞ்சரி உறுதியுடன் எழுந்து பிரசன்னாவின் கைப்பற்றி அறையில் இருந்து வெளியே அழைத்து வந்தாள்.

கையைப் பிசைந்துகொண்டு துயரத்துடன் நின்று கொண்டிருந்த வேலையாட்களில் முதியவரான இருவரை அழைத்து சொம்பரத்தின் உடலை சுத்தம் செய்து நாற்காலியில் அமரச் செய்ய வைத்தாள். அருகிலேயே பட்டம்மாளை அமரச் செய்துவிட்டு மீண்டும் பிரசன்னாவின் அருகில் வந்தாள். எதுவும் செய்யத் தெரியாத குழந்தை போல அவனைப் பார்த்த பிரசன்னாவிடம் போன் நம்பர்களைக் கொடுத்து அனைவருக்கும் தகவல் கொடுக்கச் சொல்லிவிட்டு மீண்டும் மஞ்சரி வைசாலியின் அருகில் சென்று அமர்ந்தாள் மஞ்சரி.

மெல்லிய குரலில் மஞ்சரி கூறியதைக் கேட்ட வைசாலி துக்கத்தை அடக்கிக் கொண்டு உறுதியுடன் எழுந்தாள். அடுத்தடுத்து அவளது உத்தரவைக் கேட்டு பம்பரமாகச் சுழன்ற வேலையாட்கள் அனைவரின் ஒத்துழைப்பைக் கண்டு வைசாலியே மனதுக்குள் வியந்து போனாள்.

மாமனார் இறந்த செய்தியைக் கேட்ட சுந்தரம் மனைவி மற்றும் மகனுடன் விடிவதற்குள் கன்னூர் வந்து விட்டார். காரியத்தை எடுத்துச் செய்யும் மனஉறுதியை இழந்து நின்ற மைத்துனர் மற்றும் மருமகனின்



நிலையை உணர்ந்து கொண்ட சுந்தரம் அடுத்த நொடி முதலாக நடக்க வேண்டிய அனைத்தையும் சிறப்பாகச் செய்து முடிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். வீட்டிற்குள் நுழைந்தது முதல் தந்தையின் பிரிவைத் தாங்க முடியாமல் அன்னையின் மடியினை அடைக்கலம் அடைந்திருந்த மனைவியினைத் தேற்றும் முயற்சியினைக் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை அவர்.

தந்தை மற்றும் தம்பியின் வரவிற்குப் பின்னர் சிறிதளவு நிம்மதியடைந்திருந்த மஞ்சரி பிரசன்னாவைப் பார்வையில் அழைத்தாள். ஒன்றும் புரியாமல் மனைவியினைத் தொடர்ந்த பிரசன்னா அடுத்து மஞ்சரி கூறிய வார்த்தைகளைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவளது வார்த்தைகளைக் கேட்டவுடன் அதுவரை இருந்த சஞ்சலங்கள் அனைத்தையும் மறந்து இனி ஏழு ஜென்மங்களிலும் மஞ்சரியே தனக்கு மனைவியாக வரவேண்டும் என மனதார ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டான் அவன்.

“மஞ்சரி...!!”

“ஆமாங்க, நான்தான் சொல்றேன். தாத்தா இந்த ஊரே மெச்சுற மாதிரி வாழ்ந்தவர். அவரது இறுதிச் சடங்கிற்கு செலவழிக்கும் ஒரு பைசா கூட நம்ம செலவு பண்ணினதாகத்தான் இருக்கணும். அதனால அப்பாவிடம் இந்தப் பணத்தைக் கொண்டு போய் கொடுங்க” லாக்கரில் இருந்து எடுத்திருந்த ரூபாய் நோட்டுக் கட்டுக்களை பிரசன்னாவிடம் நீட்டினாள் மஞ்சரி.

"உங்கப்பா தவறா நினைச்சுட்டுப் போறார் மஞ்சரி. கொஞ்ச நேரம் கழிச்சுக் கொடுக்கலாம்..." [illegible] கரிய கண்களை உறுதியுடன் பார்த்தாள் மஞ்சரி.

"இல்லைங்க. அது சரியாகாது. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதானே? அதனால நான் சொல்கிறபடி செய்ங்க..." தீர்மானமாகக் கூறிய மஞ்சரியை தயக்கம் மாறாமல் பார்த்தான் பிரசன்னா.

"நீ வேணும்னா கொண்டுபோய்க் கொடுடன்..."

"அதுவும் சரியாகாது மாமா. நீங்க உங்க கையால கொடுப்பதுதான் உங்களுக்கு மதிப்பு..."

கண்களை அழுத்தும் கொண்டு தன் அருகில் வந்த மஞ்சரியைப் புரியாமல் பார்த்த சுந்தரத்தின் கைகளில் நோட்டுக் கட்டுக்களை வைத்தான் பிரசன்னா.

"என்ன மாப்பிள்ளை இதெல்லாம்? அப்ப என்னை நீங்க அன்னியனா நினைச்சுட்டீங்களா? உன்ள உரிமை விட்டிருக்கிற மனுஷன் எனக்கும் அப்பனைப் போல வந்தான்..." கோபத்துடன் பணத்தினை பிரசன்னாவிடம் நீட்டிய சுந்தரத்தின் கைகளைப் பற்றித் தடுத்தாள் மஞ்சரி.

"இல்லப்பா. இவர் செய்வதுதான் சரி. இந்த செலவை எல்லாம் செய்ய வேண்டிய கடமை எங்களுடையது மட்டும் தான். நீங்க இதற்கு உதவியாக இருப்பதே எங்களுக்கு மிகப்பெரிய பலம்ப்பா. அதனால அவரைத் தடுக்காதீங்க..."

"அதில்லடா... நாம எல்லோரும்..."



[illegible]

"ரொம்ப பெரிய மனுஷியா ஆயிட்டா. இனிமேல் எனக்கு எந்தக் கவலையும் இல்லை."

[illegible]

[illegible]

[illegible]



32

முடியாதவனாக ஜன்னலின் மேல் சாய்ந்து கொண்டான் பிரசன்னா.

ஏகாம்பரம் இருந்து பதினாறாம் நாள் காரியம் கூட முடிந்துவிட்ட நிலையிலும், நெருங்கிய சொந்தங்கள் பட்டம்மாளிற்கு ஆறுதலாக அங்கேயே இன்னும் தங்கியிருக்க மஞ்சரிக்கும், வேலைக்காரர்களுக்கும் வீட்டு வேலைகளைச் செய்து முடிப்பதற்கே பொழுது சரியாக இருந்தது.

காலை விடிவதற்கு முன்பாக நைட்டியுடன் கீழே இறங்கிச் சென்றுவிடும் மஞ்சரி அனைவருக்கும் காபி கலந்து கொடுக்க வைத்துவிட்டு, காலை டிபன் செய்வதற்கான பொருள்களை, சமையல் ஆட்களிடம் எடுத்துக் கொடுத்து விட்டு கையில் காபிக் கோப்பையுடன் பிரசன்னாவைத் தேடி வருவாள்.

அவள் வரும்வரை ஜன்னலின் வழியாக மனைவியின் அழகை ரசித்துக் கொண்டிருக்கும் பிரசன்னா அவள் மாடிப்படி நோக்கி வரும்போதே அதனைப் பூட்டிவிட்டு ஒன்றும் அறியாதவன் போல கட்டிலில் படுத்து விடுவான்.

மஞ்சரி கொடுத்த காபியை உறிஞ்சிக் கொண்டே அமர்ந்து மஞ்சரி குளித்து உடைமாற்றி வரும்வரை ஒரு முனிவரின் தவத்தினைப் போல உடைமாற்றும் அறையைப் பார்த்துக் கொண்டிருப்பவன், மஞ்சரி சேலையுடன் வரும் அழகை ரசித்துவிட்டுத்தான் குளிப்பதற்கே செல்வான். இத்தனைக்கும் இருவரும் வாய்திறந்து அனாவசியமாக ஒரு வார்த்தைகூட பேசிக் கொள்வதில்லை.



எப்பொழுதும் போல பிரசன்னா உறங்கியிருப்பான் என்று தோன்றியபிறகே அறைக்குள் வரும் மஞ்சரி அயர்ந்து உறங்கும் வரை விழித்திருந்துவிட்டு, அவளை இழுத்துத் தன் மார்பில் புதைத்துக் கொண்ட பிறகுதான் உறங்கத் தொடங்குவான் பிரசன்னா.

கூடலில்லாத கூடலைப் போல, மஞ்சரியின் உடலில் இருந்து வரும் நறுமணத்தை நுகர்ந்து கொண்டே, அவளை அணைத்துக் கொண்டு கிறக்கத்துடன் உறங்கி விடும் வழக்கமே பழகிப் போனது பிரசன்னாவிற்கு.

தன் மனதில் மஞ்சரி இருப்பதை அவளுக்கு உணர்த்தி விடத் துடித்த பிரசன்னாவிற்கு அதற்கான வாய்ப்பையே கொடுக்க மறுப்பவளைப் போல நடந்து கொண்ட மஞ்சரியின் நடவடிக்கைகள் உள்ளூர பிரசன்னாவிற்கு ஏமாற்றத்தை அளித்தது.

வழக்கம் போல கையில் காபிக் கோப்பையுடன் மாடிப்படிகளை நோக்கி வரும் மஞ்சரியைக் கண்டு விட்டு ஜன்னலைப் பூட்டிவிட்டு வந்து கட்டிலில் அமர்ந்தான் பிரசன்னா.

அறைக்குள் நுழைந்த மஞ்சரியின் கண்கள் பிரசன்னாவை ஆவலுடன் பார்த்தாலும் அவள் ஒன்றும் கூறாமல் காபிக் கோப்பையை நீட்டினாள். காபிக் கோப்பையைத் தன் கையில் கொடுத்தும் நகராமல் தன்முன் நின்றிருந்த மஞ்சரியை வியப்புடன் பார்த்தான் பிரசன்னா.

"அம்மாவும் அப்பாவும் இன்னிக்கு கோயம்பத்தூர் கிளம்புறாங்க..."

188

"இப்ப எதுக்காக இந்தக் கேள்வின்னு நான் தெரிஞ்சுக்கலாமா மாமா?"

"நான் இந்தக் கேள்வியை அன்னிக்கே உன்கிட்டக் கேட்டேன் மஞ்சரி. ஆனால் நீ அன்னிக்கு இதற்குப் பதில் சொல்லலை. இன்னிக்குக் கேட்கிறேன் பதில் சொல்லு..."

"என்னிக்குமே உங்களுக்குப் பதில் சொல்லும் கடமை எனக்கு இருக்கு மாமா. எனக்குத் தாலி கட்டியவராக இல்லாமல் போனாலும் உங்களுக்குப் பதில் சொல்லும் கடமை எனக்கு இருக்கு..."

"அப்ப சொல்லு" குரலில் பரபரப்பை அடக்க முடியாமல் கேட்ட பிரசன்னாவை நிதானமாக ஏறிட்டாள் மஞ்சரி.

"ஆனால் மாமா... எந்தக் கேள்வியாக இருந்தாலும் நீங்க உங்க சுய புத்தியினால் என்னிடம் கேட்க வேண்டும். அடுத்தவர்களின் பேச்சைக் கேட்டு என்னை சந்தேகப்படும் உரிமை உங்களுக்கு யார் கொடுத்தது?"

"மஞ்சரி..."

"ஆமாம் மாமா. அன்னிக்கு சஞ்சனா உங்களோட மனதில் போட்ட விஷ விதை இன்னிக்கு மரமாக வளர்ந்து கிளைபரப்பி நிக்குது. சரிதானே மாமா?"

"....."

"நான் உங்களோட இந்தக் கேள்விக்கு இப்ப பதில் சொல்ல முடியாது மாமா. ஆனால் எனக்கும் உங்களிடம் கேட்க ஒரு கேள்வி இருக்கு மாமா. ஆனால் நான் அதை என்னோட சுய புத்தியினால் கேட்கிறேன்?"



"....."

"நான் உங்களுக்கு யார் மாமா? அப்புறம் அந்த சஞ்சனா உங்களுக்கு யாரு?"

"அதுதான் உனக்கே தெரியுமே? இது என்ன கேள்வி?" சஞ்சனாவின் பேரைக் கேட்ட எரிச்சலால் முகம் சுளித்துக் கேட்டான் பிரசன்னா.

"இல்லை மாமா. இதுக்கான பதில் எனக்குத் தெரியாது. இன்னைக்கு... இதுக்கான பதிலை நான் எனக்குள்ளேயே தேடித்தேடி சோர்ந்து போயிட்டேன். உங்களுக்காவது இதற்கான பதில் தெரியுமா மாமா?" சொல்லிட்டு கேட்ட மஞ்சரியின் கண்களில் தெரிந்த வேதனையைப் பிரசன்னாவினால் தாள முடியவில்லை.

"முட்டாளா மஞ்சரி நீ? நான் கேட்ட கேள்வி என்ன? நீ கேட்கிற கேள்வி என்ன? இந்த இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கு மாமா. இந்த ரெண்டு கேள்வியுமே என் மனதை இரண்டு விதத்தில் காயப்படுத்துது?"

"மஞ்சரி... நான்..."

"வேண்டாம் மாமா. நீங்க இப்ப எதுவுமே பேச வேண்டாம். நான் கேட்ட கேள்விக்கான தெளிவான பதில் என்னிக்கு உங்களுக்குத் தெரியுதோ அன்னிக்குத் தெளிவான மனதுடன் நீங்க என்கிட்ட பதில் சொல்லுங்க. அதன் பிறகு உங்களுடைய அத்தனை கேள்விகளுக்குமான பதிலை நான் சொல்றேன் அதுவரை நாம கொஞ்சம் விலகி இருப்போம் மாமா."

திக்பிரமை பிடித்தவனாக பிரசன்னா நின்றுவிட அவனது பதிலை எதிர்பார்க்காமல் தன் உடைகளைப் பெட்டியில் அடுக்கத் தொடங்கிவிட்டாள் மஞ்சரி. அவளைத் தடுக்கும் வகை அறியாதவனாக அறையை விட்டு வெளியேறினான் பிரசன்னா.



# 33

மாலை மயங்கி இருள் சூழ்ந்த நேரத்தில் தன்னிச்சையாக காலும் கையும் காரினைச் செலுத்திக் கொண்டு இருக்க அலையை வெறித்துக் கொண்டிருந்தான் பிரசன்னா. சொன்னபடியே மஞ்சரி தன் தாய் தந்தையுடன் கிளம்பியபோது தன் வீட்டுப் பெரியவர்கள் யாராவது அவளைத் தடுத்து நிறுத்த மாட்டார்களா என்று மனதிற்குள் மிகவும் ஏங்கினான் பிரசன்னா.

ஆனால் மோகனா இருந்த நிலையைக் காண சுந்தரம் கலங்கி நிற்க அவருடன் மஞ்சரி செல்வது அவசியம் என்பதனை உணர்ந்து கொண்ட பெரியவர்கள் யாரும் மஞ்சரியை தடுத்து நிறுத்த முடியவில்லை. மாறாக அவளை கோயம்பத்தூருக்கு அவர்களே வழியனுப்பி வைத்து விட்டார்கள்.

வீட்டின் காம்பவுண்டிற்குள் கார் சென்று நின்று வெகுநேரம் ஆகியும் அதிலிருந்து இறங்க மனமில்லாதவனாக அப்படியே அமர்ந்திருந்தான் பிர[illegible]னா.



அவனது கண்கள் வீட்டின் முன்புறம் இருந்த தோட்டம் முழுவதையும் ஏக்கத்துடன் சுற்றி வந்தது. அன்று ஒருநாள் நைட்டியுடன் தோட்டத்து மலர்களுடன் பேசிக்கொண்டு இருந்த மஞ்சரியின் மாசுமருவற்ற தேவதைத் தோற்றம் இன்று பிரசன்னாவின் கண்களுக்கு வண்ணப்படமாக கண்முன் தோன்றி காட்சியளித்தது. அதேபோன்ற தேவதைத் தோற்றத்துடன் அமைதியான வனப்புடன் தன்னை ரட்சிக்க மஞ்சரி வர மாட்டாளா என்ற ஏக்கம் எழுந்து பிரசன்னாவை முழுமையாக ஆட்டி வைத்தது.

ஒரு பைத்தியக் காரனைப் போல சுற்றியிருக்கும் எதுவும் கவனத்தில் பதியாதவளாக மாடியேறி தன்னறைக்குள் நுழைந்து கதவடைத்தான் பிரசன்னா.

மகனைத் தேடிவந்த வைசாலியிடம் இரவு உணவை மறுத்துவிட்டுப் படுக்கையில் சரிந்தவனை கவலையுடன் பார்த்தாலும் அவனிடம் எதையும் கேட்கும் துணிவு இல்லாதவளாக அறையை விட்டு வெளியேறினாள் வைசாலி.

அன்னை சென்றபிறகு கதவடைத்த பிரசன்னா படுக்கையில் படுக்க மனமற்றவனாக மெதுவாக நடந்து சென்று மஞ்சரியின் உடைகள் இருந்த அலமாரியின் கதவைத் திறந்தான்.

அவன் கதவு திறக்க காத்திருந்ததைப் போல மஞ்சரியின் உடையில் இருந்து எழுந்த நறுமணம் பிரசன்னாவை மென்மையாக சூழ்ந்து கொண்டது. கண்மூடி மூச்சை நன்றாக உள்ளிழுத்து அந்த நறுமணத்தை மனம்

முழுவதுமாக நிறைத்துக் கொண்ட பிரசன்னாவிற்கு அப்பொழுதே மஞ்சரியைத் தன்னுடன் இழுத்து அணைத்துக் கொள்ளும் வேகம் தோன்றியது. மனைவியின் அருகாமைக்காக ஏங்கிய தன் ஆண்மையை அடக்கும் வகை தெரியாமல் பித்து பிடித்தவன் போல முகத்தை மூடி கட்டிலில் அமர்ந்தவனின் அருகில் இருந்த செல்போன் பிரசன்னாவின் கண்ணில் பட அதை எடுத்து அவனது கை தானாக தன் மனைவியின் எண்களைத் தட்டியது.

மறுமுனையில் ஒரு ரிங் போவதற்குள்ளாக அவனது போனிற்காக காத்திருந்தவளைப் போல போனை ஆன் செய்தாள் மஞ்சரி. அவளது வேகம் ஒரு வகையில் மனதிற்கு ஆறுதல் தர மௌனமாக செல்லைக் காதில் வைத்தான் பிரசன்னா.

''ஹலோ... மாமா... மாமா... நீங்கதானே... ஹலோ? ஹலோ?'' ஒரு நிமிடத்திற்குள் ஆயிரம் வார்த்தைகள் பேசிய மஞ்சரியின் அன்பு பிரசன்னாவின் கண்களைக் கலங்க வைத்தது.

''நான் தான் மஞ்சரி. நல்லா இருக்கியா?'' இந்த இரண்டு வார்த்தைகளைக் கேட்பதற்குள் துக்கம் தொண்டையை அடைக்க குரல் கம்மியது பிரசன்னாவிற்கு.

கணவனின் வார்த்தைகளைக் கேட்ட மஞ்சரி ஒரு நிமிடம் எதுவும் பேசத் தோன்றாதவளாக அமைதியுடன் இருக்க பதறி விட்டான் பிரசன்னா.

''மஞ்சரி... ஹலோ... லைனில்தான இருக்கிற? உனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே? மஞ்சரி...''



''மாமா... நீங்க இங்க வர்றீங்களா?'' மஞ்சரியின் குரலில் தெரிந்த ஏக்கம் பிரசன்னாவின் மனதில் இன்ப அலைகளைத் தோற்றுவித்தது.

''மஞ்சரி!!!''

''வர்றீங்களா மாமா?''

முதன்முறையாக ஒரு மனைவியாக மஞ்சரி பிரசன்னாவிடம் கேட்கும் வேண்டுகோள். அவளது வேண்டுகோளை உடனே நிறைவேற்ற துடித்த மனதுடன் எழுந்தான் பிரசன்னா.

''வருகிறேன் மஞ்சரி...'' அடுத்த நொடி பிரசன்னா தன் காரில் இருக்க அந்நேரத்தில் தன் மகன் எங்கு செல்கிறானோ என்ற பரிதவிப்புடன் அவனைத் தடுக்கப் போன வைசாலியை அழைத்தது பட்டம்மாளின் குரல்.

''அவனைப் போக விடு வைசாலி. உன் மகன் இப்ப தன்னோட வாழ்க்கையைத் தேடிப் போறான். போய் அதிலும் அவன் ஜெயிச்சுட்டு வரணும்னு கடவுள்கிட்ட வேண்டிக்க'' மாமியார் கூறியதைக் கேட்ட வைசாலி நிம்மதியான புன்னகையுடன் பூஜையறைக்குள் நுழைந்தாள்.

அந்த ராத்திரி நேரத்தில் கதவைத் தட்டுகிறோம் என்ற உணர்வுகூட இல்லாதவனாக காலிங்பெல்லை பிரசன்னா அழுத்திய அடுத்த நொடி கதவு திறந்து அவன் முன் நின்றாள் மஞ்சரி.

ஒரு மாத காலத்திற்குள் உடல் மெலிந்து முகம் பொலிவிழந்து கண்களில் சோர்வுடன் நின்றிருந்த

மஞ்சரியைக் கண்டவுடன் பரிதவிப்பில் துடித்து விட்டான் பிரசன்னா.

"மஞ்சரி... நீ ஏன்..." கேள்வியை முடிக்கும் முன்பாக அவளை இழுத்து தன் மார்புடன் அணைத்துக் கொண்டவனின் அணைப்பில் மெல்லிய விசும்பலுடன் அடங்கிக் கொண்டாள் மஞ்சரி.

"நீ வா முதலில். இது என்ன சின்னப் பிள்ளைபோல? நீ எவ்வளவு புத்திசாலின்னு நினைச்சேன்... ஆனா நீ" மனைவிக்கு ஆறுதலாக கூறிக்கொண்டே அவளை தங்கள் அறைக்குள் அழைத்துச் சென்று கதவடைத்த பிரசன்னாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் மஞ்சரியின் உச்சியை நனைக்க கணவனை நிமிர்ந்து பார்த்தாள் மஞ்சரி.

"மாமா!!"

"மாமாதான் மஞ்சரி. உன்னோட மாமா. இனி உனக்கு மட்டுமே சொந்தமான மாமா..." பிரசன்னாவின் இதழ்கள் மஞ்சரியின் உச்சந்தலையில் தொடங்கி முகம் முழுவதும் முத்த மழை பொழிய அவனை ஆவலுடன் ஏற்றுக் கொண்டாள் மஞ்சரி.

"நானும் உங்க மஞ்சரிதான் மாமா. உங்களுக்கு மட்டுமே சொந்தமான மஞ்சரி..."

"எனக்கு நீ இதை சொல்ல வேண்டாம் மஞ்சரி. என் மஞ்சரி எப்படிப்பட்டவள் என்பதை என் மனம் புரிந்து கொண்டுவிட்டது மஞ்சரி... ஆனால் மனம் மட்டும் புரிந்து கொண்டால் போதுமா... நாமும்..." பிரசன்னாவின் வார்த்தைகள் முழுமை பெறுவதற்குள் அவனது மார்பில் அடைக்கலமாகி விட்டாள் மஞ்சரி



தன்னிடம் அடைக்கலமாகியவளிடம் தானும் அடைக்கலம் புகுந்த பிரசன்னா அவளை கட்டிலில் சரித்துப் படர்ந்தான். கணவனின் அத்தனை கட்டளைகளையும் மறுக்காமல் நிறைவேற்றிய மனைவியிடம் அனைத்தையும் கேட்டுப் பாதியும் கேட்காமல் மீதியையும் அடைந்து கொண்ட பிரசன்னா அதிகாலையில் தன் தேவைகளை முடித்துக் கொண்ட அயர்வுடன் கண்மூடி அவனது மார்பில் உரிமையுடன் தலை பதித்து உறங்கத் தொடங்கினாள் மஞ்சரி.

காபியின் மணம் மூக்கைத் துளைக்க கண்களைத் திறக்க விருப்பம் இல்லாமல் கண்திறந்த பிரசன்னாவின் முன் காபிக் கோப்பையை நீட்டினான் பிரசன்னா.

தலைக்குக் குளித்து தலைமுடியை தளர்வாக விட்டு அதன் நுனியில் சிறு கொண்டையிட்டு அரக்குச் சிவப்பு மென்பட்டுச் சேலையில் செம்பவளப்பாவையாக முகம் சிவக்க நின்று இருந்த மஞ்சரியின் அழகு பிரசன்னாவை சுண்டி இழுத்தது.

"இப்படித் தள்ளி நின்று கொடுத்தால் நான் எப்படி காபி குடிக்கிறதாம்? கொஞ்சம் பக்கத்தில் உட்கார்ந்தால் உன் மடியினில் சாய்ந்துக்கிட்டே காபி குடிப்பேனில்ல... அதான் நல்லாயிருக்கும்" கன்னம் சிவந்தாலும் கணவனின் பேச்சைத் தட்டாமல் அவன் அருகில் அமர்ந்த மஞ்சரியின் கன்னத்தில் ஆசையுடன் முத்தம் இட்டான் பிரசன்னா.

"ஐ லவ் யூடி செல்லம்..." கணவனின் தலையை செல்லமாக கலை[illegible]மஞ்சரி அவன் நெற்றியில் சிறு

முத்தம் கொடுக்க கிறக்கத்துடன் கண்கள் மூடிக் கொண்டான் பிரசன்னா.

''மாமா... சாம்சனை வரச் சொல்லட்டுமா? அவர் எனக்கு அப்பாவைப் போன்றவர். நான் மிகவும் மதிக்கும் ஒரு நல்ல மனிதர். நீங்க அவரை மீட் பண்ணனும்னு நான் ஆசைப்படறேன்...'' மெல்லிய குரலில் தயக்கத் துடன் கூறியவளை இழுத்து தன் கைவளைவில் இறுக்கிக் கொண்டான் பிரசன்னா.

''வரச்சொல்லு மஞ்சரி. நானும் அவரை மீட் பண்ண ஆவலாத்தான் இருக்கேன். ஆனா பழைய எண்ணத் தோட இல்லை. என் மஞ்சரி இவ்வளவு மரியாதை வைத்திருக்கும் நல்லவரைப் பார்க்கணும்கிற ஆசை யோட சொல்றேன்.''

பிரசன்னாவைப் பார்த்துப் பெருமையுடன் புன்ன கைத்த மஞ்சரியை சரித்து இரவில் விட்ட இடத்தில் இருந்த தன் வேலையை பிரசன்னா தொடர ஆரம்பிக்க கணவனின் வேகத்திற்கு வெட்கத்துடன் இணைந்து கொடுக்க ஆரம்பித்தாள் மஞ்சரி.

இருவரையும் சுற்றி இதமான தென்றலை படரவிட்ட காமதேவன் தன் வேலை முடிந்த திருப்தியுடன் புன்ன கைத்து விலகிச் சென்றான்.